விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 07 சனிக்கிழமை (23.07.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 216

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இலங்கைக்கான உதவிகளை நிறுத்த அமெ.வெளிவிவகாரக்குழு தீர்மானம்

### அமெரிக்காவின் தீர்மானம் அதன் ஜனநாயகக் கொள்கைக்கு முரண் அமைச்சர் ஹெகலிய




(கொழும்பு)

இலங்கையின் உள்விவகாரங்கள் தொடர்பாக அமெரிக்க அரசாங்கம் பிறப்பிக்கும் எந்த உத்தரவும் அமெரிக்காவினால் முன் மொழியப்படும் ஜனநாயகக் கொள்கைகளுக்கு முரணானது என இலங்கை அரசாங்கம் நேற்று கூறியுள்ளது.

2009ஆம் ஆண்டு யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின் போதான இரத்தக் களறிகள் (20ஆம் பக்கம் பார்க்க)

### நிலைமைகள் அவதானிக்கப்படுமாம்



(நியூயோர்க்)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக பொறுப்புக் கூறுவதற்கு சுயாதீனமான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் வரை, இலங்கைக்கான உதவிகள் அனைத்தையும் நிறுத்த வேண்டும் என அமெரிக்க காங்கிரஸின் வெளிவிவகாரக்குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

### வாக்களிப்பு நேரம்

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறும் உள்ளூராட்சி சபைக்கான தேர்தலில் காலை 7.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை வாக்காளர்கள் தத்தம் வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க முடியும் என தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதேநேரம் வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் தத்தம் தபாலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் வாக்காளர் அட்டை இல்லாதவர்கள் தங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தி வாக்களிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## உள்ளூராட்சி சபைத் தேர்தல் இன்று பாதுகாப்பு ; கண்காணிப்பு தீவிரம்

### முடிவு இன்று இரவு வெளிவரத் தொடங்கும்

(யாழ்ப்பாணம்)

நாடுதழுவிய உள்ளூராட்சி மன்றங்களில் 65 சபைகளுக்கான தேர்தல் இன்று நடைபெறுகின்றது. இதற்கான ஏற்பாடுகள் அனைத் தும் பூர்த்தியாகியுள்ளதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வட பகுதியில் யாழ்.மாவட்டத்தில் 13 பிரதேச சபைகளுக்கும், மூன்று நகர சபைகளுக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று பிரதேச சபைகளுக்கும் முல்லைத்தீவில் துணுக்காய் பிரதேச சபைக்கும் தேர்தல் நடைபெறுகின்றது.

தேர்தல்பாதுகாப்பு கடமையில்பொலிஸார் அதிகளவில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதே நேரம் பொது அமைப்புகள் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. இதற்காக தேர்தல் கண்காணிப்பு பணியாளர்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கை இராணுவத்திற்குப் பயிற்சி குன்னூரில் எதிர்ப்பு போராட்டம்

(சென்னை)

இலங்கை இராணுவத்தினருக்கு நீலகிரி மாவட்டம், ஊட்டிக்கு அருகேயுள்ள குன்னூர் இராணுவ பயிற்சி மையத்தில் பயிற்சி அளிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து பெரியார் தி.க., நாம் தமிழர், விடுதலை சிறுத்தைகள் அமைப்பினர் குன்னூரில் போராட்டம் நடத்தினர்.

இதன் போது பெரியார் தி.க., நாம் தமிழர், விடுதலைச் சிறுத்தைகள் ஆகியவற்றைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமானோர் கைதாகியுள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, வெலிங்டன் இந்திய இராணுவ பயிற்சிக் கழகத்தில் இலங்கை படையினர் 25 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்ட செய்தி நேற்று காலை வெளியானது. இதனை எதிர்த்து பெரியார் திராவிடக் கழகம், நாம் தமிழர் கட்சி, விடுதலைச் (20ஆம் பக்கம் பார்க்க)

## 25 ஆயிரம் பொலிஸார் தேர்தல் கடமையில்

### தேவையாயின் இராணுவமும் அழைக்கப்படும்

(கொழும்பு)

நடைபெறவுள்ள 65 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை முன்னிட்டு 25 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தேர்தல் நடைபெறவுள்ள சகல வாக்குச் சாவடிகளினதும் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் பாதுகாப்பு கடமைகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை 6 மணி தொடக்கம் தெரிவத்தாட்சி அதிகாரி அலுவலகங்களில் இருந்து வாக்குச் சாவடிகளுக்கு வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்படும் வரையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையாளரின் கோரிக்கைக்கு அமைய பொலிஸ்மா அதிபரின் பணிப்புரையின் பேரில் (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்கள் மறுவாழ்வு பெறுவதை அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும்

### ஜனாதிபதி மகிந்தவுக்கு கடிதம்

(சென்னை)

முகாம்களில் தங்கியுள்ள தமிழர்களை அவர்களின் சொந்த இடங்களுக்கு விரைவில் திரும்பிச் செல்வதற்கு அனுமதிக்க வேண்டும்.

அவர்கள் தமது சொந்த இடங்களில் மறுவாழ்வு பெறுவதை இலங்கை அரசு உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா எழுதிய கடிதம் இந்தியாவுக்கான இலங்கை தூதர் பிரசாத் காரியவசத்திடம் கையளிக்கப்பட்டது. அத்துடன் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்கள் உடனடியாக தடுக்கப்பட வேண்டும் எனவும் முதல்வர் கேட்டுக்கொண்டுள்ளார். பாக் ஜலசந்தியில் மீன் பிடிப்பில் ஈடுபடும் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் அவ்வப்போது தாக்கப்படுவது மிகவும் கவலையளிப்பதாக உள்ளது.

கடந்த இரண்டு மாதங்களில் மூன்று முறை தமிழக மீனவர்கள் சிறை பிடிக்கப்பட்ட சம்பவங்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

உலக தரம் வாய்ந்த
டைல்களை யாழ் நகரில்
நம்பிக்கையுடன் பெற்றுகொள்ள
நவீன் செரமிக்
Naveen Ceramic
#212, பலாலி வீதி, யாழ்ப்பாணம் 021 222 0033 / 021 222 0044
#5. ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் 0212224777 / 0212224888
Metro Engineering (Pvt) Ltd

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சிவபார்வதி ஜோதிட நிலையம்

## பண்டித்-மஞ்சுநாத சுவாமி

**தொ.பே. இல: 077 8949044**

அன்பானவர்களே!

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சுவாமி அவர்கள் வம்சாவளியாக காளி அம்மன் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில், வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம் போன்ற விடயங்களையும், கணவன்-மனைவி ஒற்றுமையின்மை, கோர்ட் வழக்கு, உடல் நலமின்மை போன்றவற்றிற்கு பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல், வெளியூர் பயணங்கள், கல்வி உத்தியோகம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், வாஸ்து சாஸ்திரம், எதிரிகள் கண்திருஷ்டி போன்ற எல்லாவித பிரச்சினைகளையும் எதிர்கால பலாபலன்களையும் தெரிவிப்பார்.

**சண்ஜெய உணவகம் (மேல்மாடி)**

**414, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

**(HNB வங்கி அருகில், யாழ். பஸ் நிலையம் முன்பாக)**

**நேரம்:- காலை 7.00 மணி முதல் மாலை 7.30 மணி வரை**

(5508) **கட்டணம் ரூபா 101/-**


# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஆறுமுகம்-கனகம்மா



வேலணையை பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் கனகம்மா அவர்கள் 22.07.2011 வெள்ளிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்

கு.செல்வராணி (மகள்)

(குலம் கிறீம் ஹவுஸ் உரிமையாளர்)

மானிப்பாய்.

ஆலடிச் சந்தி,

மானிப்பாய்.

(சி-3830)

# தம்பிராஜா சிவலிங்கம்

## (ஓய்வுபெற்ற சிரேஷ்ட தாதி உத்தியோகத்தர், சமாதான நீதவான்)

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தம்பிராஜா சிவலிங்கம் நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராஜா பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வெற்றிவேல் சரஸ்வதி அம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், லோகாம்பிகையின் பாசமிகு கணவரும், சிவதரன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் சங்கானை), கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,

திலகராணி, காலஞ்சென்றவர்களான லலிதராணி, ஜெயராணி ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் யோகேஸ்வரன், தில்லையம்பலம், தாளநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தவச்செல்வி, புஷ்பாயினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், லக்சிகா, ஹரிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (24.07.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு வட்டுக்கோட்டையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் வழுக்கையாறு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்
மனைவி, பிள்ளைகள்.

(சி-3831)

# விளையாட்டு விழா

(சுன்னாகம்)

சுன்னாகம் தெற்கு இளைய தம்பி இராசையா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் சுன்னாகம் முத்தமிழ் மன்றத்தில் நடைபெறும்.

முன்பள்ளியின் முகாமைத்துவக்குழுத் தலைவர் சு.ஸ்ரீகுமரன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் ச.குகநேசன், சிறப்பு விருந்தினராக சுவிற்சர்லாந்து இந்து இளைஞர் மன்ற இணைப்பாளர் ந.ஜெயக்குமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ந)

# வடக்கை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் கண்காணிப்பு- தென்னக்கோன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டு தமது தேர்தல்கள் கண்காணிப்பு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தவுள்ளதாக சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

தேர்தல் நடைபெறும் இன்றைய தினம் சகல வாக்களிப்பு நிலையங்களிலும் தமது ஊழியர்கள் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவர் என அமைப்பின் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் 250 உத்தியோகத்தர்கள் ஈடுபடவுள்ளதாக தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையத்தின் இணைப்பாளர் ரசாங்க ஹரிஸ்சந்ர சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக வட மாகாணத்திலும் தேர்தல் காலத்தில் அதிகளவான சம்பவங்கள் பதிவான வில்கமுவ மற்றும் கடுவெல பிரதேச சபைகளிலும் முக்கிய கவனம் செலுத்தி தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைளை மேற்கொள்ளவுள்ளதாக அவர் மேலும் கூறினார். (ந)

# நாய் துரத்தியதில் வேட்பாளர் மரணம்

(காலி)

தேர்தலுக்கான துண்டுப் பிரசுர விநியோகத்திற்குச் சென்ற வேட்பாளர் ஒருவரை நாய் ஒன்று துரத்தியதில் கீழே தவறி விழுந்த அவர் உயிரிழந்த சம்பவம் ஒன்று காலி அக்மீமன பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் அக்மீமன பிரதேச சபைக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்ட கமல் குமார (வயது 40) என்பவரே உயிரழந்தவராவார்.

குறித்த வீடொன்றுக்கு துண்டுப் பிரசுர விநியோகத்திற்காக சென்ற மேற்படி வேட்பாளரை நாய் துரத்தியதை அடுத்து கீழே விழுந்த அவரது தலையில் பலமாக அடிபட்டமையே மரணத்திற்குக் காரணம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந)

# குழாய்க் கிணற்றிலிருந்து எரிவாயு வெளியேற்றம்!

## சிலாபத்தில் சம்பவம்

(கொழும்பு)

சிலாபம் முன்னேஸ்வரம் பௌத்த விகாரையில தண்ணீருக்காக தோண்டப்பட்ட குழாய்க் கிணற்றிலிருந்து ஒரு வகை எரிவாயு வெளியேறி வருகிறது.

முதலில் குழாய்க் கிணறு தோண்டப்பட்டபோது நீருக்குள் இருந்து ஒருவகை வாயு வெளியேறுவது கண்டுபிடிக்கப்பட்டது. சுலபமாக தீப் பற்றிக் கொள்ளக்கூடியதாக இந்த வாயு இருந்ததுடன் இந்தப் பகுதியில் மற்றுமொரு குழாய்க் கிணறும் தோண்டப்பட்டது. அதிலிருந்தும் இந்த வகையான வாயு வெளியேறியது.

முதலில் மெதேன் வாயு என ஆய்வாளர்கள் குறிப்பிட்டபோதும் பின்னர் அதனை மறுத்துள்ளனர். சுமார் 200 மீற்றர் தொலைவிற்கு குழாய் மூலம் வாயுவைக் கொண்டு சென்று பரிசோதித்த போதும் மிக எளிதாகத் தீப்பற்றிக்கொண்டது.

இப் பகுதியில் மேலும் இரண்டு குழாய்க் கிணறுகளை தோண்டி ஆய்வு செய்யும் பணியில் ஆய்வாளர்கள் ஈடுபட்டுள்ளனர். விசேட குழுவொன்று இந்த ஆய்வில் ஈடுபட்டுள்ளது. (ந)

# இலங்கைக்கு எதிராக வைகோ தலைமையில் டில்லியில் ஆர்ப்பாட்டம்

(டில்லி)

இலங்கை அரசையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் போர்க்குற்ற வாளியாக அறிவிக்கக்கோரி தமிழகத்தில் பல அமைப்புக்கள் போராட்டம் நடத்தி வருகின்றன.

இந்நிலையில் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி டில்லியில் நாடாளுமன்றத்திற்கு எதிரே மதிமுக சார்பில் வைகோ தலைமையில் போராட்டம் நடை பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இப் போராட்டத்திற்கு அகில இந்திய அளவிலான தலைவர்களுக்கு வைகோ அழைப்பு விடுத்துள்ளார்.

சிறந்த பாராளுமன்ற உறுப்பினராக இருந்த வைகோவுக்கு இப்போதும் டில்லியில் எல்லா தலைவர்களிடனும் நல்லுறவு உள்ள நிலையில் இப்போராட்டத்திற்கு அகில இந்திய தேசிய கட்சிகளின் முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொள்வார் கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# சீனாவில் பஸ் தீப்பற்றியது 41 பேர் பரிதாப மரணம்

(பீஜிங்)

சீனாவில் நேற்று பஸ் ஒன்று தீக்கிரையானதால் குறைந்தபட்சம் 41 பேர் பலியானதாக சீன அரசாங்கம் செய்தி வெளியிட்டுள்ளது. இவ் விபத்தில் பஸ் சாரதி உட்பட 06 பேர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்திற்கான காரணம் தெரியவில்லை. இது குறித்த விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இது மிகப் பெரிய தீ விபத்து என்றும் இதில் இறந்தவர்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை என்றும் இறப்பு இன்னும் அதிகரிக்கலாம் என்றும் சீன அரசாங்கத்தினால் நடத்தப்படும் சிசிரிவி செய்தி வெளியிட்டுள்ளது.

சீனாவின் ஹனான் மாகாணத்திலுள்ள ஸின்யாங் நகரின் நெடுஞ்சாலையிலேயே இந்த பஸ் தீக்கிரையாகியுள்ளது. (ந)


## பூக்கள், றோஸ் கன்றுகள் விற்பனை

எமது வேப்பிலை பசளை மருந்தின் மூலம் வெய்யில் காலங்களிலும் இலை கருகாது குருத்து விட்டு பூக்கும் கன்றுகள் தலங்காவல் பிள்ளையார் வீதி, திருநெல்வேலி மேற்கில் எமது தோட்டத்தில் ஒட்டி உண்டாக்கிய றோஸ் கன்றுகள். நல்ல நீர் மட்டும் போதும். மண் எதுவானாலும் பரவாயில்லை. மழையும் தேவையில்லை. வளர்க்கும் முறைகளும் அறிவிக்கப்படும். நம்பிக்கையானவை. ஏமாற்றம் இல்லை. (5527)



## யா/வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் நவோதயா பாடசாலை வயாவிளான்

## அமரர் முருகேசு சின்னத்துரை ஞாபகார்த்த நூலகத் திறப்பு விழா அழைப்பு

**காலம்:- 04.08.2011 வியாழக்கிழமை**

**நேரம் :- மு.ப. 10.00 மணி**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

திரு.சி.இராசதுரையும்,
(பழைய மாணவன்-கனடா)
பாடசாலைச் சமூகமும்.

(5509)

# இன்று ஒரு தகவல்

## புத்தர் தந்த விளக்கம்

ஒருநாள் காலை நேரம்.

சீடர்கள் எல்லோரும் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அப்போது அங்கு அவர்களிடம் பேசுவதற்கு பகவான் புத்தர் வருகிறார்.

புத்தர் வரும்போது கையில் ஒரு துணியை எடுத்துக் கொண்டு வருகிறார். அந்தத் துணி ஒரு சிறிய துணிதான். சாதாரணமாகக் கைக்குட்டை இருப்பதைவிட, புத்தர் கொண்டு வந்த துணி சற்றுப் பெரிதாக இருந்தது.

அவர் வந்து மேடையில் உட்கார்ந்தார்.

புத்தர் எதுவும் பேசவில்லை... பேசாமல் அந்தத் துணியில் முடிச்சு போட ஆரம்பித்தார்.

சீடர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

'என்ன இது? வழக்கமாக புத்தர் பேசுவார்... இப்போது அதற்கு மாறாக வேறு எதையோ செய்து கொண்டிருக்கிறாரே!.. சரி இருக்கட்டும்...' என்று நினைத்துப் பேசாமல் புத்தரையே சீடர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

புத்தர் தலை நிமிரவில்லை... அவர் பாட்டுக்கு முடிச்சுகள் போட்டபடியே அமர்ந்திருந்தார்.

ஐந்து முடிச்சுகள் போட்டதற்குப் பின்னர் புத்தர் தலை நிமிர்ந்து பேச ஆரம்பித்தார்:

"சீடர்களே, இப்போது நான் இந்தத் துணியில் ஐந்து முடிச்சுகள் போட்டிருக்கிறேன்... இதை அவிழ்க்கப் போகிறேன்... அவிழ்ப்பதற்கு முன்னால் உங்களிடம் இரண்டு கேள்விகள் கேட்கப் போகிறேன். முதல் கேள்வி என்னவென்றால்... முதலில் நான் வைத்திருந்த துணியும், முடிச்சுகள் விழுந்த இந்த துணியும் ஒன்றுதானா?" என்று புத்தர் வினவினார்.

உடனே புத்தரின் சீடர்களில் முக்கியமானவரான ஆனந்தர் எழுந்து, "பெருமானே! ஒரு வகையில் எல்லாம் ஒன்றுதான்... முதலில் இருந்ததும் இப்போது இருப்பதும் ஒன்றுதான்... முடிச்சுகள் மட்டும்தான் அதில் வித்தியாசம்! ஒரு சின்ன மாற்றம் ஏற்பட்டிருக்கிறது... அவ்வளவுதான்! முன்னால் இருந்த துணி சுதந்திரமுடையது. முடிச்சு விழுந்ததும் அதன் சுதந்திரம் போய்விட்டது. இப்போது இந்தத் துணி அடிமைப்பட்டுக் கிடக்கிறது!" என்று கூறினார்.

அதற்கு புத்தபிரான், ஆமாம் நீ சொல்வது சரிதான். இது ஒரு வகையில் ஒரே துணிதான். ஆனால் மற்றொரு விதத்தில் வேறுபட்டிருக்கிறது.

"எல்லோரும் இயல்பில் கடவுள்கள்தான். ஆனால் முடிச்சுகள் போட்டுக்கொண்டு... சிக்கல்களில் மாட்டிக்கொண்டு... அடிமைப்பட்டுப் போய்விடுகிறார்கள். நாம் அனைவரும் அடிப்படையில் புத்தர்கள்தான்... ஆனால் இந்த முடிச்சுகள் போன்று மக்கள் தனிமைப்பட்டுப்போய் தனித்தனி உலகங்களைக் சிருஷ்டித்துக் கொண்டு... அவற்றில் சிக்கிக்கொண்டு தனிமைப்பட்டுப் போய்விடுகிறார்கள். இதைத்தான் நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்பினேன்" என்றார்.

சிறிது நேரம் கழித்து புத்தர், இந்த முடிச்சுகளை அவிழ்க்க வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும்? என்று அடுத்த கேள்வியைக் கேட்டார்.

அவர் அந்தக் கேள்வியைக் கேட்டதும் மற்றொரு முக்கிய சீடராக சாரிபுத்திரர் எழுந்து நின்று, "பெருமானே! அதை அவிழ்க்க வேண்டுமென்றால்... நான் தங்களின் அருகில் வருவதற்குத் தாங்கள் என்னை அனுமதிக்க வேண்டும். முடிச்சுகள் எப்படி போடப் பட்டிருக்கின்றன என்று தெரியாத வரையில் அதை அவிழ்ப்பதற்கு வழியில்லை. முடிச்சுப் போட்ட முறை தெரிந்தால் அதை அவிழ்ப்பது சுலபம்! நெருங்கிப் பார்க்காமல் எதுவும் செய்ய முடியாது. நினைவோடு செய்தால் முடிச்சுகள் எளிமையாக விழும். நினைவில்லாமல் விழும் முடிச்சுகள் மிகவும் சிக்கலானவை. சில சமயம் அவை அவிழ்க்கவே முடியாமல் கூட போய்விடக்கூடும்!" என்று தெரிவித்தார்.

புத்தர் நிமிர்ந்து பார்த்து, "நீ சொன்னது சரிதான். அதுதான் வாழ்க்கை, அதுதான் வாழ்க்கையின் சிக்கல்!" என்றார்.

இதன் விளக்கம் என்னவென்றால், "நல்லதோ கெட்டதோ மற்றவர்கள் தந்து நமக்கு வருவதில்லை. நமக்கு ஏற்படும் இன்ப துன்பங்களுக்கு நாமேதான் காரணம்" என்பதுதான்.


ஆமாம், நம்முடைய சிக்கல்களுக்கு நாம்தான் காரணம்; வேறு யாரும் இல்லை.

நம்மை அறியாமல்... விழிப்புணர்ச்சி இல்லாமல் நாம் போட்டிருக்கும் முடிச்சுகளில் சிக்கி... சிக்கலை அவிழ்க்க முடியாமல் நாம் திணறிக்கொண்டிருக்கிறோம். இதுதான் இன்றைக்கு நடந்துகொண்டிருக்கிறது.

எப்போதுதான் நாம் விழித்துக்கொள்ளப் போகிறோமோ தெரியவில்லை.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நல்லூர்க்கந்தனின் மஹோற்சவம் ஓகஸ்ட் 4 ஆம் திகதி ஆரம்பம்



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய மஹோற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இதில் எதிர்வரும் ஓகஸ்ட் 13 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு மஞ்சத்திருவிழாவும் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கார்த்திகை திருவிழாவும் இடம்பெறும்.

எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு சந்தான கோபாலர் உற்சவமும் மறுநாள் வியாழக்கிழமை காலை 7 மணிக்கு தெண்டாயுதபாணி உற்சவமும் மாலை 5 மணிக்கு ஒருமுகத் திருவிழாவும் இடம்பெறும்.

எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறும்.

எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கைலாச வாகனமும் நடைபெறும்.

எதிர்வரும் 24 ஆம் திகதி புதன் கிழமை காலை 7 மணிக்கு கஜவல்லி மஹாவல்லி உற்சவமும் மாலை 5 மணிக்கு வேல் விமானத் திருவிழாவும் இடம்பெறும்.

காலை 7 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு வைரவ சாந்தி இடம்பெறும். (ஸ்ரீ-2)

# மஹோற்சவம்

'காரைநகர் வியாவில்பதி ஆதிஷேத்ரம் திருவருள்மிகு பூரணா புஷ்கலா சமேத ஹரி ஹரபுத்ர ஐயப்ப சுவாமி தேவஸ்தான மஹோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இதில் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.' (ஸ்ரீ)

# இராணுவப் பிடிக்குள் இலங்கைத் தமிழர்கள்

## மலேசிய தூதுக்குழு தெரிவிப்பு

50 மீற்றருக்கு ஒரு ஆயுதமேந்திய இராணுவம் என்ற நிலையிலேயே தமிழர்கள் இராணுவ பிடிக்குள் வாழ்ந்து வருவதாக இலங்கை சென்று திரும்பிய மலேசிய தூதுக்குழுவின் உத்தியோகபூர்வ அறிக்கை தெரிவித்துள்ளது.

போருக்கு பிந்திய இலங்கைத் தீவின் உண்மை நிலவரத்தை கண்டறியும் நோக்கில் மலேசிய தூதுக் குழுவொன்று 5 நாட்கள் பயணமாக கடந்த மாதம் இலங்கைக்கு சென்று வந்திருந்தது.

மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.மனோகரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஜொகாரி, செனட் சபை உறுப்பினர் எஸ். இராமகிருஸ்ணன் மற்றும் அரசசார்பற்ற அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் இத் தூதுக்குழுவில் உள்ளடங்கியிருந்தனர். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 20 |
| உருளைக்கிழங்கு | 85 | 90 |
| பச்சைமிளகாய் | 70 | 100 |
| தக்காளி | 35 | 40 |
| மரவள்ளிக் கிழங்கு | 50 | 60 |
| கோவா | 50 | 50 |
| கரட் | 40 | 70 |
| பூசணி | 25 | 25 |
| புடோல் | 30 | 40 |
| வாழைக்காய் | 35-40 | 25 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 50 | 65 |
| பாகற்காய் | 70 | 90 |
| வெண்டிக்காய் | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | -- | 120 |
| பயற்றங்காய் | 80 | 70 |
| லீக்ஸ் | 60 | 40 |
| பீற்றூட் | 40 | 50 |
| கறிமிளகாய் | 60 | 60 |
| முருங்கைக்காய் | 50 | 140 |
| போஞ்சி | 110 | 100 |
| கத்தரிதம்புள்ள | 20 | 12 |
| கீரை - 1 பிடி | 10 | 15 |
| தேசிக்காய் | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 25-40 | 35 |

# இராசி பலன்

**23.07.2011**
**(ஆடி 07, சனிக்கிழமை)**
**சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு**
**அட்டமி முன்னிரவு 10.50 மணிவரை**
**அச்சுவினி பின்னிரவு 01.06 மணிவரை**
**இராகுகாலம் 9.02-10.32 மணிவரை**
**சுபநேரம் 3.02-4.32 மணிவரை**

**மேடம்** நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்குபடுத்திக் கொள்வீர்கள், திட்டமிட்ட காரிய மொன்றில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம்.

**இடபம்** வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும், குல தெய்வ வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள், பிரியமான சிலருக்காக ஒரு தொகையைச் செலவு செய்யும் சூழல் உருவாகும்.

**மிதுனம்** விலை உயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரும், பணவரவு எதிர்பார்த்தபடியே வந்து சேரும், உறவினர் வருகையுண்டு, கௌரவமான நாள்.

**கடகம்** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், கண்ணியமான ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், பயணத்தால் பணவரவு கிடைக்கும், தலைமைப் பொறுப்புக்கள் வந்து சேரும்.

**சிங்கம்** சாமர்த்தியமான பேச்சுக்களால் சாதனை படைக்கும் நாள், மறைமுகப் போட்டிகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படும், நண்பர்கள் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி** கவலைகள் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், போசன சுகமுண்டு, பொதுநல ஈடுபாட்டில் அதிருப்தியும் ஏற்படலாம்.

**துலாம்** சென்ற இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும், குடும்பத்தில் அந்நியோன்யம் கூடும், மாற்றினதவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும், எதிரிகள் விலகுவர், தடைப்பட்ட காரியம் கைகூடும், ஆரோக்கியம் சீராகும், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரும்.

**தனுசு** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறும் நாள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், புத்தி சாதுரியமாகச் செயற்பட்டு பொருள் வரவை பெருக்கிக் கொள்வீர்கள்.

**மகரம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வர வேண்டிய வருவாய்கள் வந்து சேரலாம், தாய் வழி உறவினரால் நன்மையுண்டு, சுப செலவுகள் ஏற்படலாம்.

**கும்பம்** பொன்னான நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், தன்னம்பிக்கை அதிகரிக்கும், மூத்த சகோதரர் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவார்.

**மீனம்** பணப் புழக்கம் அதிகரிக்கும், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும், பொது நல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், செலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

வளவன்

# பாழடைந்த வீட்டிற்கு அருகாமையிலிருந்து குடும்பஸ்தரின் சடலம் நேற்று மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.கைலாசப்பிள்ளையார் கோவி லுக்கு அருகாமையிலுள்ள பாழடைந்த வீட்டின் வேலியோரத்திலிருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை 9 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் யாழ்ப்பாணம் மவுணகாமன் வீதி குருநகரைச் சேர்ந்த சில்வெஸ்திரி யேசுதாஸன் (வயது -68) என இனங்காணப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டுள்ள நபர் ஏழு பிள்ளைகளின் தந்தை எனவும் தெரிவிக்கப்படுகின்றது,

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவது நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் கள்ளுத்தவறணைக்கு செல்வதாக கூறிவிட்டு வீட்டிலிருந்து கிளம்பியவர் இரவு வரையும் வீடு திரும்பவில்லை.

வீடுதிரும்பாததையிட்டு உறவினர்கள் தேடியபோது அவர் தொடர்பாக தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை.

மறுநாள் காலை 8 மணியளவில் அடிகாயங்களுக்குள்ளான நிலையில் அவரது சடலம் மேற்படி இடத்தில் சடலமாக கிடப்பதாக உறவினர்களுக்கு தகவல் கிட்டியது.இதனையடுத்து உறவினர்கள் சடலம் இருந்த இடத்திற்கு விரைந்து சென்று பார்த்த போது மேற்படி நபர் அடையாளம் காணப்பட்டார்.

அத்தோடு அவர் கையில் அணிந்திருந்த மோதிரம் களவாடப்பட்டுள்ளதோடு மதுபானப் போத்தல்கள் சடலத்திற்கு அருகாமையில் போடப்பட்டும் இருந்தது.

இவர் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-6)

# சமுர்த்தி சிப்தொற புலமைப்பரிசிலுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர் விபரம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் இவ்வாண்டு சமுர்த்தி சிப்தொற கல்விப் புலமைப்பரிசில் பெறும் மாணவர்களின் பெயர் விபரம் பருத்தித்துறை பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாணவர்களின் விபரம் வருமாறு,

வை.கோபிநாத் (யா/ஹாட்லிக் கல்லூரி), ஞா.சுதர்சினி (யா/வட இந்து மகளிர் கல்லூரி),சி.தினேஜ் (யா/ஹாட்லிக் கல்லூரி), வ.மோகன்ராஜ் (யா/ஹாட்லிக் கல்லூரி), மு. அர்ச்சனா(யா/வட இந்து மகளிர் கல்லூரி), வி.பவிதா (யா/மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை), ஜீ.பிரசாத் (யா/ஹாட்லிக் கல்லூரி), தே.சசிகலா (யா/மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை),சி.சிந்துஜா (யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), ம.அனுதர்சன் (யா/ஹாட்லிக் கல்லூரி),

ச.நிலாஜினி (யா/உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி),த.தர்மினி(யா/வட இந்து மகளிர் கல்லூரி), ஜெ.ஜெனிஷா(யா/வட இந்து மகளிர் கல்லூரி),செ.கோகுலன்(யா/ஹாட்லிக் கல்லூரி), சி. சிந்துஜா(யா/ஹாட்லிக் கல்லூரி),இ.சிவதர்சன்(யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), ஜெ.குமரன்(யா/ஹாட்லிக் கல்லூரி), ந.ரமணன்(யா/ஹாட்லிக் கல்லூரி), கே.கிருசாந் (யா/ஹாட்லிக் கல்லூரி), பி.திவ்யா(யா/வல்வை மகளிர் வித்தியாலயம்).

(ஸ்ரீ)

# தொழிற்பயிற்சி அதிகார சபையின் இலவச பயிற்சிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டு வேலைவாய்ப்பினை முதன்மை நோக்கமாகவும்,உள் நாட்டு தொழிலாளர்களை உரு வாக்குமுகமாகவும் ,இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை முதன் முதலாக யாழ்ப்பாண மாவட்டத்தில் அரசாங்க சான்றிதழுடன் கூடிய இலவச தொழிற் பயிற்சி ஒன்றை நடத்தவுள்ளது.

ஹோட்டல் முகாமைத்துவம், ஹோட்டல் மேற்பார்வை ,உபசர ணையாளர்கள் ஆகிய கற்கை நெறிகளை 12 நாட்கள் இலவச மாக பயிற்றுவித்து சான்றிதழை வழங்கவுள்ளது.

இதில் ஒவ்வொரு கற்கை நெறிக்கும் தலா 50 மாணவர்கள் இணைத்துக்கொள்ளப் படவுள்ளனர்.

மேற்படி கற்கை நெறிகளில் இணைய விரும்புவோர் தமது முகவரி,தொலைபேசி இலக்கத் துடன் கூடிய சுயவிபரக் கோவையை மாவட்ட பணிமனை ,இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை, 375,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பா ணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 31 ம் திகதிக்கு முன்னர் அனுப்பிக்கு வைக் குமாறு யாழ்ப்பாண இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை மாவட்ட இணைப்பாளர் இரா அகிலன் கேட்டுக்கொள்கின்றார். (ச)

# பாலத்தை புனரமைத்து தருமாறு கோரிக்கை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை-இலந்தகுளம் வீதியில் உள்ள பாலம்புனரமைப்பு வேலைகள் 3 மாதத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது.

ஆயினும் இப்பாலப்புனரமைப்பு பணிகள் மந்தகதியில் நடைபெற்று வருகின்றன.

இதனால் அப்பகுதி மக்கள் இப்பாலத்தைப் பயன்படுத்த முடியாதுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர். பாலத்தைப் புனரமைக்காமையால் வீதியையும் பயன்படுத்த முடியாதுள்ளது.இதற்காக மாற்றுப் பாதையை பயன்படுத்த வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளது.

எனவே இப்பாலத்தை புனரமைத்துத் தருவதற்கு உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(ஸ்ரீ-4-51)

# மாவைக்கந்தனின் தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் தேர்த் திருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை காலை 7 மணிக்கு கீரிமலை கண்டகி சமுத்திர தீர்த்தத்தில் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஸ்ரீ-2)




# நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு 24 மணிநேர பொலிஸ் பாதுகாப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு 24 மணி நேரமும் பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

உற்சவ ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ். மாநகரசபை மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் தலைமையில் இடம்பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இம்முறை நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் பொலிஸார் 24 மணி நேரம் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதில் அதிகமாக தமிழ் பொலிஸாரே பணியில் ஈடுபடவுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் குற்றச் செயல்கள் தொடர்பாகவும் பொருட்கள் தவறவிடப்பட்டாலும் முறைப்பாடு செய்வதற்காக இரண்டு தற்காலிக பொலிஸ் நிலையங்கள் இயங்கவுள்ளன.

இவற்றில் ஒன்று யாழ்.மாநகரசபை தீயணைப்பு சேவை நிலையத்திலும் மற்றையது மங்கையற்கரசி வித்தியாலயத்திலும் இயங்கவுள்ளது.

இது தவிர வீதிகளில் போடப்படும் மறியல்களிலும் பொலிஸார் மற்றும் மாநகரசபை காவலாளிகள், தொண்டர்கள் பணியில் உட்படுத்தப்படவுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்த பாதுகாப்பு பணியில் இராணுவம் பயன்படுத்தப்படமாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-6)

# மஹோற்சவம்

(பொலிகண்டி)

சமரபாகு-சல்லியவத்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 30 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு வேட்டைத்திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 7.45 மணிக்கு சப்பறத்திருவிழாவும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை 10.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (ஸ்ரீ-4-48)

# அடையாள அட்டை கண்டெடுப்பு

(இருபாலை)

உரும்பிராய் தெற்கினைச் சேர்ந்த ஸ்ரீஸ் கந்தராசா-லதுஷ்யன் என்பவருடைய 931413902V என்னும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும் அம்மன் கோவிலடி கோண்டாவிலைச் சேர்ந்த பொன்னையா முத்துலிங்கம் என்பவருடைய 0902025410 என்னும் இலக்கமுடைய விசேட அடையாள அட்டையும் கைப்பகை கண்டெடுக்கப்பட்டு வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர் அலுவலக நேரத்தில் வந்து அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (ஸ்ரீ-4-136)








வடமாகாண பாடசாலைகளுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டி வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் முதலாமிடம் பெற்ற யா/பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி அணியின் வீராங்கனைக்கும் இரண்டாமிடம் பெற்ற யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியின் வீராங்கனைக்கும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் வெற்றிக் கேடயத்தையும் சான்றிதழையும் வழங்குவதை படங்களில் காணலாம்.

(படங்கள்:-மல்லாவிச் செய்தியாளர்)

# இலங்கை இராணுவத்திற்கு இந்தியா பயிற்சி

## — நாம் தமிழர் கட்சி மறியல் போராட்டம் —



(கொழும்பு)

நீலகிரி மாவட்டம் ஊட்டியிலுள்ள வெலிங்டன் இராணுவப் பயிற்சிக் கழகத்தில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 25 படையினருக்கு பயிற்சி அளிக்கப்படுவதை கண்டித்தும் அதனை எதிர்த்து நாம் தமிழர் கட்சி மறியல் போராட்டம் நடத்தப்போவதாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக சீமான் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நீலகிரி மாவட்டம் ஊட்டிக்கு அருகே வெலிங்டனில் அமைந்துள்ள இந்திய இராணுவ பயிற்சிக் கழகத்தில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 25 படையினருக்கு பயிற்சியளிப்பதாக உறுதியான செய்திகள் வந்துள்ளது. இந்திய இராணுவம் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கை தமிழர்களை அவமதிப்பதாகும்.

இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரில் நிராயுத பாணியாக இருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் மீது திட்டமிட்டுக் கனரக ஆயுதங்களையும் பயன்படுத்திக் குண்டுகள் வீசியும் விமானத்தைக் கொண்டு தடை செய்யப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தித் தாக்குதல் நடத்தியும் பத்தாயிரக்கணக்கான மக்களை இலங்கை இராணுவம் கொன்று குவித்துள்ளது என்றும் அது கடுமையான போர்க் குற்றம் என்றும் ஐ.நா.வின் நிபுணர் குழு அறிக்கை அளித்துள்ளது.

அதன் அடிப்படையில் உலக நாடுகள் அனைத்தும் இலங்கை அரசுக்கு எதிராக போர்க்குற்ற விசாரணை நடத்த வேண்டும் என்று கோரிவரும் நிலையில் அந்நாட்டுப் படையினருக்கு இந்திய இராணுவம் பயிற்சி அளிக்கிறது.

தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட கடற்பகுதியில் கால் நூற்றாண்டிற்கும் மேலாக தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி 543 மீனவர்களைக் கொன்ற இலங்கை அரசின் படைகளுக்கு பயிற்சி அளிக்க இந்திய இராணுவம் முற்பட்டுள்ளது என்றால் அதற்குப் பொருள் என்ன? மீனவர்களின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் இந்த தேசத்திற்கும் இறையாண்மைக்கும் விடப்பட்ட சவால் அல்லவா? அந்நாட்டு கடற்படையின் நடவடிக்கைகள் நியாயமானது என்று இந்திய அரசும் இராணுவமும் கருதுகின்றனவா? இல்லை இதுவரை சுட்டது சரியில்லை.

எங்களிடம் பயிற்சிப் பெற்றுச் சென்று ஈழத் தமிழினத்தை அழித்தது போல் தமிழக மீனவர்களையும் கொத்துக் கொத்தாக கொன்று குவியுங்கள் என்று பயிற்சியளிக்கிறதா? இப்படி கூப்பிட்டுப் பயிற்சி கொடுப்பது ஏன்? தமிழக மீனவனை சிங்கள கடற்படை அழிப்பதை கண்டு கொள்ளாமல் இராணுவ உறவு பேணும் இந்திய அரசு இதேபோல் இந்தியாவின் நகரங்கள் மீது தொடர்ந்து தாக்குதல் வருவதற்கு காரணமாக அது கருதும் பாகிஸ்தான் இராணுவத்தினருக்கும் இந்திய மண்ணில் பயிற்சி அளிக்குமா?

இலங்கை இராணுவத்தினருக்குப் பயிற்சி கொடுப்பதற்கு என்ன அவசியம் இருக்கிறது? அவர்களுக்கு அயல் நாடாக இருக்கக் கூடியது இந்தியா மட்டும்தான். அப்படியிருக்க அந்நாட்டு இராணுவத்திற்கும் ஒப்பந்தம் போட்டு பயிற்சியளிக்க என்ன அவசியம் உள்ளது?

ஈழத் தமிழினத்தை கொன்று குவித்தது போதாது. எதிர்காலத்திலும் அதற்கு அவசியம் ஏற்படும். அப்போதும் கொன்று குவிக்கத் தயாராகுங்கள் என்பதற்காக இந்திய இராணுவம் பயிற்சியளிக்கிறதா? ஈழத் தமிழினத்தை அழிப்பதற்குத் துணைபோன இந்திய அரசும் இராணுவமும் எதிர்காலத்திலும் அப்படிப்பட்ட நடவடிக்கைகளுக்கு துணை நிற்கும் என்பதற்கான அத்தாட்சியா இந்தப் பயிற்சித் திட்டம்?

இலங்கை அரசின் மீதான போர்க் குற்றச்சாட்டு மீது சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அந்நாட்டிற்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்றும் தமிழ் நாட்டின் சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் தமிழ் மண்ணிலேயே சிங்கள இராணுவத்தினருக்குப் பயிற்சி அளிப்பது என்றால் இது தமிழனை சீண்டிப் பார்க்கும் செயலல்லவா?

இதனை உடனடியாக இந்திய அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும். இல்லையெனில் இந்திய அரசுக்கு எதிரான நாம் தமிழர் கட்சி பெரும் போராட்டத்தில ஈடுபடும். ஈழத் தமிழினப் படுகொலைப் போரைத் தூண்டி விட்டதே மத்திய காங்கிரஸ் அரசுதான் என்பதற்கான ஆதாரங்கள் வெளிப்பட்டுள்ளன.

ஆதார பூர்வமான அந்தக் குற்றச்சாட்டை நிரூபிப்பது போல் அந்நாட்டுடன் நட்புறவு கொண்டாடுகிறது இந்திய அரசு. இது தமிழ் நாட்டில் வாழும் 7 கோடித் தமிழர்களுக்கு விடப்பட்ட சவாலாகும். இதனை நாம் தமிழர் கட்சி நேரடியாக எதிர்கொள்ளும்.

நாம் தமிழர் கட்சித் தொண்டர்கள் வெலிங்டன் இராணுவப் பயிற்சிக் கழகம் முன்பு மறியல் போராட்டத்தில் ஈடுபடுவார்கள். அதனையும் தாண்டி பயிற்சி நீடித்தால் இந்திய அரசு கடும் போராட்டத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்பதை நாம் தமிழர் கட்சி எச்சரிக்கையாகத் தெரிவித்துக் கொள்கிறது. (ஸ்ரீ-4)



மன்னார் மூர்வீதியில் உள்ள பாடசாலை ஒன்றிற்கு அருகாமையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியாருக்குச் சொந்தமான பேருந்து ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இனம் தெரியாதோரினால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மலேரியா மற்றும் டெங்கு குறித்த விழிப்புணர்வு செயலமர்வு

முல்லை. மாவட்ட மலேரியா தடை இயக்கத்தினால் மலேரியா மற்றும் டெங்கு தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு மாங்குளம் பொது வைத்தியசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இச்செயலமர்வு கிளிநொச்சி, முல்லைத்தீவு பிராந்திய மலேரியா தடை இயக்கப் பொறுப்பு வைத்திய அதிகாரி எ.திலீபன் தலைமையில் நடைபெற்றது.

இதில் சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கிராம அபவிருத்திச் சங்க உத்தியோகத்தர்கள், மாங்குள பிரதேச இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அண்மைக்காலங்களில் ஒட்டுசுட்டான், மாங்குளம், கொக்காவில் போன்ற பிரதேசங்களில் ஒரு சில டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எனவே இவ்வாறான நோய்கள் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் முகமாக இவ் விழிப்புணர்வு செயலமர்வு நடைபெற்றுள்ளது.

இக்கருத்தரங்குக்கான நிதியுதவிகளை முல்லை. மாவட்ட சேவாலங்கா நிறுவனம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4-15)

# வடக்கை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கை

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை அடிப்படையாகக் கொண்டு தமது தேர்தல்கள் கண்காணிப்பு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தவுள்ளதாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

தேர்தல் நடைபெறும் இன்றையதினம் சகல வாக்களிப்பு நிலையங்களிலும் தமது ஊழியர்களை கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்துவதற்கு எண்ணியுள்ளதாக அமைப்பின் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியில் தொடர்ந்து சம்பவங்கள் பதிவாகியமை மற்றும் கால அவகாசம் முடிவடைந்த பின்னரும் தேர்தல் பிரசாரங்கள் இடம்பெறுகின்றமை போன்ற விடயங்கள் குறித்து இம்முறை கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் 250 உத்தியோகத்தர்கள் ஈடுபடவுள்ளதாக தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையத்தின் இணைப்பாளர் ரசாங்க ஹரிஸ் சந்திர சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக வடமாகாணத்திலும் தேர்தல் காலத்தில் அதிகளவான சம்பவங்கள் பதிவான வில்கமுவ மற்றும் கடுவெல பிரதேச சபைகளிலும் முக்கிய கவனம் செலுத்தி தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக அவர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2)



# சட்டவிரோதமான முறையில் இந்தியா சென்ற இலங்கையர் கைது

சட்டவிரோதமான முறையில் இந்தியா சென்ற இலங்கையர் ஒருவரை தமிழக பொலிஸார் கைது செய்துள்ளனர். கரையோர பகுதியான தனுஷ்கோடி பிரதேசத்தில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 44 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கடவுச் சீட்டோ அல்லது விசாவோ இன்றி குறித்த நபர் இந்தியாவிற்குள் பிரவேசித்துள்ளார். அதிக வேக படகு மூலம் குறித்த நபர் இலங்கையிலிருந்து தமிழ்நாடு சென்றுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இராமேஸ்வரம் நோக்கி சென்று கொண்டிருந்த போது தமிழக பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளதாகவும் சந்தேக நபர் கியூ பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களிலும் தாம் இந்தியாவிற்கு பல தடவைகள் இவ்வாறு பயணம் செய்துள்ளதாக சந்தேக நபர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவில் இலங்கை அகதிகள் போராட்டம்

## பொலிஸார் கண்ணீர்ப்புகை பிரயோகம்



அவுஸ்திரேலியாவில் கிறிஸ்மஸ் தீவில் மோதலில் ஈடுபட்ட இலங்கை அகதிகள் மீது கண்ணீர்ப் புகை மற்றும் இறப்பர் குண்டு பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக அவுஸ்திரேலிய செய்திகள் தெரிவிக்கின்றன.

அவுஸ்திரேலியா கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை உள்ளிட்ட நாடுகளின் அகதிகளுக்கு இடையில் இந்த மோதல் இடம்பெற்றுள்ளது. 50 அகதிகள் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தை கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரும் நோக்கில் கண்ணீர்ப் புகையும் இறப்பர் தோட்டாக்களும் பயன்படுத்தப்பட்டதாக அவுஸ்திரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அவுஸ்திரேலிய கடற்பரப்பில் கடந்த 24 மணி நேரத்தில் அகதிகளை ஏற்றி வந்த இரு படகுகள் கைப்பற்றப்பட்டுள் ளதாக அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ்போவன் நேற்று முன்தினம் தெரி வித்துள்ளார். நேற்று முன்தினம் 52 பேரை ஏற்றிவந்த அகதிகள் படகு கைப்பற்றப்பட்டதுடன் மாலை 62 பேரை ஏற்றிவந்த மற்றுமொரு படகு கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இவர்களை தீவுப் பகுதிக்கு அனுப்பிவைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மலேசியாவின் குடிவரவுத்துறை அமைச்சர் கிறிஸ்போவன் கடந்த திங்கட்கிழமை அகதிகள் தொடர்பான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டிருக்கும் இந்நிலையிலேயே அகதிகளை ஏற்றிக் கொண்டு இரு படகுகள் அவுஸ்திரேலியாவை நோக்கி சென்றுள்ளன.

இந்த ஒப்பந்தத்தின்படி மலேசியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகள் என உறுதி செய்யப்பட்ட 4 ஆயிரம் அகதிகளை அவுஸ்திரேலியா பொறுப்பேற்பதாகவும் அவுஸ்திரேலியாவை நோக்கி 800 படகுகளில் தஞ்சம் கோரி வந்தவர்களை மலேசியா பொறுப்பேற்கும். (ஸ்ரீ-2)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரினால் (Prosthetics and Orthotics) செயற்கை அவயவங்கள் குறித்த பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சிநெறிக்கான அடிப்படைத் தகைமைகளாக க.பொ.த (சா/த) பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தமிழ் உட்பட இரு அமர்வுகளுக்கு மேற்படாது. 6 திறமைச்சித்திகள் பெற்றிருப்பதோடு க.பொ.த (உ/த) பிரிவில் பௌதிகம் அல்லது உயிரியல் உட்பட 3 திறமைச்சித்திகள் பெற்றிருக்க வேண்டும்.

இப்பயிற்சி நெறியினை பயில விரும்புபவர்களில் விசேடதேவைக்குட்பட்டோருக்கும் பெண்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

எனவே விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் விண்ணப்படிவங்களை பணிப்பாளர் (கல்வி, பயிற்சியும் ஆய்வும்), சுகாதார அமைச்சு (சுவசிரிபாய), 385, வண புத்தேகம விமலவன்ச தேரோமாவத்தை, கொழும்பு -10 என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஒகஸ்ட்மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும். இவ்விண்ணப்பங்களோடு தொடர்பான மேலதிக விபரங்களை அண்மையிலுள்ள சுகாதார வைத்தியப் பணி மனையிலும் பிராந்திய சுகாதார பணிமனையிலும் பார்வையிடலாம் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் இடம் பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப் பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி கிராமசேவையாளர் பிரிவுகளை தவிர்ந்த ஏனைய கிராம சேவகர் பிரிவுகளில் மக்கள் மீள் குடியேற்றப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ. பத்திநாதன் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இப்பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ள குடும்பங்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9 மணிக்கு மீள்குடியேற்ற ஆயத்தங்களுடன் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரிக்கு சமூகமளிக்க வேண்டும் என அவர் அறிவித்துள்ளார். மேலும் மீள் குடிமர்வுக்கு வரும் போது இதுவரை காலமும் தங்கியிருந்த கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத் தில் அப்பகுதி உதவி அரசாங்க அதிபரின் மேலொப்பத்துடனான கடிதத்துடன் வருகை தரவேண்டும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# இலங்கை -இந்தியாவுக்கு இடையில் போதைப் பொருள் கடத்தல் ஆரம்பம்

இலங்கைக்கு போதைப் பொருள் கடத்தல் மீண்டும் தொங்கி உள்ளதாகவும் மன்னார் வளைகுடா தீவுகளை கடத்தல்காரர்கள் தங்குதளமாக பயன்படுத்துகின்றனரா என இந்திய புலனாய்வுத் துறையினர் விசாரணை செய்து வருவதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின் விடுதலைப் புலி அமைப்பினர் இல்லாததால் கடத்தல் முற்றிலும் நின்றுவிட்டது என பாதுகாப்பு பிரிவினர் அரசுக்கு அறிக்கை அனுப்பினர். தற்போது இலங்கைக்கு போதைப் பொருள் கடத்தல் மீண்டும் ஆரம்பமாகி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக புதிய அமைப்புக்கள் உருவாகி இராமநாதபுரம் மாவட்ட கடலோர பகுதி கிராமங்களில் தங்கியுள்ளனர். கடத்தல் பொருட்களை படகு மூலம் தீவுகளில் சேமித்து இலங்கையிலிருந்து சமிக்ஞை கிடைத்தவுடன் கடத்தப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

கடந்த 20 ஆம் திகதி வாலி நோக்கம் பகுதியிலிருந்து இலங்கைக்கு கடத்த இருந்த 36 கிலோ கஞ்சாவை கைப்பற்றியுள்ளனர்.

அதேதினம் இராமேஸ்வர அரிச்சல் முனை பகுதியில் இலங்கையிலிருந்து மர்ம படகு வந்து ஒருவரை இறக்கிவிட்டு திரும்பிச் சென்றுள்ளது.

கஞ்சா கைப்பற்றியுள்ள நிலையில் மர்ம படகு வந்து திரும்பியுள்ளதால் தீவு வழியாக கடத்தல் பொருள் பரிமாற்றம் நடந்திருக்க வாய்ப்புள்ளது என்ற சந்தேகத்தில் புலனாய்வு பிரிவினர் விசாரித்து வருவதாக தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# இடம்பெயர்ந்த மக்களுக்கான பொதுசன மாதாந்த உதவித்தொகை

வடமாகாணத்திலிருந்து இடம் பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களுக்குரிய இந்த வருடத்திற்கான முதல் அரையாண்டிற்கான பொதுசன மாதாந்த உதவித்தொகை அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் வழங்கப்படவுள்ளது.

இந்த வருடத்தின் ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையான முதல் ஆறு மாதங்களுக்கான உதவித் தொகை வழங்கும் நடவடிக்கை ஒகஸ்ட் முதலாம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாக புத்தளம், மன்னார் மாவட்டங்களுக்கான பிராந்திய ஆணையாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் மூன்று கட்டங்களில் இந்த கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இதன் பிரகாரம் புத்தளம் மாவட்டத்தில் வாழ்ந்து வருகின்ற வடபகுதியிலிருந்து இடம்பெயர்ந்த இரண்டாயிரத்து 22 பேர் நன்மையடைவர் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இடம்பெயர்ந்து அநுராதபுரம் மாவட்டத்தில் வாழ்ந்து வருகின்றவர்களுக்கான உதவித் தொகைகள் கனவேல் பொல நிலையத்தின் மூலம் வழங்கப்படவுள்ளதாக ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

(ஸ்ரீ-2)

# கைப்பை மற்றும் தங்கநகைகளை —அபகரிக்கும் கும்பல் கைது—

மோட்டார் சைக்கிள் மூலம் பெண்களின் கைப்பை மற்றும் தங்க நகைகளை அபகரித்துச் செல்லும் கும்பல் ஒன்றின் இரண்டு சந்தேக நபர்களை நீர்கொழும்பு கொச்சிக்கடை பகுதியில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பேலியகொடை விசேட குற்றப்புலனாய்வு பிரிவினரால் இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் இத்தகைய 31 சம்பவங்கள் தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவற்றுள் ஒன்பது சம்பவங்கள் தொடர்பில் சுமார் மூன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்கொழும்பு, கொச்சிக்கடை, தங்கொடுவ, மாரவில, கொஸ்வத்தை, வென்னப்புவ மற்றும் கொடதெனியாவ ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற தங்க நகை கொள்ளை சம்பவங்கள் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

இச்சம்பவங்களுடன் தொடர்புடைய மேலும் மூவரைத் தேடி பொலிஸ் குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த சந்தேகநபர்கள் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என்று பொலிஸ் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

மேல் மாகாணத்தில் வடபகுதிக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் பிரசன்ன நாணயக்காரவின் பணிப்புரையின் பேரில் பேலியகொடை விசேட குற்றப்புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி உபுல் சமரசிங்க உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

மதவாச்சி-மன்னார் பிரதான வீதியின் 27 ஆம் கட்டைக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

39 வயதுடைய அநுராதபுரம் கச்சத்துவ பகுதியைச் சேர்ந்த ஒருவரே சம்பவத்தில் பலியானதாக தெரியவருகிறது.

குறித்த நபர் பயணித்த மோட்டார் சைக்கிள் ஷக்திகம பகுதியில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த நபர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# ஆசிரியர் நியமனம் பெறும் அழகியல் பட்டதாரிகள்

(மட்டக்களப்பு)

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அழகியல் பட்டதாரிகள் 21 பேருக்கு கிழக்கு மாகாண பாடசாலைகளில் நியமனம் வழங்கப்படவுள்ளது.

ஆசிரியர் நியமனம் பெறும் பட்டதாரிகளின் விபரங்களை கிழக்கு மாகாண கல்வியமைச்சு வெளியிட்டுள்ளது.

இவர்களுக்கான நியமனக் கடிதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை அலரிமாளிகையில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் உரியவர்களுக்கு தபால்மூலம் அனுப்பி வைக்கப்படும் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

அவர்களின் பெயர் விபரமும் நியமனம் பெறும் பாடசாலையும் வருமாறு,

என்.சிதுகா -மன்னார்- (மட்/ஆரையம்பதி ஆர்.கே.எம்), வி.கஜைதா -யாழ்ப்பாணம்-(தி/அல்தாரிக் ம.வி),எஸ்.சுதர்சினி- தொண்டைமானாறு-(மூதூர்·துவாரகா வித்தி), யு.புஷ்பலக்சுமி-அளவெட்டி -(கல்குடா வித்தியாலயம்), ரி.கோமதி-அளவெட்டி-(கல்குடா வித்தியாலயம்),என்.எஸ்.புனிதகுமாரி-அல்வாய்-(கல்குடா தமிழ் கலவன் பாடசாலை),எம்.யாழினி-ஆனைக்கோட்டை-(கல்குடா கதிரவேலி),எம்.சர்மினி-சங்கானை-(கல்குடா மகா வித்தி.),ஜே.கேதீஸ்வரி -சுழிபுரம்-(கல்குடா வித்தியாலயம்), கே. தட்சாயினி- ஏழாலை - (கு/வாழைச்சேனை இந்துக் கல்லூரி), எஸ்.கிருஷ்ணவேணி-ஏழாலை-(மூதூர் /ஸ்ரீ சண்பகா வித்தி.),எஸ். பாலகுமார்-இணுவில்-(ப/அம்பிலாந்துறை கலைமகள் ம.வி), ஆர். றோகினி-இணுவில்-(பா/கொக்கட்டிச்சோலை ஆர்.கே.எம்.வி.),பி.சுமதி -இணுவில்-(பா/ மண்டூர் ம.வி),வி.மங்கையர்மணி-கரவெட்டி-(பா/முனைக்காடு விவேகானந்தா), என்.தனசொரூபி-கொக்குவில்-(பா/முனைத்தீவு சக்தி ம.வி),ரி.நந்தினிதேவி-புலோலி-(பா/முதலைக் குடா ம.வி),எஸ்.சர்மிளா-புத்தூர்-(பா/தும்பன்கேணி கண்ணகி வி.),எஸ். சிவரூபி-சண்டிலிப்பாய்-(தி/விபுலாநந்தா வித்தி.), ஏ. ஊர்மிளா-வரணி-(மூதூர் லிங்கபுரம் சரஸ்வதி வித்தி ), ஐ.நிஷாந்தினி-வேலணை-4-(மூதூர் /துவாரகா வித்தி.) (ஸ்ரீ

# கிளிநொச்சி மாவட்டத்தில் 95 வாக்களிப்பு நிலையங்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இன்று நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக 95 வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, பூநகரி,பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச சபைகளில் 187 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இதில் கரைச்சிப் பிரதேசசபையில் 4 கட்சிகளைச் சேர்ந்த 100 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதில் 19 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

பச்சிலைப்பள்ளியில் 4கட்சிகளைச் சேர்ந்த 48 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதில் 9பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

பூநகரிப் பிரதேச சபையில் 3 கட்சிகளைச் சேர்ந்த 39 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதில் 10 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர். மொத்தமாக 187 வேட்பாளர்களில் 38 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 61 ஆயிரத்து 217 பேர் இத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இதில் கரைச்சிப் பிரதேச சபையில் 42 ஆயிரத்து 800 பேரும் பூநகரிப் பிரதேச சபையில் 11 ஆயிரத்து 301 பேரும் பச்சிலைப் பள்ளி பிரதேச சபையில் 7 ஆயிரத்து 116 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-3-6)

# இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் பயிற்சிகள்

இந்தியாவிலுள்ள இராணுவப் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்றுள்ள இலங்கை இராணுவ அதிகாரிகள் குன்னூரிலுள்ள தனியார் விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களது வருகை இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகேயுள்ள வெலிங்டன் எம்.ஆர்.சி.இராணுவப் பயிற்சி மையம் அருகே இராணுவப் பயிற்சிக் கல்லூரி அமைந்துள்ளது.

இக்கல்லூரியில் இந்தியா மட்டுமல்லாமல் பாகிஸ்தான், இலங்கை, ஜப்பான், சீனா எனப் பல நாடுகளைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகள், அவ்வப்போது வந்து சுழற்சி முறையில் பயிற்சி பெற்றுச் செல்வது வழக்கம். இந்நிலையில் இலங்கையைச் சேர்ந்த 25 முக்கிய இராணுவ அதிகாரிகள் நேற்று முன்தினம் குன்னூர் வெலிங்டன் அருகே உள்ள தனியார் விடுதியில் இரகசியமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இராணுவ பயிற்சிக் கல்லூரியில் நடக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்க வந்துள்ளதாகக் கூறப்படுகிறது. என்ன நிகழ்ச்சி என்பது போன்ற விபரங்களைத் தெரிவிக்க அதிகாரிகள் மறுத்துவிட்டனர். இவர்கள் தங்கியுள்ள விடுதியைச்சுற்றி 20இற்கும்மேற்பட்ட பொலிஸார்பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். (ஸ்ரீ-4)

# கோத்தபாயவின் பெயரைப்பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்ட நபர் கைது

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின்பெயரைபயன்படுத்தி இராணுவத்திற்கு அரிசி விநியோகம் செய்வதாகக் கூறி அரிசி வர்த்தகர்களிடம் சுமார் 5 கோடி ரூபா பெறுமதியான அரிசியை மோசடியாக பெற்றுக் கொண்ட நபர் ஒருவரை நுகேகொட பொலிஸார் விசேட விசாரணைப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் மோசடியான முறையில் பெற்றுக்கொண்டதாக கூறப்படும் ஒரு கோடி ரூபா பெறுமதியான 4 வாகனங்களையும் தாம் கைப்பற்றியிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடுவலைப் பிரதேசத்திலுள்ள ஓய்வு பெற்ற இராணுவ மேஜர் ஒருவருக்கு சொந்தமான வீடொன்றில் வைத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சந்தேக நபர் பாதுகாப்பு செயலாளருடன் எடுத்து கொண்ட புகைப்படம் ஒன்றை காட்டி தாம் அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்புகளை கொண்டுள்ள நபர் என தெரிவித்து அரிசி வியாபாரிகளிடம் மோசடி செய்துள்ளதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

பாதுகாப்பு செயலாளரை தான் அங்கு அறிந்துள்ளவர் எனவும் அவர் ஊடாக இராணுவத்திற்கு தேவையான அரிசியை விநியோகித்து வருவதாகவும் வியாபாரிகளிடம் கூறி கோடிக்கணக்கான பெறுமதியான அரிசியை சந்தேக நபர் பெற்றுக் கொண்டுள்ளார்.

இந்தச் சந்தேக நபரின் மோசடியில் சிக்கிய 11 வர்த்தகர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.வேறு வர்த்தகர்கள் சந்தேக நபரின் மோசடியில் சிக்கியிருந்தால் அது குறித்து நுகேகொட பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறு பொலிஸ் அத்தியட்சகர் தேசபந்து தென்னகோன் கோரிக்கை விடுத்துள்ளார்.

சந்தேகநபர் கதிர்காமம், காலி, அநுராதபுரம், பொலநறுவை உள்ளிட்ட பல பிரதேசங்களில் உள்ள வர்த்தகர்களை இவ்வாறு ஏமாற்றியுள்ளதாக விசாரணைகளில் தெரிவந்துள்ளது. (ஸ்ரீ-2)

# பேஸ்புக்கில் பௌத்தமதம் அவமதிக்கப்படுவது குறித்து பல்வேறு முறைப்பாடுகள்

(கொழும்பு)

பௌத்தத்தை அவமதிக்கும் விடயங்களைக் கொண்ட தனியான சேவைகள் பற்றி பேஸ்புக் பயன்படுத்துவோரிடமிருந்து பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக ஸ்ரீலங்கா கணனி அவசர உதவி அணி நேற்று கூறியுள்ளது.

இருப்பினும் இவ்வாறான கோவைகளை தற்போதைய நிலையில் முடக்க முடியாதென சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் பள்ளியகுரு தெரிவித்தார்.

எனவே, இவ்வாறான முறைப்பாடுகளை பேஸ்புக் பயன்படுத்துபவர்கள் நேரடியாக பேஸ்புக்கிற்கே அனுப்ப வேண்டுமென அவர் கூறினார்.

குறிப்பிட்டதொரு கோவை பற்றி இவ்வாறான முறைப்பாடுகள் கணிசமானளவில் கிடைக்கும் போது இவ்வகையான கோவைகளை பேஸ்புக் செயலிழக்கச் செய்யுமென அவர் தெரிவித்தார்.

இந்த வருடம் 8 மாதங்களில் 650 முறைப்பாடுகள் கிடைத்ததாகவும் இவற்றுள் அநேகமானவை போலிக் கோவைகள், கடவுச் சொற்கள் தொடர்பானவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# வடபகுதி மக்கள் தேர்தல் குறித்து மிகுந்த ஆர்வம்

## கண்காணிப்பாளர்கள் கருத்து

(கொழும்பு)

வடமாகாண மக்கள் கடந்த காலங்களை விடவும் இம்முறை தேர்தல் குறித்து மிக ஆர்வமாக உள்ளார்கள் என்று தேசிய தேர்தல்கள் கண்காணிப்பு நிலையத்தின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி ரசங்க ஹரிச்சந்திர நேற்று முன்தினம் தெரிவித்தார்.


பயங்கரவாதம் முழுமையாக ஒழிக்கப்பட்ட பின்னர் வடபகுதியில் நடைபெறும் முதலாவது தேர்தல் இதுவாகும். அச்சம்-பீதியற்ற சூழ்நிலையில் இத்தேர்தல் நடைபெறுவதன் பயனாகவே வடமக்கள் அதிக ஆர்வமாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

65 உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தலைக் கண்காணிக்கும் பணியில் 250 பேரை ஈடுபடுத்துவதற்கு தமது நிலையம் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத்தெரிவிக்கையில், 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முதல் நாம் தேர்தல் கண்காணிப்புப் பணிகளை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகிறோம். ஒவ்வொரு தேர்தல் கண்காணிப்புப் பணி முடிவுற்றதும் அது தொடர்பான அறிக்கையை தேர்தல் ஆணையாளருக்கு கையளிக்கின்றோம்.

இத்தேர்தலைக் கண்காணிக்கும் பணியில் வடமாகாணத்தில் 5 நடமாடும் வாகனங்களை ஈடுபடுத்தவுள்ளோம். நாம் தேர்தல் கண்காணிப்பு பணியில் வைத்தியர்கள், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள் என மக்களின் அங்கீகாரம் பெற்றவர்களையே ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

கடந்த காலங்களில் வடபகுதியில் உள்ள காவலரண்களில் பாதுகாப்பு படையினரே பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இப்போது காவலரண்களில் பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தேர்தலை நீதியாகவும் நேர்மையாகவும் நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணையாளர் எடுக்கும் நடவடிக்கைகள் வரவேற்புக்குரியது என்றார். (ஸ்ரீ-2)



மீப்பே கல்வி தலைமைத்துவ நிலையத்தில் கடந்த 8 ஆம் திகதி நடைபெற்ற தேசிய மட்ட கணித வினாடிவினா போட்டி கனிஷ்ட பிரிவில் முதலிடம் பெற்ற மாணவர்களான இரகுநாதன் ஆதிரையன் (யாழ்/இந்துக் கல்லூரி),சிவசுந்தரலிங்கம் டனுஜன் (யாழ்/சாவகச்சேரி இந்துக்கல்லூரி), சபாபதிப்பிள்ளை கோபிதன்(யாழ்/ஹாட்லி கல்லூரி), சிவசண்முகமூர்த்தி சிவதர்சன்(யாழ்/ஹாட்லி கல்லூரி),தவேந்திரன் அபிஷேகா(யாழ்/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்),தர்மலிங்கம் பாசுபதன்(யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்)ஆகியோருடன் இசுறுபாய ஹேவவிதாரண, கணிதப்பிரிவு கல்விப் பணியாளர் வி.விஜேயதாச, வடமாகாணக் கல்வித் திணைக்கள கணித உதவிக்கல்விப் பணிப்பாளர் த.முகுந்தன் மற்றும் தென்மராட்சி கல்வி வலய கணித உதவிக்கல்விப் பணிப்பாளர் கதிர்காமநாதன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# சுய வருமானத்தை ஈட்டித்தரும் வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை

15-II



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

***பயன்படுத்திய வாகன ரயர்களில் பயிர்களை வளர்த்தல்***

பயன்படுத்தப்பட்ட வாகன ரயர்களை அழகாக வெட்டி தாமரை போன்ற வடிவில் அதனுள்ளே பயிர்களை வளர்த்திருக்கும் விதம் அனைவரையும் கவரத்தக்கதாக உள்ளது.


இவ்வாறான புதிய முறையிலான எளிமையான அணுகுமுறைகளூடாக பயன்படுத்தப்பட்ட பொருட்களை வேறு விதமான தேவைகளுக்கு பயன்படுத்தலாம் என்பதனை நிரூபித்திருக்கிறார்கள். அதிலும் குடாநாட்டில் நுளம்பு பெருக்கத்திற்கு பயன்படுத்தப்பட்ட ரயர்களில் நீர் தேங்குவது ஒரு காரணமாக இருப்பதனால் இத்தகைய பயன்படுத்திய ரயர்களை பயிர்களை வளர்க்க பயன்படுத்தலாம் என செய்து காட்டியிருப்பது முன்மாதிரியாக உள்ளது.

இன்னொரு வகையில் இவ்வாறான ரயர்களை எரிப்பதை விடுத்து மீளப் பயன்படுத்தும் உத்தி என்பதுவும் இங்கே எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

வீட்டுத் தோட்டங்களில் சிங்கள மக்களது கலை நுணுக்கங்கள் இராணுவத்தினர் மூலமாக இங்கே உள்வாங்கப்பட்டிருப்பதனை இவற்றை நேரில் சென்று பார்ப்பவர்கள் அறிந்து கொள்ள முடியும். இவற்றுடன் இருக்கின்ற வளங்களனைத்தையுமே சிறப்பாக பயன்படுத்தி அழகாகவும் நேர்த்தியாகவும் ஆக்கியிருக்கும் விதம் இவற்றுக்கெல்லாம் காரணமானவர்களை மனந்திறந்து வாழ்த்த வைத்திருக்கின்றது.

**வீட்டுத் தோட்டத்தின் குறிக்கோளை உணர்த்தியிருக்கும் சிறப்பு**

வீட்டுத் தோட்டமென்பது அவரவரது வீட்டைச் சுற்றியிருக்கும் நிலப்பரப்பில் தினமும் தமது வீட்டுக்குத் தேவையான அனைத்து





பயிர்வகைகளையும் பெற்றுக் கொள்வதாகும். இங்கே அவதானிக்க வேண்டிய விடயங்கள் பல. தேவையான மரக்கறி வகைகள், பழ வகைகள், இலைகறி வகைகள், மூலிகைத் தாவரங்கள், அவரைத்தாவரங்கள், அழகுத் தாவரங்கள், கிழங்குப் பயிர்கள் என பலவகைத் தாவரங்களை உள்ளடக்கியிருக்கும். இதன் மூலம் அன்றாடத் தேவையை இவ்வாறான வீட்டுத் தோட்டத்திலேயே பூர்த்தி செய்து கொள்ள முடியும். இவற்றையெல்லாம் செய்து காட்டியிருக்கும் திறனை மனந்திறந்து பாராட்டுதல் தகும்.

வீட்டுத் தோட்டம் உணவைத் தருவதற்காக அமைக்கப்பட்டிருக்கின்றது என பொதுவாக உருவகப்படுத்தப்பட்டாலும்அதனுள்ளே பல செய்திகள் அடங்கியிருக்கின்றன. அவையும் இதனது உள்ளார்ந்த நோக்கங்களாகும். சுத்தமான சுகாதாரமான மரக்கறி, இலைக்கறி மற்றும் பழங்களை பெறுவதற்கான வழியிது. முழுக்க முழுக்க சேதன முறை மூலம் பயிர்களை வளர்த்திருப்பது எமக்கான நஞ்சற்ற உணவை நாமே வளர்த்துப் பெற்றுக் கொள்ள முடியும் என சொல்லிக் காட்டியிருக்கின்றது.

ஆங்காங்கே கூடி வெட்டிப் பேச்சு பேசி காலத்தை வீணாக்குவதை விட அந்த நேரத்தை வீட்டுத் தோட்டத்தில் செலவழித்தால் செலவழித்த நேரமும் பொன்னானதாவதுடன் கணிசமான வருவாயையும் பெற்றுக் கொள்ள முடியும்.

வீட்டுத் தோட்டத்தில் வளரும் பயிர்களிலிருந்து வீட்டுக்கு தேவையானது போக

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

மீதியை விற்பனை செய்யலாம். இது வீட்டுக்கான வருமானமாக மாற்றம் பெற்று விடும்.

சுயவருமானத்தை(Self income) பெற ஒரு வழியிது. அதுவும் அவரவர் வீட்டிலிருந்து பெறக் கூடிய வாய்ப்பு என்றால் மிகையாகாது. குறிப்பாக பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களில் பெண்கள் வெளியிடங்களுக்கு சென்று வேலை செய்வதும் ஆண்களைப் போல கடின வேலை செய்வதும் கடினம். இந்நிலையில் இவர்களுக்காக அவர்களது வீடுகளிலேயே தோட்டமமைத்து கொடுத்திருக்கும் கைங்கரியம் சிறப்புக்குரியது.

வீட்டிலிருக்கும் பெண்கள் மட்டுமல்ல சிறுவர்கள், பெரியோர் என அனைவருமே நேரம் கிடைக்கும் போதெல்லாம் வீட்டுத் தோட்டத்தில் சிறுசிறு வேலைகளை செய்வதற்கும் அன்றாடம் வளர்ந்து வரும் பயிர்களை கண்ணுற்று உள்ளத்தில் எழுச்சி பெறவும் வழியிருக்கின்றதல்லவா? (தொடரும்)

# பொலிஸாருக்கு எதிராக மனித உரிமை மீறல் தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள்

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸாருக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அதிக அளவிலான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் தரப்பின் பிரதான அமைப்பாளர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்றத்தில் இதனை தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் எழுப்பிய வாய்மூல பதில் வழங்கும் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். வடமாகாண சபைக்கான தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என அமெரிக்கா தெரிவித் துள்ளது.

அமெரிக்கா மற்றும் இந்தியாவின் எதிர்பார்ப்பு இதுவாக இருப்பதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டனின் இந்திய விஜயம் தொடர்பில் விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இதனை தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

# சிறை அதிகாரிகளுக்கு எதிரான முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு, சிரேஷ்ட சிறை அதிகாரிகளுக்கு எதிராக செய்யப்பட்ட முறைப்பாடுகளை தற்போது ஆராய்ந்து வருகின்றது.

இலங்கை முழுவதிலுமுள்ள சிறைகளில் காணப்படும் முறைகேடுகள், துர்ச்செயல்களை ஆராய்வதற்கென அண்மைக்காலத்தில் அமைச்சினால் நியமிக்கப்பட்ட விசேட விசாரணைப் பிரிவிடம் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த விசாரணைப் பிரிவு சிரேஷ்ட சிறை அதிகாரிகளின் சுயவிபரக் கோவைகளை முதலில் பார்வையிட்டு வருகின்றது. இவ்வருடம் சிறைகளில் பல உண்ணாவிரதங்கள் இடம்பெற்றன. வவுனியாவிலும் அநுராதபுரத்திலும் கூடுதலாக இடம்பெற்றன.

சிறையிலிருப்போரில் பலர் தம்மை நீதிமன்றில் ஆஜர்படுத்தும்படி அதிகாரிகளிடம் கோரி வருகின்றனர். சிறைச்சாலைகளில் வசதிகள் போதாது எனவும் அவர்கள் முறையிடுகின்றனர்.

விசாரணைப் பிரிவைச் சேர்ந்த பல அணியினர் சிறைகளுக்குச் சென்று துர்ச்செயல்கள் பற்றிய சான்றுகள்,விபரங்களைச் சேகரித்து வருகின்றனர். பல சிறைச்சாலைகளின் சிரேஷ்ட சிறை அதிகாரிகளை இடம்மாற்ற அமைச்சு தீர்மானித்துள்ளது. (ஸ்ரீ-2)

# ரணிலின் நடவடிக்கை பாராட்டுக்குரியது

(கொழும்பு)

எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கை பாராட்டுக்குரியது என அரசாங்கம் புகழாரம் சூட்டியுள்ளது. தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் அரசாங்கத்திற்கும் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளுக்கு ரணில் விக்ரமசிங்க ஆதரவு தெரிவித்துள்ளமை வரவேற்கத்தக்கது என அவைத் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஏனைய கடும் போக்குடைய கட்சிகளைப் போன்று ரணில் விக்ரமசிங்க இந்த பேச்சுவார்த்தைகளுக்கு தடை ஏற்படுத்தவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீண்டகாலமாக நிலவிவரும் பிரச்சினைக்கு தீர்வுகாண ரணில் ஒத்துழைப்பு வழங்கி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

## அரசாங்கம் புகழாரம்

தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் எட்டு சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும் ரணிலுக்கு நன்றி தெரிவித்ததாகவும் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை வன்முறைகள் அற்ற தேர்தல் ஒன்றை நடத்துவது நடைமுறைக்கு சாத்தியமற்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கட்சிகளுக்கு இடையேயும் கட்சிக்கு உள்ளேயும் இவ்வாறன மோதல் சம்பவங்கள் இடம் பெறுவதனை தடுக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு தேர்தல் வன்முறைகள் தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# இராணுவத்தினர் அமைத்த வீடுகள் ஜனாதிபதியால் மக்களுக்கு கையளிப்பு

(கொழும்பு)

வடபகுதி மக்களுக்காக கீரிமலையில் இராணுவத்தினரால் 10 நாட்களில் அமைக்கப்பட்ட 100 வீடுகள் நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் பொது மக்களிடம் கையளிக்கப்பட்டது.


ஒவ்வொன்றும் 3 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறும்தி கொண்ட இந்த வீடுகள் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியை பயன்படுத்தி அமைக்கப்பட்டுள்ளன.

கீரிமலை, சாவகச்சேரி, மானிப்பாய், ஊர்காவற்றுறை மற்றும் காங்கேசன்துறை ஆகிய இடங்களில் யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்கவின் மேற்பார்வையில் இந்த வீடுகள் அமைக்கப்பட்டன. (ஸ்ரீ-2)

# உற்றறி கோட்பாடு

## பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரை

05



பேராசிரியர் சபா ஜெயராசா

### உற்றறிகோட்பாடு, இலக்கியங்களை விளங்கிக்கொள்வதற்குரிய வழிமுறையாதல்

எடுத்துரைப்....

...4. அறிபொருட் பண்புகளை உள்ளடக்கிய கோடல் கதாபாத்திரங்களில் அவை உட்பொதியிடப் பட்டிருக்கும்.

5. குறியீட்டுக் கோடல் - குறியீடுகள் எவ்வாறு இடம் பெற்றுள்ளன என்பதை இது குறிக்கும் கதை மரபும் எடுத்துரைப்பு மரபும் தமிழில் தொன்மையும் தொடர்ச்சியும் கொண்ட செயற்பாடுகளாக இருப்பினும் அமைப்பியற் கண்ணோட்டத்தில் அவற்றை ஆராயும் பொழுது எமது பண்பாடு பற்றியும் எமது ஆக்கமலர்ச்சியின் இயல்புகள் பற்றியுமான புரிதல் மேலும் வளர்ச்சியடையும்.

**உற்றறிகையில் வரலாறு:**

அடுத்து இலக்கிய வரலாறு என்பதற்கு வரலாம். வரலாறு பற்றிய பழைய விளக்க முயற்சிகள் ஒரு புறமிருக்க மிசேல், பூக்கோ போன்றோரால் மாற்று விளக்கங்களும் முன்வைக்கப்படுகின்றன.

மரபு நிலையில், வரலாறு பற்றி பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. அது உறுநேர்வுகளின் (Facts) திரட்டு என்றும் நிகழ்ச்சிகளின் சேர்மானம் என்றும், உலகின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றியும் ஒழுங்கமைந்த விபரணம் என்றும் குறிப்பிடப்படுகின்றது. ஆனால் இதற்கு மாற்றுக் கருத்துக்களும் உண்டு.

மாறுபாடான கருத்தை முன்வைத்தவர்களுள் மிசேல் பூக்கோ முக்கியமானவர். அது அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்கான ஏற்பாடு என்றும், குறிப்பிட்ட காலகட்டங்களில் அதிகாரத்தில் மேலோங்கியோரின் கருத்து வினைப்பாடுகளையே வரலாறு கொண்டுள்ளது என்றும் குறிப்பிடுகின்றார். (Facault, 1986:90) அறிவு என்பது விளக்கத்தின் வழியாக உருவாக்கப்படவில்லை. அறிவைச் சிதைக்கும் செயற்பாட்டையே வரலாறு என்ற அறிவு மேற்கொண்டு வந்துள்ளதாக பூக்கோ குறிப்பிடுகின்றார்.

இலக்கிய வரலாறு பல்வேறு செயற்பாடுகளை ஆற்றுகை செய்கின்றது. அவை:

(1) கடந்தகால இலக்கியங்கள் மீது கவனம் செலுத்துதல்

(2) இலக்கிய ஆக்கங்களையும் ஆசிரியர்களையும் தேர்ந்தெடுத்தல்.


(3) பண்புகளின் அடிப்படையில் இலக்கியங்களை ஒழுங்கமைத்தல்.

(4) இலக்கியம் தொடர்பான எடுத்தியம்பலை உருவாக்குதல்

(5) கடந்தகாலச் சிந்தனைகளை நிகழ்காலத்துக்கு கொண்டு வருதல்.

சமூக வளர்ச்சியும் மாற்றங்களும் இலக்கியங்களிலே புதிய வடிவங்களைத் தோற்றுவித்தலால் கலைகள் சமூக விளைபொருளாகும் என்ற மார்க்சியக் கருத்தியலுக்கு வலுவூட்டுகின்றன. ஆசிரியரின் நோக்கம், சொற்கட்டுமானம், அது ஏற்படுத்தக்கூடிய நுகர்ச்சி விளைவு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கவிதை, சிறுகதை போன்ற இலக்கிய வடிவங்கள் பிரித்தறியப்படுகின்றன. இவ்வடிவங்கள் தமக்குரிய ஒத்த பண்புகளைக் கொண்டிருப்பதுடன் பிறவடிவங்களில் இருந்து பிரித்தறியக் கூடியவாயுமுள்ளன. இவையனைத்தும் மொழி என்ற குறியீடுகளால் சமூக நிலவரங்களை அடியொற்றி ஆக்கப் படுகின்றன.

சமூக நிலவரங்களை அடியொற்றிக் கலை இலக்கியங்களும் அழகியல் நோக்கும் மேல் எழுகின்றன என்பது மார்க்சியத்தின் தரிசனம். அதனை அடியொற்றியும் நிராகரித்தும் பல வாதங்களும், எதிர்வாதங்களும், புதிய வாசிப்புக்களும் மேலெழுந்தன. பொருண்மிய அடிப்படை (Base)



பேராசிரியர் சு.வித்தியானந்தன்

பின்வரும் வினாக்ளை உள்ளடக்கியது.

1. எது உற்பத்தி செய்யப்படுகின்றது.எது ஆக்கம் செய்யப்படுகின்றது.

(2) உற்பத்தியை யார் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர்.

(3) உற்பத்திகள் எங்கு மேற்கொள்ளப்படுகின்றன?

(4) உற்பத்திகள் எவ்வாறு விநியோகிக்கப்படுகின்றன.

(5) உற்பத்தியாலும் விநியோகத்தாலும் ஏற்படும் விளைவுகள் யாவை?

பொருண்மிய உற்பத்திக்கும் இலக்கிய உற்பத்திக்குமுள்ள தொடர்புகள் பற்றிப் பின்வரும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

(தொடரும்)

# செய்தொழிலின் பொருந்தா நிலை உள நோய்க்கு அத்திவாரமிடுகிறது

கனடாவைச் சேர்ந்த ஹான்ஸ் செலி என்ற பிரபல நிபுணர் இதுபற்றிக் கூறுகின்ற போது, "இந்த மன அழுத்தத்தை கட்டுப்படுத்தும் திறன் உடலில் படிந்துள்ள எண்ணெய்ச் சத்துக்கள் சம்பந்தப்பட்டவைகளுக்கே உண்டு என்கிறார். ஒருவருடைய தொழிலினால் அடிக்கடி மனஅழுத்தம் நிம்மதியின்மை, பதற்றம் ஏற்படுமானால் அவர் மிகக் குறுகிய காலத்திலேயே இருதய நோய்க்காளாவார். அவ்வாறில்லாவிடின் கடுமையான தலைவலி, அல்சர், ஆஸ்துமா முதலியவற்றால் பாதிக்கப்படுவர். பொதுவாக விபத்துக்களுக்குப் பலியாகிறவர்களில் இந்த மன நோய் அறிகுறிகள் சம்பந்தப்பட்டவர்களே அதிகமாக உள்ளனர்.

இருதய நோயைக் குணப்படுத்த ஆராய்ச்சிக் கூடங்கள் உலகெங்கும் நிறுவப்பட்டு வருகின்றன. இதயத் தசையைச் சீர்ப்படுத்த முயற்சிகள் நடந்தபோதும் அமெரிக்காவைப் பொறுத்தவரை நடுத்தர வயதினரே மனநோய்க்குப் பலியாகின்றனர் அமெரிக்க ஐக்கியநாடுகளில் இருதய நோயால் பாதிக்கப்பட்டு இறந்தவர்கள் தொகை 7 இலட்சம். இவர்களில் 1இலட்சத்து 75 ஆயிரம் பேர் 65 வயதுக்கு உட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நிர்வாக ரீதியான தொழில் மற்றவற்றைவிட மிகச்சிரமமானது. மிச்சிகன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர், விஞ்ஞானிகள், பொறியியலாளர் ஆகியோரைக்காட்டிலும் நிர்வாகிகளே அதிகளவில் மன நோய்க்கு உள்ளாகின்றனர் என்ற கருத்தைத் தெரிவித்தார்.

> **எல்லை மீறிய பொறுப்புக்களே மனிதர்களை மன நோயாளியாக்கி விடுகின்றன என்கிறார் பிரெஞ்ச்.**

கடந்த இருபது ஆண்டகளாக நடத்திய கணக்கெடுப்பின் படி, நவீன காலத்தில் ஏற்படுகின்ற புதிரான மாரடைப்புக்கு அன்றாட நடைமுறைகளே காரணம் என கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அளவு மீறிய உணவை உட்கொள்ளல், ஒரே இடத்தில் அமர்ந்தபடி வேலை செய்தல், இரத்த அழுத்தம், புகை பிடித்தல், முதலியவையே மாரடைப்பை உண்டாக்குகின்றன!

39முதல் 59 வயது வரையுள்ள சுமார் 3500 பேர்களைப் பரிசோதித்ததில் இருதய நோய்களை இருவகையாகப் பிரிக்கமுடிந்தது. முதல் வகையினர் உத்வேகம், முரட்டுத் தனம், பேராசை, போட்டி மனப்பான்மை, வைராக்கியம், விடா முயற்சி முதலிய குணங்களை உடையவர்கள்.

**கலாநிதி க.கஜவிந்தன்**
**உளவியல் விரிவுரையாளர்,**
**யாழ். பல்கலைக்கழகம்**

இரண்டாவது வகையினர் பொறுப்பின்மை, சோம்பல், சமூகக் கடமைகளை மறத்தல், அக்கறையில்லாத பேச்சு, முதலியவைகளைக் கொண்டவர்களாய் இருக்கின்றனர்.

விசித்திரமான முறையில் முதல் வகையினர் நேரத்திற்கே படுக்கைக்குப்போய் விடுகின்றனர்.

இரண்டாவது வகையினர் தங்களுக்குச் சம்பந்தமில்லாத வகையில் நேரத்தை வீணாக்குகின்றனர். மன நோயால் பாதிக்கப்படுபவர்களில் 70 சதவிகிதத்தினர் முதல் வகைகளைச் சேர்ந்தவர்கள். இவ்வகையினர் மற்றவர்களைக் காட்டிலும் மூன்று மடங்கு நடுத்தர வயதினரே. இவர்களை வித்தியாசப்படுத்துகிற துல்லியமான காரணங்கள் இருதய நிபுணர்களுக்கு தெளிவாகவில்லை. பொதுவாக இரண்டுவகையினரும் பாரம்பரிய தன்மையினாலும் சூழ்நிலைகளாலும் பாதிக்கப்படுகிறார்கள். முதல் வகையினர் முரட்டுத் தனத்திற்கும் கடுமையான உழைப்பிற்கும் உள்ளாகின்றனர். வாழ்க்கை இவர்களுக்கு இச் சூழ்நிலைகளை தாராளமாக வழங்குகிறது. முதல் வகையினருக்கு அவர்கள் எதை அடைய முயற்சிக்கிறார்களோ அது தடைப்பட்டபோது அதுவே மன அழுத்தமாக மாறிவிடுகிறது.

> **தினமும் ஏற்படும் மன அழுத்தம் பாரம்பரியத்தில் இல்லாத சில மன நோய்களுக்கு காரண மாகிறது.**

(முற்றும்)

# ஆடி மாத இராசி பலன்கள்




(அவிட்டம் 3,4ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்)

புதிய திருப்பங்கள் ஏற்படும்.

*நட்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கும்ப இராசி அன்பர்களே!*

உறவு பகை பார்க்காமல் உதவி செய்பவர்கள் நீங்கள். தன்னம்பிக்கை உங்களுக்கு அடிக்கடி குறையலாம். அப்பொழுதெல்லாம் தகுந்தவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

தன்னை பற்றியே அதிகம் சிந்திப்பவர்களும் அதை மற்றவர்களுக்கு எடுத்துச்சொல்வதும் பழக்கமாகயிருக்கும். மற்றவர்கள் தன்னை மதிக்க வேண்டும் என்று விரும்புவீர்கள். அதை முன்னிட்டு பொது நலத்திலும் ஆர்வம் காட்டுவீர்கள்.

உங்களுக்கு இந்த ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது அஷ்டமத்து சனியின் ஆதிக்கம் ஒரு புறமும் 6 இல் சஞ்சரிக்கும் சூரியனின் ஆதிக்கம் மற்றொரு புறமும் இருப்பதால் வளர்ச்சியும் தளர்ச்சியும் மாறிமாறி வந்து கொண்டேயிருக்கும். சனிப்பெயர்ச்சி வரை சற்று பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

சனியின் ஆதிக்கம் இருக்கும் பொழுது எதையும் ஒருமுறைக்கு இருமுறை செய்யும் சூழ்நிலை உருவாகும். வாழ்க்கை தேவைகள் கடைசி நேரத்தில் தான் பூர்த்தியாகும்.

தனாதிபதி குரு சகாய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் பொருளாதார நிலையில் பற்றாக்குறை ஏற்படாது என்றாலும் பணம் வந்த மறு நிமிடமே செலவாகி விடும் என்பதால் வீட்டிற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கிச்சேர்ப்பது நல்லது. 10 இல் சஞ்சரிக்கும் இராகு, பலம் பெறுவதால் புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் கூட உருவாகலாம். பூமி வாங்கும் வாய்ப்புக்கிட்டும்.

சுக ஸ்தானத்தில் கேது பலம் பெறுவதால் அடிக்கடி உடல் நிலைத் தொல்லைகள் வந்து அலை மோதும். முறையாக மருத்துவ ஆலோசனைகளை பெறுவது நல்லது. செவ்வாய் பலத்தில் பூமி வாங்கும் யோகம் உருவாகும். புதிய கட்டடம் கட்டும் பணியிலோ, கட்டிய வீட்டைப் பழுது பார்க்கும் பணியிலோ ஆர்வம் காட்டுவீர்கள். அஷ்டமத்துச் சனிக்கு பரிகாரமாக சனிக்கிழமை தோறும் சனீஸ்வரர் வழிபாட்டினை மேற்கொள்ளுங்கள்.

நாளை முதல் மிதுன ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். புத்திர ஸ்தானம் பலம் பெறுவதால் இதுவரை புத்திர பேறு இல்லையே என்று கவலைப்பட்டவர்களின் ஆசை பூர்த்தியாகும்.

தகுந்த பரிகாரங்களை இக்காலத்தில் முறையாகச் செய்வதால் தடைகள் அகலும். அதுமட்டுமல்ல உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பும் கூடும். நீண்டநாட்களாக செயற்படுத்த முடியாத சில திட்டங்களை இப்போது செயலாக்க இயலும்.

நாளை தொடக்கம் சுகம் தரும் சுக்ரனும் கடக இராசிக்குச் செல்கிறார். இதனால் இடமாற்றம், ஊர்மாற்றம், உத்தியோக மாற்றங்கள் ஒரு சிலருக்கு ஏற்படலாம். தலை தூக்கிய பெண் வழிப்பிரச்சினைகள் சமாதானத்திற்கு வரும். பெற்றோர்கள் ஒத்துழைப்பும் பிரியமும் கூடும். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து பெற்றவர்கள் உங்களுக்கு உதவி செய்ய முன்வருவர். தொலை தூர பயணம் செய்ய போட்ட திட்டங்கள் நிறைவேறலாம்.

இம்மாதம் வளர்ச்சி ஏற்படவும் தளர்ச்சி மாறவும் வராகி வழிபாட்டினையும் பெருமாள் வழிபாட்டினையும் மேற்கொள்ளுங்கள். சனிக்கிழமை விரதமிருப்பதன் மூலம் சந்தோஷ வாய்ப்புக்கள் குடியேறும்.

இம்மாதம் அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலமும் அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனைகளை கேட்டு நடப்பதன் மூலமே அன்றாட வாழ்வில் மகிழ்ச்சியை வரவழைத்துக் கொள்ளலாம்.

மாதத்தின் மையப்பகுதியில் வரும் தொலைபேசி வழி தகவல் மகிழ்ச்சி தரும். கணவன்- மனைவி ஒற்றுமை திருப்தி தரும். புத்திர விருத்திக்கான வாய்ப்பு உண்டாகும். சனி விலகும் வரை சற்று பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

சுய ஜாதகப்படி யோகபலம் பெற்ற நாளில் வழிபாட்டை மேற்கொண்டால் துயரங்கள் துள்ளி ஓடும்.




(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி )

பார்க்கும் சனிக்கு பரிகாரம் தேவை!

*விருந்தினர்களை உபசரிப்பதில் வல்லவர்களாக விளங்கும் மீன இராசி நேயர்களே!*

குருவின் ஆதிக்கத்திற்குரிய இராசியில் பிறந்த நீங்கள் குணத்தில் தங்கம் என்று பெயர் எடுத்துக் கொள்வீர்கள். பாசத்தோடும் பண்போடும் பழகுவதில் வல்லவர்கள். எதைச் செய்தாலும் அதைத் திட்டமிட்டுச் செய்வதால் தான் வெற்றிப் படிக்கட்டின் விளிம்பில் ஏறமுடிகின்றது.

பெரியோர்களின் அமுத மொழிகளைக் கேட்டு அதன் வழியே நடக்க விரும்புவீர்கள். தோல்வியைக் கண்டு துவளமாட்டீர்கள். வெற்றியைக் கண்டு வியக்கவும் மாட்டீர்கள்.

உங்களுக்கு இந்த ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது கூடுதல் விழிப்புணர்ச்சி காட்ட வேண்டிய மாதமாகவே அமைகிறது.

சப்தம ஸ்தானத்தில் சனியிருந்து உங்கள் இராசியை பார்ப்பதால் எதையும் பலமுறை யோசித்துச் செய்வதே நல்லது. திட்டமிட்ட காரியங்கள் கடைசி நேரத்திலேயே கூடும். 4 இல் சுக்ரன் சஞ்சரிப்பதால் சொத்துக்கள் விரயமும் சொந்த பந்தங்களின் பகையும் உருவாகலாம்.

இருப்பினும் தெசாபுத்திக்கேற்ற வழிபாடுகளை நீங்கள் தேர்ந்தெடுத்துச் செய்தால் உங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

சகோதர ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால் உடன்பிறப்புகள் உதட்டில் ஒன்றும் உள்ளத்தில் ஒன்றும் வைத்துப் பேசலாம். அவர்களின் மனம் அறிந்தும் குணம் அறிந்தும் செயற்பட்டால் மகிழ்ச்சியை வரவழைத்துக் கொள்ளலாம். புத்திர ஸ்தானத்தில் புதனும் சூரியனும் இணைந்திருப்பது நல்லது தான்.

பிள்ளைகளின் கல்வி நலன்கள் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும். மாதக் கடைசியில் கலைத்துறை சம்பந்தப்பட்டவர்கள் ஒத்துழைப்போடு காரிய வெற்றி காணலாம். பார்க்கும் சனிக்கு பரிகாரங்கள் தேவை. சனிக்கிழமைதோறும் சனீஸ்வரர் வழிபாட்டையும் வியாழன்தோறும் குரு வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

மிதுன இராசியில் செவ்வாய் நாளை முதல் சஞ்சரிக்கிறார். இது ஓரளவு நன்மை தான். பணவரவு திருப்தி தரும். பக்க பலமாக இருக்கும் நண்பர்கள் தொழிலுக்கு ஒத்துழைப்பு செய்வார்கள். இனத்தார்.பகை மாறும். எடுத்த முயற்சிகளில் எளிதில் வெற்றி கிடைக்கும். வீடு வாங்கும் எண்ணத்தை பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்புகள் கை கூடி வரும்.

கடக இராசியில் சுக்ரன் நாளை முதல் சஞ்சரிக்கிறார். இதன்விளைவாக பூர்வீக சொத்துக்களில் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும்.திடீர் இடமாற்றம், ஊர் மாற்றம், இலாகா மாற்றம் உருவாகலாம். கூட்டாளிகள் நம்பிக்கைக்குரிய விதத்தில் நடந்து கொள்வார்களா என்பது சந்தேகம்தான். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாத நேரமிது. வழிபாட்டில் கவனம் செலுத்தினால்

## சிவல்புரிசிங்காரம்

வளர்ச்சியில் தளர்ச்சி ஏற்படாது.

இம்மாதம் இர்ராசிநாதன் குரு பலத்தை கூட்ட வியாழன்தோறும் தென்முகக் கடவுளுக்கு அர்ச்சனை செய்வது நல்லது. முல்லைப்பூ மாலை அணிவித்து சுண்டல் நைவேத்தியம் கொடுத்தால் எல்லையில்லாத நற்பலன்கள் கிடைக்கும்.

இம்மாதம் அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய மாதமாகும். கோபத்தை குறைத்துக் கொண்டு செயற்படுவது நல்லது. கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை நிலவ விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். ஒருவரை ஒருவர் விமர்சிப்பதை மாற்றிக் கொண்டு செயற்பட்டால் மகிழ்ச்சி தானாகவே குடியேறும்.

உடன் பிறப்புக்களின் இல்லத்து சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புக்கள் வந்து சேரும். புதிய இடம், பூமி வாங்குவதை பற்றி யோசிப்பீர்கள். பிரதோஷ நேரத்தில் நந்தீஸ்வரர் வழிபாடு நலம் சேர்க்கும். (முற்றும்)

# காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்கு இந்தியா இருபது மில்லியன் டொலர் நிதியுதவி

(கொழும்பு)

காங்கேசன்துறை துறைமுகத்தின் முதல் கட்ட அபிவிருத்திக்காக 20 மில்லியன் டொலரை வழங்கவுள்ளதாக இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

தொடர்ந்தும் இந்த துறைமுக அபிவிருத்திக்காகவும் வட மாகாணத்தின் வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காகவும் நன்கொடைகள், சலுகைக் கடன்கள் என பல வழிகளிலும் உதவ உள்ளதாகவும் இந்தியா கூறியுள்ளது.

இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கையும் இந்தியாவும் நேற்று முன்தினம் கைச்சாத்திட்டுள்ளன.

துறைமுகத்தில் நீரில் மூழ்கியுள்ள ஆறு கப்பல்களை மீட்டெடுத்தல், அலைத்தடை அணியினை மறுசீரமைத்தல் போன்ற விடயங்களில் இந்தியா முதலீடு செய்யும் என இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த துறைமுக அபிவிருத்தி இலங்கையின் புனர்நிர்மாண வேலைகளை துரிதப்படுத்தி வடக்கில் வழமை நிலையை கொண்டு வரவும் பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிக்கவும் பங்களிப்பு செய்யும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா கூறினார்.

காங்கேசன்துறை துறைமுகம் இரண்டு கட்டங்களில் அபிவிருத்தி செய்யப்படும். அபிவிருத்தி வேலை பூர்த்தியாகும் போது அத்தியாவசியமான நுகர்வுப் பொருட்களையும் வேறு உற்பத்திப் பொருட்களையும் யாழ்ப்பாணத்துக்கு கடல்மூலம் எடுத்துச் செல்ல முடியும்.

இதனால் இப்பிராந்தியத்தில் நுகர்வுப் பொருட்களை குறைந்த விலையில் தாராளமாக பெறக்கூடியதாக இருக்கும் என துறைமுக பெருந்தெருக்கள் அமைச்சு அதிகாரிகள் கூறினர். (ஸ்ரீ-2)

# கிளின்டனின் சென்னை விஜயம் பாதக விளைவுகளை ஏற்படுத்தவில்லை

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டனின் சென்னை விஜயம் எதிர்பார்த்தளவு பாதக விளைவுகளை ஏற்படுத்தவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஹிலாரி கிளின்டன் தமிழக முதல்வர் ஜெயலிலதாவை சந்தித்ததன் பின்னர் கடுமையான அறிக்கைகளை வெளியிடுவார் என எதிர்பார்த்ததாக வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் சந்திப்பின் பின்னர் கடுமையான அறிக்கைகள் எதனையும் ஹிலாரி வெளியிடவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்பார்த்தளவிற்கு கடுமையான அறிக்கைகள் எதுவும் வெளியிட்ப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிராந்தியத்தின் தலைமைத்துவ பொறுப்பினை இந்தியா ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதனை அமெரிக்கா விரும்புவதாகவும் இதனால் இலங்கை தொடர்பில் இந்தியாவிடம் கடுமையான கருத்துக்கள் வெளியிடப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நட்பினை புரிந்து கொண்டு அமெரிக்கா செயற்பட்டுள்ளதாக குறித்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

கிளின்டனின் சென்னை விஜயம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வ கருத்துக்கள் எதனையும் வெளியிடாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் விசாரிக்க குழு நியமனம்

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய கிழக்கு மாகாண ஆசிரியர்கள் இடமாற்றத்தில் இடம் பெற்ற குளறுபடிகளை விசாரிப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஜூன் மாதம் 22 ஆம் திகதி இடம் பெற்ற மாகாண அமைச்சரவையின் போது சர்ச்சைக்குரிய கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் விசாரணைகளை மேற் கொள்வதற்கான குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் என தீர் மானம் மேற்கொள்ளப்பட்டது.

இத் தீர்மானத்திற்கிணங்கவே மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜய விக்கிரமவினால் இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மாகாண ஆசிரியர் இடமாற்றத்திற்காக 4.7 மில்லியன் ரூபா செலவிட்டமை உட்பட பல விடயங்கள் தொடர்பில் இக்குழு விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளன.

மாகாண பிரதம செயலாளர் வி.பி. பாலசிங்கம் தலைமையிலான இக்குழு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் என். ஏ.ஏ.புஸ்பகுமார உட்பட மூவர் அங்கம் வகிக்கின்றனர்.

சர்ச்சைக்குரிய கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றம் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி வரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# சுதந்திரக்கட்சியின் 60ஆவது ஆண்டுவிழா நிகழ்வுகள் அலரிமாளிகையில்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 60 ஆவது ஆண்டு விழா எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி அலரிமாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் சிறப்பாக நடைபெறும் என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இந்த விடயத்தை குறிப் பிட்டார்.

அமைச்சர் அங்கு மேலும் குறிப்பிடுகையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 60 ஆவது ஆண்டு விழா எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. பலர் இதன் தலைவர்களாக இருந்துள்ளனர். தற்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் மிகப் பெரிய பலம் மிக்க கட்சியாக சுதந்திரக் கட்சி திகழ்கின்றது.

முக்கியமாக சுதந்திரக் கட்சியின் தலைமையிலான அரசாங்கமே 30 வருடகால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டில் அமைதியை நிலைநாட்டியது.

இதேவேளை, கட்சியின் 60 ஆவது ஆண்டு விழா எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி அலரிமாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் சிறப்பாக நடைபெறும். அத்துடன் அந்த வாரம் முழுவதும் நாட்டில் சமய மற்றும் ஏனைய நலன்புரி நிகழ்வுகளும் நடைபெறும் என்றார். (ஸ்ரீ-2)

# உலகநாடுகளின் பாதுகாப்பு மற்றும் சமாதானத்துக்கு பாரிய அச்சுறுத்தல்

## ஆய்வாளர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச ரீதியில் ஏற்பட்டுவரும் காலநிலை மாற்றங்களினால் உலக நாடுகளின் பாதுகாப்பு மற்றும் சமாதானத்துக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் சூழல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான ஆய்வாளர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

காலநிலை மாற்றத்தினால் பல்வேறுவிதமான இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டு வருவதால் மக்களின் வாழ்க்கை முறைகளும் பாதிக்கப்படும் என ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் மக்களின் இடப்பெயர்வுகள், உணவுப்பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு மனிதாபிமான நெருக்கடிகள் காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சோமாலியா உள்ளிட்ட ஆபிரிக்க நாடுகளில் ஏற்பட்டுள்ள வரட்சி உள்ளிட்ட நெருக்கடிகளும் காலநிலை மாற்றங்களின் பாதிப்பு என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். (ஸ்ரீ-2)

# ஹிலாரி கிளின்டனின் கருத்தையே நாமும் வலியுறுத்தியிருந்தோம்

## ஐ.தே.க.தெரிவிப்பு

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டன் அண்மையில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்த போது இலங்கை தொடர்பில் வெளியிட்ட கருத்துக்களையே ஐக்கிய தேசியக் கட்சி நீண்டகாலமாக வலியுறுத்தி வருவதாக கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசியப் பிரச்சினை மற்றும் இடம்பெயர் மக்கள் விவகாரம் தொடர்பில் புத்தாக்க கொள்கைகள் அமுல்படுத்தப்பட வேண்டுமென ஹிலாரி அண்மையில் வலுயுறுத்தியிருந்தார்.

சர்வதேச விவகாரங்களை அரசாங்கம் தந்திரோபாயமாக அணுக வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அடக்குமுறை மற்றும் ஆவேசத்தினால் பிரச்சினைகளுக்கு காத்திரமான தீர்வுகாண முடியாது என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# 2011.07 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1632-நியூபிரான்சில் குடியேறுவதற்காக 300 குடியேற்றவாதிகள் பிரான்சில் இருந்து புறப்பட்டனர்.

★ 1793-புரூசியர்கள் இடாய்ச்சுலாந்தின் மாயின்ஸ் நகரைக் கைப்பற்றினர்.

★ 1829-ஐக்கிய அமெரிக்காவில் வில்லியம் ஒஸ்டின் பேர்ட் முதலாவது தட்டச்சு இயந்திரத்திற்கான காப்புரிமத்தைப் பெற்றார்.

★ 1840-கனடா மாகாணம் என்ற பெயரில் பிரித்தானிய குடியேற்ற நாடு வட அமெரிக்காவில் அமைக்கப்பட்டது.

★ 1874-இலங்கையின் சட்டசபையின் தமிழ்ப் பிரதிநிதி முத்துகுமாரசுவாமி இங்கிலாந்தில் சேர் பட்டம் அளித்துக் கௌரவிக்கப்பட்டார்.

★ 1914-ஆஸ்திரியாவின் முடிக்குரிய இளவரசர் பிரான்ஸ் பேர்டினண்ட்டின் கொலையாளியைக் கண்டுபிடிக்க ஆஸ்திரியா- அங்கேரி சேர்பியாவுக்கு காலக்கெடு விதித்தது. இதனை அடுத்து ஜூலை 28, 1914 இல் முதலாம் உலகப் போர் ஆரம்பமானது.

★ 1929-இத்தாலியின் பாசிச அரசு வெளிநாட்டுச் சொற்களைப் பயன்படுத்த தடை விதித்தது.

★ 1942-நாசி ஜேர்மனியரினால் போலந்தில் டிரெப்லின்கா வதைமுகாம் யூதர்களுக்காக அமைக்கப்பட்டது.

★ 1952-எகிப்தின் பாரூக் மன்னரின் ஆட்சிக்கு எதிரான இயக்கத்தை ஜெனரல் முகமது நக்கீப் ஆரம்பித்தார்.

★ 1961-நிக்கராகுவாவில் சன்டினீஸ்டா தேசிய விடுதலை முன்னணி அமைக்கப்பட்டது.

★ 1962-லாவோஸ் நாட்டின் அரசியலில் வெளிநாடுகள் தலையிடாதிருக்க பன்னாட்டு ஒப்பந்தம் லாவோஸ் உட்பட 15 நாடுகளுக்கிடையில் ஜெனிவாவில் கைச்சாத்திடப்பட்டது.

★ 1967-அமெரிக்காவின் வரலாற்றில் மிகப் பெரும் கலவரம் ஆபிரிக்க அமெரிக்கர்கள் செறிந்து வாழும் டிட்ராயிட் நகரில் இடம்பெற்றது. 43 பேர் கொல்லப்பட்டு 342 பேர் காயமடைந்தனர். ஆயிரத்துக்கும் அதிகமான கட்டடங்கள் எரிக்கப்பட்டன.

★ 1970-ஓமானின் காபூஸ் அவரது தந்தை சாயிட் பின் தாமூரின் ஆட்சியைக் கைப்பற்றி நாட்டின் சுல்தானாகப் பதவியேற்றார்.

★ 1983-கறுப்பு ஜூலை இலங்கையில் இரண்டு வாரங்களில் 3 ஆயிரம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1988-பர்மாவில் இடம்பெற்ற மக்களாட்சிக்கு ஆதரவான ஆர்ப்பாட்டங்களை அடுத்து 1962 ஆம் ஆண்டில் இருந்து ஆட்சி நடத்திய இராணுவத் தளபதி நெவின் பதவியைத் துறந்தார்.

★ 1992-ஓரினச் சேர்க்கையாளர்களின் உரிமைகளைக் கட்டுப்படுத்தும் தீர்மானத்தை ஜோசப் ரட்சிங்கர் தலைமையிலான சிறப்புக் குழு வத்திக்கானில் முடிவெடுத்தது.

★ 1995-ஹேல் - பொப் என்ற வால் வெள்ளி சூரியனுக்கு வெகு தொலைவில் கண்டுபிடிக்கப் பட்டது. இது கிட்டத்தட்ட ஓராண்டிற்குப் பின்னர் வானில் தெரிந்தது.

★ 1999-சந்திரா எக்ஸ்- கதிர் அவதான நிலையம் என்ற செய்மதி ஏவப்பட்டது.

★ 2005-எகிப்தில் இடம்பெற்ற மூன்று குண்டுவெடிப்புக்களில் 88 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2006-ஹரியானாவில் குருஷேத்திரத்தில் 60 அடி ஆழ் துளைக்குழியில் வீழ்ந்த சிறுவன் 50 மணிநேரத்தின் பின்னர் உயிருடன் மீட்கப் பட்டான்.

### பிறப்புக்கள்

★ 1856-லோகமான்ய திலகர், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (இ.1920)

★ 1892-முதலாம் ஹைலி செலாசி, எதியோப்பிய மன்னர் (இ.1975)

★ 1975-சூர்யா, இந்தியத் தமிழ் திரைப்பட நடிகர்

★ 1984-பிரான்டன் ராய், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புக்கள்


★ 1885-யுலிசீஸ் கிராண்ட், அமெரிக்க அரசுத் தலைவர் (பி.1822)

★ 1916-சேர் வில்லியம் ராம்சி, நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர் (பி.1852)

★ 1925-சுப்பிரமணிய சிவா, இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி.1884)

★ 1989-தேவிஸ் குருகே, இலங்கை வானொலியின் முதலாவது சிங்கள அறிவிப்பாளர்

# மரணம்-அப்புறம்?



## ஆன்மீகம் 05

கேள்வியாளர்: பிறப்பு- இறப்பு சுழற்சியிலிருந்து ஆண்கள் விலகிக் கொள்ளவேண்டும் என்று நாங்கள் கேள்விப்பட்டோம். அதைப்பற்றி நீங்கள் சிறிது விளக்கமுடியுமா? (பதில் தொடர் கீழே)

உயிர்சக்தி ஒரு குறிப்பிட்ட அலைவரிசையில் இருக்கும் போதுதான் நீங்கள் உடலைத் தக்கவைத்துக் கொள்ளமுடியும். அதன் தீவிரத்தை ஒரு குறிப்பிட்ட அளவைத் தாண்டி உயர்த்தினீர்கள் என்றால் நீங்கள் உடலைவிட்டுப் போய்விடநேரும் எனவே உலகில் இரண்டு வகையான யோகாவைத்தான் நீங்கள் பார்க்க முடியும். ஒரு வகை, விலகி கொண்டே செல்வதன் மூலம் கடைசியில் உயிர்ச் சக்தியை தளர்வடையச் செய்து உடலை விட்டு நீங்குவது மற்றொரு வகை உயிர்ச்சக்தியின் தீவிரத்தை அதிகப்படுத்திக் கொண்டே வருவதன் மூலம் மேற்கொண்டு உடலைத்தாங்க முடியாமல் உடலை விட்டு நீங்குவது. எனவே உயிர்சக்தி மிகவும் தீவிர மடைந்தாலும் சரி மிகவும் தளர்ந்தாலும் சரி உடல் தன்மை உங்களைப் பிடித்துவைத்திருக்க முடியாது.

சமூகத்தில் உயிர்ச் சக்தியை தீவிர மடையச் செய்யும் முறைக்கு மிகுந்த வரவேற்பு இருக்கலாம். ஆனால், அதற்கு எந்த அர்த்தமும் இல்லை. உங்களைப்பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது உங்கள் உயிர்த்தன்மைக்கு முக்கியமில்லாத விடயம். அதற்கு சமூகரீதியில் முக்கியத்துவம் இருக்கலாம். ஆனால் உங்களைப்பற்றி இந்த உலகம் என்ன நினைக்கிறது என்பதிலோ அல்லது நீங்கள் உங்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்பதிலோ உங்கள் இருப்பைப் பொறுத்தவரையில் எந்த முக்கியத்துவமும் இல்லை. ஆன்மீகம் என்று சொல்லும்போது உயிர்த்தன்மையளவில் எப்படி வளர்ச்சியடையவது என்று பார்க்கிறீர்கள். சமூக அளவிலோ உணர்ச்சி ரீதியாகவோ உளவியல் ரீதியகவோ எப்படி? வளர்ச்சியடைவது என்று பார்ப்பதில்லை. உண்மையில் நீங்கள் வேறெங்கோ போக விரும்புகிறீர்கள். ஏனெனில் உங்கள் உணர்ச்சி உங்கள் சமூகம், உங்கள் உளவியல் எல்லாம் உங்களது கற்பனைதான். இல்லையா? வேண்டுமானால் அவை சில நேரங்களில் இன்பம்தரும் கற்பனையாக இருக்கலாம். ஆனாலும் அவை கற்பனைதான் இல்லையா?

ஒரு உயிரின் உடல் தன்மையைக் கடந்த வளர்ச்சியானது அவர் இந்த உலகில் என்னவாக இருக்கிறார்; அவர் தன்னைப்பற்றி என்ன எண்ணம் வைத்திருக்கிறார்; மற்றவர்கள் அவரைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பொறுத்து அமைவதில்லை. அவர் எவ்வளவு விழிப்புணர்வுடன் இருக்கிறார் எந்த அளவு பொருட்தன்மையை கடந்த நிலையில் இருக்கின்றார் என்பதைப் பொறுத்தே அமைகிறது. என்வே ஒருவர் இந்த எல்லா செயல் முறைகளிலிருந்தும் உண்மையாகவே விடுதலை பெற விரும்பினால், அந்த நோக்கத்தின் அருகில் செல்ல பல வழிகள் உள்ளன. ஆனால் காற்றுக் குமிழியை உடைத்துக் கொண்டால் விழிப்புணர்வுடன் செயற்பட முடியாது, ஏனெனில் பகுத்துப்பார்க்கும் தன்மை உங்களிடமிருந்து நீக்கப்பட்டு விடுகிறது.

இதனால்தான் மனிதப்பிறவி மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. மனிதப்பிறவியில் மட்டும்தான் பகுத்துப்பார்க்கும் தன்மையை பயன்படுத்தி விழிப்புணர்வுடன் செயற்பட முடியும். இந்த நிமிடம் வரை நீங்கள் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்திருந்தாலும் இப்போது இந்த வினாடி நீங்கள் விழிப்புணர்வுடன் செயலாற்ற முடியும், இல்லையா? இதுவரை நீங்கள் மிகவும்மோசமான வாழ்க்கை வாழ்ந்திருக்கலாம், அது ஒரு பொருட்டல்ல. இந்த வினாடி நீங்கள் விழிப்புணர்வுடன் செயற்பட முடியும். அந்த சுதந்திரமும் பகுத்துப் பார்க்கும் தன்மையும் எப்போதும் உங்களிடம் இருக்கிறது.

விழிப்புணர்வு ஒரு தீவிரத்துக்கு வந்து விட்டாலோ, அல்லது தீவிரம் குறைந்து விட்டாலோ உடலில் வாழ்வதற்கு தகுதியற்றவர்களாகிறார்கள். அந்த நிலையில், குமிழியை முழுவதுமாக உடைத்துவிடக்கூடிய வாய்ப்பு உங்களுக்கு இருக்கிறது. குமிழியை உடைத்தபிறகும் உடலில் தங்கியிருக்க வேண்டுமானால் அதற்குத் தொழில்நுட்பம் தேவைப்படுகிறது. எல்லாத் தந்திரங்களையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அல்லது உடலைத்தக்க வைத்துக் கொள்ள நாமாகவே சில கர்மாக்களை செய்ய வேண்டும். இதற்கு மக்கள் பல செயல்களைச் செய்கிறார்கள். நான் என்னைப்பற்றி பேச விரும்பவில்லை. ஏனெனில் பல செயல்கள் எனக்குள் நடந்து கொண்டிருக்கின்றன.

உதாரணத்திற்கு ராமகிருஷ்ண பரம ஹம்சரை எடுத்துக் கொள்வோம். அவர் வாழ்ந்த காலத்திலேயே மக்கள் அவரை ஒரு கடவுளாகப் பார்த்தார்கள். ஆனால், ராமகிருஷ்ணர் உண்ணும் விடயத்தில் வெறிபிடித்தது போலிருந்தார். இது உங்ளுக்குத் தெரியுமா? அவர் உணவு விடயத்தில் பைத்தியமாக இருந்தார். சீடர்களுடன் பேசிக்கொண்டிருப்பார் திடீரென அவர்களைக் காத்திருக்கச் சொல்லிவிட்டு சமயலறைக்குச் சென்று, சாரதாவைப்பார்த்து "இன்று என்ன சமைத்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்பார். உணவு விடயத்தில் அவ்வளவு பைத்தியமாக இருந்தார்.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசு தேவ்**

# எழுத்துச் சஞ்சிகைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

## "ஞானம்" சஞ்சிகையினூடக ஓர் அனுபவப் பகிர்வு

04

இந்த நிலையில் சஞ்சிகையாளரே பல்வேறு பிரதேசங்களிலும் உள்ள விற்பனையாளருக்கு பார்சல்மூலம் சஞ்சிகைகளை அனுப்பவேண்டிய நிலை உள்ளது தபால்சேவை மூலம் பார்சலை அனுப்பும்போது அதற்கான செலவும் அதிகமாகவுள்ளது. உதாரணமாக 25 இதழ்களை பார்சலில் அனுப்பும்போது இதழின் விலையில் 20 வீதம், பார்சல் அனுப்பும் செலவாகிவிடுகிறது. இதைவிட விற்பனையாளருக்கும் விற்பனைக் கழிவு கொடுக்க வேண்டிய நிலையும் உள்ளது. சந்தாதாரர்களுக்கு தனிப் பிரதிகளை அனுப்புவதற்கான செலவும் அதிகமாகவுள்ளது. இது சராசரி சஞ்சிகையின் விலையின் 30 வீதமாகவுள்ளது.

தூர இடங்களில் உள்ள விற்பனையாளருக்கு அதிக செலவில் பார்சல் மூலம் சஞ்சிகைகளை அனுப்பும் போது அனேக விற்பனையாளர்கள் நாணயமாக நடந்து கொள்வதில்லை. சஞ்சிகையின் பிரதிகள் விற்பனையானபோதும் விற்பனையாளர்கள் ஒழுங்காக பணம் அனுப்புவதில்லை. அதனால் சங்சிகையின் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடைகிறது.

"இதனால்தான் உண்மையான 'சிறு பத்திரிகை' விற்பனையாள்களை எதிர்பார்ப்பதில்லை. சந்தர்தாரர்களையே தன்பலமாகக் கொள்ள விரும்புகிறது. 200 அல்லது 300 பிரதிகள் அச்சிட்டாலே போதும். அதனால் அதிக இலாபம் இல்லாவிட்டாலும் நஷ்டம் அதிகம் ஏற்படாது என்று கருதுகிறது." எனக் குறிப்பிடுகிறார் வல்லிக்கண்ணன்.

மட்டக்களப்பின் மூத்த எழுத்தாளர் அன்புமணி 'மலர்' என்ற சஞ்சிகையை 1970 இல் இருந்து 1971 வரை வெளிக் கொணர்ந்தார். 2005ஆம் ஆண்டில் ஞானம் சஞ்சிகையில் அவர் 'மலர்' நினைவுகள் என்ற தொடரை எழுதினார். அதிலே பின்வரும் கருத்தினை முன்வைத்துள்ளார். "விற்பனையாளருக்கு மலர்" விற்பனை ஒரு அற்பவிடயம். அவர்கள் கவனம் முழுவதும் நூற்றுக் கணக்கில் விற்பனையாகும் தமிழக சஞ்சிகைகளிலேயே சென்றதை நாம் அவதானித்தோம். என்ன செய்யலாம்? இந்த விற்பனையாளர்கள் எமக்குக் கடிதம் எழுதவோ, விற்பனைப் பணத்திற்கு மணியோடர் எடுத்து அனுப்பவோ நேரம் இல்லாதவர்களாக, அக்கறையில்லாதவர்களாக இருந்தார்கள்.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

மலர் அனுபவம் பற்றி 33 வருடங்ளுக்குப்பின் இரைமீட்கும் போது 'மலருக்கு' ஏற்பட்ட இதேகதி ஏனைய பல சிற்றேடுகளுக்கு ஏற்பட்டது நினைவுக்கு வருகிறது. "அஞ்சலி, அமுதம், தமிழமுது, அலை, களம், கற்பகம், கலகலப்பு, தீர்த்தக்கரை" முதலிய நூற்றுக் கணக்கான இதழ்கள் பற்றி எண்ணிப்பார்க்கிறேன். இவை மடிந்து போனமைக்கு முக்கிய காரணம் என்னவாக இருக்கும் என்று யோசிக்கிறேன். ஆம், முறையான ஒரு விநியோகத் திட்டம் இல்லாமையும் விநியோகத்தர்களின் நேர்மையற்ற போக்குமே இதற்குக் காரணம் என்பது தெளிவாகிறது.

இவ்வளவு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் திரு டொமினிக் ஜீவா வெற்றிகரமாக மல்லிகையை நடத்தி வருகிறாரே அது எப்படி? என்று கேள்வி எழுகிறது. டொமினிக் ஜீவாவின் மல்லிகையின் முதல் இதழ் 1966 ஆகஸ்ட் 15 ஆம் திகதி வெளியாகியது. ஏறத்தாள 46 ஆண்டுகள் மல்லிகையை நடத்தி வந்திருப்பது ஒரு இமாலய சாதனைதான். அவருடைய இந்தச் சாதனைக்கு அவரது விநியோக முறையே முதற் காரணம் என்பதை அவர் கட்டுரை ஒன்றிலே பின்வருமாறு பதிவு செய்துள்ளார். "இங்கு வரதர் 'மறுமலர்ச்சி' என்றொரு இதழை ஆரம்பித்தார். அது பிற்காலத்தில் மணிக்கொடிமாதிரி பேர் சொல்லியதே தவிர தொடர்ந்து வெளிவரவில்லை. 'சிற்பி'யை ஆசிரியராகக் கொண்டு 'கலைச் செல்வி' மாத இதழ் வெளிவந்தது. தரமான இளந்தலைமுறை எழுத்தாளர்களை உருவாக்கியது அது. ஆனால் அதுவும் நின்று நிலைக்கவில்லை. இது ஏன்? ஏன்? என்றொரு கேள்வி என்நெஞ்சை இந்தக்காலத்தில் குடைந்து கொண்டே இருந்தது ஏன்? என்ன காரணம்?

இங்குதான் ஆனந்தவிகடன் வாசனுடைய அனுப வம் எனக்குக் கைதந்து உதவியது. பிரதிகளைத் தோளில் சுமந்து வீதி வீதியாக விற்கத்தொடங்கினேன். விற்க என்பதைவிட திணிக்கத் தொடங்கினேன் என்பதே சரியான தாகும். பிரதிகள் சீக்கிரமே விலைப்பட்டு விட்டன. "நாடுபூராகவும் சென்று வந்த வேளைகளில் முக்கியமான ஊர்களிலுள்ள சலூன்களினது முகவரிகளை சேகரித்து விடுவேன். இலங்கையில் இன்று வாழ்ந்துவரும் எழுத்தாளர் பலருக்கு இல்லாத ஓர் அசாதாரண வாய்ப்பு வசதி எனக்குண்டு. தேசம் பூராகவும் பரவியுள்ள சிகையலங்கரிப்புக் கலைஞர்களின் தொடர்பு. மேலும் மேலும் அதைத் தொடர்ந்து பேணி வளர்க்க விரும்பினேன்... தேசம் பூராகவும் சேகரித்த சலூன் முகவரிகளுக்கு தொடர்ந்து சஞ்சிகையை அனுப்பிவந்தேன்.

(தொடரும்)

**தி.ஞானசேகரன்**

# அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியாவிடமிருந்து எவ்வித அழுத்தங்களும் பிரயோகிக்கப்படவில்லை

## அமைச்சர் டலஸ் தெரிவிப்பு



இலங்கையில் அரசியல் தீர்வை காண வேண்டும் என்பது தொடர்பான விடயத்தில் இந்தியாவிடம் இருந்து எவ்விதமான அழுத்தங்களும் பிரயோகிக்கப்படவில்லை என்றும் இலங்கையில் இந்திய எதிர்ப்பு போக்கை விதைக்க பலர் முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அரசியல் தீர்வு செயற்பாட்டில் இந்தியாவின் செயற்பாடுகள் மற்றும் நகர்வுகள் தொடர்பில் விபரிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

அவர் இது தொடர்பில் மேலும் குறிப்பிடுகையில், அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியாவிடம் இருந்து எவ்விதமான அழுத்தங்களும் இலங்கைக்கு பிரயோகிக்கப்படவில்லை. இந்தியா இலங்கையுடன் உயர்மட்ட உறவுகளைக் கொண்டுள்ள நாடாக உள்ளது.

ஆனால், இலங்கையில் இந்திய எதிர்ப்புப் போக்கை விதைக்க பலர் முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர். இதே சக்திகள் சுமார் இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் இந்த நாட்டில் இந்திய எதிர்ப்பை உருவாக்கி நெருக்கடிகளை ஏற்படுத்தியிருந்தன.

இன்று மேற்கின் சில சக்திகளினால் தூண்டப்படும் இவ்வாறான சக்திகள் இந்திய எதிர்ப்புப் போக்கை ஏற்படுத்த முயற்சிக்கின்றன. இந்தியாவில் நெருக்கடியை ஏற்படுத்தவும் இந்திய அரசியலில் தளம்பல் நிலையை உருவாக்கவும் வேறு வெளிநாட்டு சக்திகளுக்கு தேவையேற்பட்டுள்ளது.

அந்த தேவையை நிறைவேற்றும் பொருட்டு இலங்கையில் உள்ள இந்திய எதிர்ப்பு சக்திகளை பயன்படுத்தி நகர்வுகளை முன்னெடுக்க முயற்சிக்கின்றது. எனவே இந்தியாவினால் அரசியல் தீர்வு விடயத்தில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுவதை நாங்கள் நிராகரிக்கின்றோம்.

ஆனால், இந்தியாவின் எம்முடனான தொடர்புகள் தவிர்க்கப்பட முடியாதவையாகும். இந்தியா மிக அருகில் உள்ள நாடு. இந்தியாவில் 65 மில்லியன் தமிழ் மக்கள் வாழ்கின்றனர். எமது கலாசார விவகாரங்களுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்ட நாடாக அந்நாடு திகழ்கின்றது.

அத்துடன் தமிழகத்தினால் முன்வைக்கப்படும் நெருக்குதல்கள் மத்திய அரசாங்கத்தில் தாக்கத்தை செலுத்தும். எனினும் தென்னிந்தியாவில் பாரிய எதிர்ப்புக்கள் இருந்த நிலையில்தான் இந்திய மத்திய அரசாங்கம் யுத்த நடவடிக்கையின்போது எங்களுக்கு உதவிகளை வழங்கியது. எனவே நாம் இந்தியாவுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்றார். (ஸ்ரீ-2)

# ஹெரோயின் கடத்திய நபர் கட்டுநாயக்கவில் கைது

பஹ்ரேனிலிருந்து ரூ 20 இலட்சம் பெறுமதியான 284 கிராம் ஹெரொயினுடன் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்த நபர் ஒருவரை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர்.

இவர் 58 வயதுடைய பாகிஸ்தானிய பிரஜை எனவும் பாகிஸ்தான் விடுதி ஒன்றில் உதவி முகாமையாளராக கடமையாற்றியவர் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன. சந்தேக நபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# நாட்டின் அபிவிருத்தியை சீர்குலைக்க காலனித்துவ நாடுகள் முயற்சி

## அமைச்சர் பசில் தெரிவிப்பு



(கொழும்பு)

காலனித்துவ நாடுகளின் சதித்திட்டங்களைப் புரிந்து கொள்ளவேண்டுமென பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பெந்தர எல்பிட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சிறிய நாடொன்று அபிவிருத்தி அடைவதனை காலனித்துவ நாடுகள் ஏற்றுக் கொள்ளாது என அவர் தெரிவித்துள்ளார். ஏதேனும் ஒரு வழியில் சிறிய நாட்டுக்குள் புகுந்து அபிவிருத்தியை சீர்குலைக்க காலனித்துவ நாடுகள் முயற்சிக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வியட்நாம் நாடு இந்தத் துர்ப்பாக்கிய நிலைமையை எதிர்நோக்கியதாகக் குறிப்பிட்டுள்ளார். ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கிலும் இதேநிலைமை ஏற்பட்டதாகவும் லிபியா இந்தச் சதித்திட்டத்தினை தற்போது எதிர்நோக்கி வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே இதனை புதிதாக நோக்க வேண்டிய அவசியமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் இந்தச் சதித்திட்டத் திட்டங்களுக்கு நாம் ஆயத்தமாக இருக்க வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை பெற வடபகுதி இளைஞர், யுவதிகள் ஆர்வம்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு- கிழக்கைச் சேர்ந்த அதிகளவான இளைஞர், யுவதிகள் வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றுக் கொள்வதற்கு அதிகளவு ஆர்வம் காட்டி வருவதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பது தொடர்பில் வடக்கு- கிழக்கு இளைஞர், யுவதிகளுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகத் தெரிவித்து மோசடியில் ஈடுபடுவோரிடமிருந்து எவ்வாறு தங்களை பாதுகாத்துக் கொள்வது என்பது தொடர்பிலும் விளக்கமளிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய நகரங்களில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கிளைக் காரியாலயங்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடப்படுகின்றது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகக் கிளைகளை அணுகுவதன் மூலம் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# கனடாவில் தேடப்பட்டு வரும் 31 போர்க்குற்றவாளிகள்

## கண்டுபிடிக்க உதவுமாறு கனேடிய அரசு கோரிக்கை

(கொழும்பு)

போர்க்குற்றம் மற்றும் மனித உரிமைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் இலங்கை பிரஜைகள் உட்பட்ட ஏனைய நாடுகளின் 31பேர் கனடாவினால் தேடப்படுவதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

கனடாவில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் இவர்களை கைதுசெய்ய உதவுமாறு கனேடிய அரசாங்கம் கோரியுள்ளது.

கனேடிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விக் டௌவ்ஸ் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

கனடாவின் எல்லை சேவைகள் இணையத் தளத்தில் இது தொடர்பான விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் ஈராக், சோமாலியா உட்பட்ட பல நாடுகளின் பிரஜைகள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

எனினும் சந்தேக நபர்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் தொடர்பில் குறிப்பிட்ட குற்றச் சாட்டுக்கள் எதனையும் குறித்த இணையத் தளம் வெளியிடவில்லை.

இந்த நிலையில் இவர்கள் தொடர்பில் தகவல்களைத் தருமாறு கனேடிய அரசாங்கம் கோரியுள்ளது.

இதேவேளை கனடாவில் சட்டவிரோதமான முறையில் குடியுரிமையைப் பெற்றுள்ள 1800 பேரின் குடியுரிமைகள் பறிக்கப்படவுள்ளதாக கனேடிய குடிவரவுத்துறை அமைச்சர் ஜேசன் கென்னே தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)







மக்கள் வங்கியின் கோப்பாய் நீடித்த சேவை கருமபீடத்தில் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பிரதேச செயலர் ம.பிரதீபன் தேசியக் கொடியேற்றுவதையும் வங்கி முகாமையாளர் த.கனகலிங்கம் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் வங்கி உத்தியோகத்தர் சி.பகீரதன் நிற்பதையும் சேவை பெறும் வாடிக்கையாளர்களையும் படங்களில் காணலாம்.

## ஆபிரிக்காவில் பஞ்சம்; ஐ.நா.அவசர கூட்டம்

கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் நிலவும் பஞ்சத்திற்கு தீர்வு காண்பதற்கு ஐ.நா.சபையின் அவசரக்கூட்டம் நாளைமறுதினம் நடைபெறவுள்ளது. கென்யா, எதியோப்பியா, சோமாலியா போன்ற நாடுகள் வறுமையின் பிடியில் சிக்கியுள்ளன. சோமாலியா நாட்டின் உள்நாட்டு சண்டையால் அங்கு 20 ஆண்டுகளாக பஞ்சம் நிலவுகிறது. 37 இலட்சம் பேர் வறுமையின் பிடியில் சிக்கியுள்ளனர். ஒரு வேளை உணவு கூட கிடைக்காத காரணத்தால் அவர்கள் அண்டை நாடுகளான கென்யா மற்றும் எதியோப்பியாவுக்குள் ஊடுருவி வருகின்றனர். ஏற்கனவே அந்த நாடுகளும் பஞ்சத்தில் சிக்கியுள்ளன.

இந்நாடுகளை அல்கொய்தா பயங்கரவாத அமைப்பினர் கட்டுப்பாட்டில் வைத்துள்ளதால் வெளிநாட்டு உதவிகள் மறுக்கப்பட்டு வந்தன. தற்போது நிலைமை மோசமடைந்துள்ளதால் வெளிநாட்டு உதவிகள் ஏற்கப்படுகின்றன.

ஒக்ஸ்பாம் தொண்டு அமைப்பு, கிழக்கு ஆபிரிக்க மக்கள் வறுமையில் இறப்பதை ஐரோப்பிய நாடுகள் வேடிக்கை பார்ப்பதாக குற்றம் சாட்டியுள்ளது. இந்த விடயத்தில் அக்கறை செலுத்த பிரான்ஸ் முன்வந்துள்ளது.

3 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்புள்ள நிவாரண உதவிகள் தற்போது இந்நாடுகளுக்கு தேவைப்படுவதால் இது குறித்து பேச ஐ.நா. சபையின் உறுப்பு நாடுகளின் அவசர கூட்டம் நாளைமறுதினம் ரோம் நகரில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-4)

# லிபியாவைத் தொடர்ந்து மலாவி நாட்டில் போராட்டம் வெடித்தது

## கலவரத்தில் 10பேர் பலி

(லிலாங்கவி)

ஆபிரிக்காவில் உள்ள லிபியா, எகிப்து உள்ளிட்ட நாடுகளில் ஜனாதிப்திகளுக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம் நடத்தினார்கள். எகிப்தில் போராட்டம் முடிவுக்கு வந்தது. ஆனால் லிபியாவில் கடந்த 4 மாதங்களுக்கும் மேலாக ஜனாதிபதி கடாபிக்கு எதிராக பொதுமக்கள் போராடி வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது தெற்கு ஆபிரிக்காவில் உள்ள மலாவி நாட்டிலும் போராட்டமும் அதைத் தொடர்ந்து கலவரமும் ஏற்பட்டுள்ளது. இங்கு பிங்குவா முதாரிகா பல ஆண்டுகளாக ஜனாதிபதியாக உள்ளார். தற்போது இங்கு பொருளாதாரம் சீரழிந்து உள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் உள்ளிட்ட பிரச்சினைகளால் மக்கள் பெரும் துயரத்துக்கு ஆளாகியுள்ளனர்.

இதைத் தொடர்ந்து கடந்த 2 நாட்களுக்கு முன்பு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது தலைநகர் லிலாங்வியில் ஒரு கும்பல் கடைகளை சூறையாடியது.



போராட்டக்காரர்கள் ஜனாதிபதி முதாரிகா கட்சி பிரமுகர்களின் கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களை கொள்ளையடித்தனர். மற்றும் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டனர். கலவரத்தை அடக்க பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டனர்.

கலவரத்தை அடக்க பொலிஸார் நடத்திய துப்பாக்கி சூட்டில் இதுவரை 10 பேர் பலியினர். 44 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே பொதுமக்கள் வன்முறையை விடுத்து அமைதி காக்கும்படி ஜனாதிபதி முதாரிகா வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)

# முல்லா ஓமர் உயிருடன் உள்ளார்; தலிபான்கள் அறிவிப்பு



(காபூல்)

தலிபான்கள் பயங்கரவாதத் தலைவர் முல்லா முகம்மது ஓமர் இறந்துவிட்டார் என்ற செய்தி தவறானது. எங்களுக்கு மின்னஞ்சல்கள் மற்றும் இணையத்தளங்களில் அமெரிக்க புலனாய்வு அமைப்பினர் ஊடுருவி இச்சதியை செய்துள்ளனர் என்று தலிபான்கள் செய்தி தொடர்பாளர் கூறியுள்ளார்.

இது குறித்து செய்தி நிறுவனம் ஒன்றுக்கு தலிபான் செய்தி தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாகிதீன் அளித்த பேட்டியில்,

எங்களது இணையத்தளங்கள் மற்றும் மின்னஞ்சல்களில் எங்களது தலைவர் முல்லா முகம்மது ஓமர் இறந்து விட்டார் என்ற செய்தி பரப்பப்பட்டுள்ளது. இது அமெரிக்க புலனாய்வு அமைப்பின் சதிச் செயல். எங்களது இணையத்தளங்களில் ஊடுருவி இது போன்ற தவறான செய்தியை பரப்பியுள்ளனர். இதற்கு நாங்கள் பழி வாங்குவோம்.

எங்களது எதிரிகள் உயர் தொழில் நுட்பங்களை கொண்டுள்ளனர். ஆதலால் எளிதாக எங்களது தொலைபேசி எண்கள் மற்றும் இணையத்தளங்களை ஊடுருவுகின்றனர். தோல்வியை சந்தித்து வருவதால் இது போன்று புரளிச் செய்திகளை பரப்பி வருகின்றனர் என்று தெரிவித்துள்ளனர்.

ஆப்கான் நாட்டு இராணுவத்தினரின் உதவியுடன் அந்நாட்டின் ஆதிக்கத்தில் இருந்த தலிபான் பயங்கரவாதிகளை 2001 ஆம் ஆண்டில் அமெரிக்கா விரட்டியடித்தது. அப்போது நடந்த தாக்குதலில் பயங்கரவாதி முல்லா முகம்மது ஓமர் ஒற்றைக் கண்ணை இழந்தார்.

இதையடுத்து பாகிஸ்தானின் குவெட்டா நகருக்கு ஓமர் தப்பியோடியதாக நம்பப்படுகிறது.

ஆனால் குவெட்டாவில் ஓமர் இல்லை. ஆப்கானில் இருக்கிறார் என்று தலிபான்களும் பாகிஸ்தானியர்களும் கூறிவருகின்றனர். (ஸ்ரீ-4)




# பாகிஸ்தான் அரசாங்க முகவர் ஒருவர் அமெரிக்காவில் கைது

அமெரிக்க அரசாங்கத்துக்குள் பாகிஸ்தானுக்கு ஆதரவானதொரு பிரசாரத்தை சட்ட விரோதமாக செய்து வந்ததாக குற்றம் சாட்டப்பட்டு பாகிஸ்தான் பூர்வீகம் கொண்ட நபர் ஒருவர் அமெரிக்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு அரசாங்கம் ஒன்றுக்காக தான் செயலாற்றுவதை அமெரிக்க அதிகாரிகளிடத்தில் பதிவு செய்யத்தவறியதாக காஷ்மீர் அமெரிக்க சபை என்ற அமைப்பின் இயக்குநரான செய்யது குலாம் நபி பாய் மீது குற்றம் சாட்டப்படுகின்றது.

பாகிஸ்தானின் உளவுத்துறை வழங்குகின்ற பணத்தை அமெரிக்க அரசாங்கத்துக்குள் கொண்டு சேர்க்கும் சட்டவிரோத முகவராக பத்து வருடத்துக்கும் அதிகமான காலம் செய்யது குலாம் நபி பாய் இருந்து வந்துள்ளார் என்று அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர்.

காங்கிரஸ் மன்றத்துக்குப் போட்டியிடும் வேட்பாளர்கள் சிலருக்கு பிரசார நன்கொடையாகவும் சிலவேளைகளில் கட்சி மாநாடுகளுக்கான நன்கொடையாகவும் அவர் பல மில்லியன் டொலர்களை பாகிஸ்தானில் இருந்து கொண்டுவந்து சேர்ந்துள்ளார். தவிர இவர் அமெரிக்க ஜனாதிபதி அலுவலகம் மற்றும் வெளியுறவுத்துறை அதிகாரிகளை சந்தித்து வந்துள்ளார்.

அவருடைய இந்த நடவடிக்கைகள் அனைத்துக்கும் நோக்கமாக இருந்திருப்பது தகராறுக்குரிய காஷ்மீர் விவகாரத்தில் அமெரிக்க அரசாங்கத்தை பாகிஸ்தானுக்கு ஆதரவாக கொண்டு வருவதுதான் என்று குற்றம் சாட்டப்படுகிறது.

அமெரிக்க அதிகாரிகளின் கூற்றுப்படி இவர் செய்தது சட்டவிரோத காரியம். ஏனென்றால் இவர் அரசுசாரா அமைப்பொன்றின் தலைவராக இருந்துகொண்டு தன்னை சுயாதீனமான ஒருவராக காட்டிக் கொண்டாலும் இவர் பாகிஸ்தான் அரசாங்கத்தின் முகவராக இருந்து வந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவரது நடவடிக்கைகள் பற்றி தாங்கள் ஏதும் அறிந்திருக்கவில்லை என்று வோஷிங்டனில் உள்ள பாகிஸ்தானில் தூதரகம் கூறுகிறது. குற்றம் சாட்டப்படும் காரியங்களில் தான் ஈடுபடவில்லை என்று பாயும் கூறுகிறார். (ஸ்ரீ-2)

# தொலைபேசி ஒட்டுக் கேட்பு விவகாரம் பிரதமர் டேவிட் கமரூனிடம் விசாரணை

(லண்டன்)

இங்கிலாந்தை உலுக்கியுள்ள தொலைபேசி ஒட்டுக் கேட்பு விவகாரத்தில் பிரதமர் டேவிட் கமரூனிடம் நாடாளுமன்ற குழு விசாரணை நடத்தியது.

இங்கிலாந்தின் பழம்பெரும் பத்திரிகையான நியூஸ் ஒவ் த வேல்ட் அந்நாட்டு அரசு அதிகாரிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்து பிரபலங்களின் தொலைபேசிகளை ஒட்டு கேட்டதாக புயல் வீசி வருகிறது.

குற்றச்சாட்டு வெளியானதும் 168 ஆண்டு கால பத்திரிகையை அதன் நிறுவுநரான றொபேர்ட் முர்டொக் மூடி விட்டார். எனினும் ஒட்டு கேட்பு விவகாரம் இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் எதிரொலித்தது. இதையடுத்து விரிவான விசாரணைக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

முர்டொக் நடத்தும் நியூஸ் கோர்ப்பரேஷன் குழுமத்தை சேர்ந்த பலர் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு அரசு அதிகாரிகளுடன் இருந்த தொடர்பு பற்றி தீவிர விசாரணை நடக்கிறது. இது தொடர்பாக அமைக்கப்பட்ட நாடாளுமன்ற குழு முன்பு முர்டொக் ஆஜராகி விளக்கம் அளித்தார்.

இந்நிலையில் ஆபிரிக்காவில் பயணம் மேற்கொண்டிருந்த பிரதமர் டேவிட் கமரூன் அவரசமாக லண்டன் திரும்பினார். நியூஸ் ஒப் த வேல்ட் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் ஆண்டி கவுசனை அரசு பதவியில் அமர்த்தியதால் தொலைபேசி ஒட்டுக் கேட்பு நடந்திருக்கலாம் என்று கமரூன் மீதும் புகார் எழுந்துள்ளது.

இது பற்றி கமரூனிடம் நாடாளுமன்ற குழு நேற்று முன்தினம் விசாரணை நடத்தியது. அப்போது இந்த விடயத்தில் தவறு நடக்கவில்லை என்று கமரூன் மறுத்தார். (ஸ்ரீ-2)

# சிறார்களை இலக்கு வைத்து கார்ட்டூன் படம் தயாரிக்கும் அல்கொய்தா

அல்கொய்தா இயக்கத்தின் நடவடிக்கைகளுக்கு சிறுவர்களையும் இணைத்துக் கொள்வதற்காக விசேட கார்ட்டூன் படங்களைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளதாக அவ்வியக்கத்துடன் தொடர்புடைய அமைப்பான அபு அல் லைத் அல் யேமன் எனும் அமைப்பு கூறியுள்ளது.

சிறுவர்கள் இராணுவ பாணி ஆடைகளை அணிந்து ரோந்து செல்வதும் போரிடுவதுமான காட்சிகள் இப்படங்களில் காணப்படுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.


இந்த அனிமேஷன் படம் பற்றிய தகவலும் படங்களும் அபு அல் லைத் அல் யேமன் அமைப்பின் அரபு மொழி இணையத்தளத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ளதென லண்டனை தளமாகக் கொண்டு இயங்கும் குய்லியன் எனும் அமைப்பு செய்தி வெளியிட்டுள்ளது.

இப்படம் புனிதப் போர்கள் தெர்டர்பான கதைகளை கூறுவதுடன் மற்றும் மேற்குலக எதிர்ப்பு பிரசாரங்களை மேற்கொள்கிறது என குய்லியன் அமைப்பைச் சேர்ந்த ஆய்வாளரான நோமன் பெளோட்மன் தெரிவித்துள்ளார்.

ஆனால் இப்படம் சிறார்களை இலக்கு வைத்து தயாரிக்கப்பட்டுள்ளதால் பெற்றோர்களின் எதிர்ப்புக்கு உள்ளாக நேரிடலாமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பிரதமரை லோக்பால் விசாரணை வரம்புக்குள் கொண்டுவரவேண்டும்

## பிரகாஷ் காரத் வலியுறுத்தல்



(சண்டீகர்)

லோக்பால் வரம்புக்குள் பிரதமரையும் கொண்டு வர வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத் வலியுறுத்தியுள்ளார்.

சண்டீகரில் செய்தியாளர்களிடம் கடந்த வியாழக்கிழமை அவர் கூறுகையில் , எதிர் வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி தொடங்க இருக்கும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் லோக்பால், மசோதாவை மத்திய அரசு அறிமுகப் படுத்த வேண்டும். இந்த மசோதா வலுவானதாக இருக்க வேண்டும். பிரதமரையும் இதன் அதிகார வரம்புக்குள் கொண்டுவர வேண்டும்.

அன்னா ஹசாரே குழுவினர் பரிந்துரை செய்திருக்கும் லோக்பால் வரைவு மசோதாவிலும் சில குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றையும் சரி செய்தாக வேண்டும்.

1989, 1996, 1998, 2001 ஆகிய ஆண்டுகளில் நாடாளுமன்றத்தில் லோக்பால் வரைவு மசோதா தாக்கல் செய்யப் பட்டது. லோக்பால் அமைப்பு பிரதமரையும் விசாரிக்கும் அதிகாரம் கொண்டதாக இருக்கும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

பிரதமரை விசாரணை வரம்புக்குள் கொண்டு வருவதற்கு ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு இப்போது அஞ்சுவது ஏன்?

ஊழல் தடுப்பு சட்டத்தின் வரம்புக்குள் பிரதமரும் வருகிறார். அப்படியிருக்கையில் லோக்பால் விசாரணை வளையத்துக்குள்ளும் அவரைக் கொண்டுவருவதுதான் முறை.


அதேநேரத்தில் உயர் நீதிமன்ற , உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கு லோக்பால் விசாரணையிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும். நீதித்துறையிலும் ஊழல் இருக்கத்தான் செய்கிறது. அதைக் கண்காணிப்பதற்கு தேசிய நீதி ஆணையத்தை உருவாக்கலாம்.

வாக்களிக்க எம்.பி.க்களுக்கு பணம் கொடுத்த விவகாரத் தில் 3 பா.ஜ.க எம்.பிக்களை விசாரிப்பதுடன் டில்லி பொலி ஸார் நின்று விடக்கூடாது. சம்பந்தப்பட்ட 19 எம்.பி.க்களையும் அவர் கள் விசாரிக்க வேண்டும். பெற்றோலிய பொருட்கள் உள் ளிட்டவற்றின் விலை உயர்வைக் கட்டுப் படுத்துவதில் மத்திய அரசு தவறிவி ட்டதால் தான் பண வீக்கம் இரட்டை இலக் கத்திலேயே தொடர்ந்து இருந்து வருகிறது. பெற்றோ லிய பொருட் களுக்கு வரி விதிக்கும் முறை யில் அரசு மாற்றம் கொண்டு வரவேண்டியது அவசி யம்.மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜி அரசு பொறுப்பேற்றுக் கொண்டபின் சட்டம் ஒழுங்கு மிகவும் சீர்குலைந்து போய்விட்டது. இந்த இருமாத காலத்தில் இடதுசாரி தொண்டர்கள் 27பேர் கொல்லப்பட்டிருக் கின்றனர். ஊராட்சிப் பிரதிநிதிகள் தங்கள் அலுவலகங்களுக்குள் செல்ல அனுமதி மறுக்கப் படுகிறார்கள் என்றார்.

(ஸ்ரீ-2)

# 2ஜி அலைக்கற்றை விவகாரம்

## ராசாவிடம் விசாரணை நடத்த அனுமதி



இரண்டாம் தலைமுறை தொலைத்தொடர்பு அலைக்கற்றை ஒதுக்கீட்டு மோசடி தொடர்பில் முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசாவிடம் விசாரணை நடத்த வருமான வரித்துறையினருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் இது தொடர்பில் ஏனைய சில நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் விசாரிக் அனுமதிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரையில் இந்த விசாரணைகள் நடைபெறவுள்ளன.

இதேவேளை வருமான வரித் துறையினர் ஆ.ராசாவை விசாரணை செய்வதற்கான அதிகாரம் இல்லை என்று அவரின் சட்டத்தரணி விவாதித்துள்ளார்.

எனினும் வரி வருமான துறையினர் இதனை எதிர்த்ததுடன் இந்த கோரிக்கையை தள்ளுபடி செய்யுமாறும் நீதிமன்றத்திடம் கோரியிருந்தனர். இதனை அடுத்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# தி.மு.க பொதுக்குழு கூட்டத்தை

## அழகிரி புறக்கணிப்பு

(சென்னை)

கோவையில் இடம்பெறவிருக்கும் தி.மு.க பொதுக்குழு கூட்டத்தில் மு.க. ஸ்டாலினுக்கு புதிய பதவி கொடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில் அது குறித்து அதிருப்தி அடைந்துள்ள மத்திய அமைச்சர் மு.க. அழகிரி பொதுக்குழுவில் கலந்து கொள்ள மாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கோவையில் இன்றும் நாளையும் தி.மு. க வின் தலைமைச்செயற்குழு மற்றும் பொதுக் குழு கூட்டங்கள் நடைபெறவிருக்கின்றன. இந்தக் கூட்டம் திருப்பூருக்கு மாறலாம் என்றும் கூறப்படுகிறது.

மேலும் சட்டசபை தேர்தலின் பின்னர் இடம்பெறும் முதல் பொதுக்குழு கூட்டம் இது என்பதால் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் இந்நிகழ்வில் கட்சி சார்ந்த முக்கிய முடிவுகள் பல எடுக்கப்படவுள்ளது.

இந்நிலையில் இந்தக் கூட்டங்களில் மத்திய அமைச்சரும் தென்மண்டல அமைப்புச் செயலாளருமான அழகிரி கலந்து கொள்ளமாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு காரணம் கட்சியின் பொருளாலர் மு.க. ஸ்டாலினுக்கு புதிய பொறுப்புகள் வழங் கப்படவிருப்பதே என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஸ்ரீ-2)

# பாரதச் செய்திகள்

# சமச்சீர் கல்வித் தீர்ப்பை ஏற்பது அரசின் கடமை

## கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)


சமச்சீர் கல்வித்தீர்ப்பை வரவேற்க வேண்டியது தமிழக அரசின் கடமை என்று முன்னாள் முதல்வரும் தி.மு.க தலைவருமான கருணாநிதி கூறினார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

சமச்சீர் கல்வி குறித்த வழக்கை எதிர் வரும் 26 ஆம் திகதி இறுதியாக விசாரிப்பதாக உச்ச நீதிமன்றம் கூறியிருக்கிறது. அப்போது சமச்சீர் கல்விக்குச் சாதகமாக நல்ல தீர்ப்பு வரும் என்று திர்பார்க்கின்றேன். அப்படி வரும் தீர்ப்பை வரவேற்பது தமிழக அரசின் கடமையாகும்.

எதிர்வரும் ஓகஸ்ட் 2 ஆம் திகதிக்குள் சமச்சீர் கல்வித் திட்டப் புத்தகங்களை மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது மகிழ்ச்சியளிக்கிறது.


தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் தி.மு.க.வினரை பயமுறுத்தி எங்கள் கட்சியை பலவீனப்படுத்தும் நோக்கிலான பொய்வாக்குகளைக் கண்டிக்கிறோம். இந்த விவகாரத்தில் கட்சி வித்தியாசம் பார்க்க கூடாது. அ.தி.மு.க. அமைச்சர் அக்ரி கிருஷ்ண மூர்த்தி மீது அவருடைய கட்சி நிர் வாகிகளே மோசடி புகார் கூறியுள்ளனர். இப்படி அ.தி.மு.க வினர் மீது பல பேர் குற்றச் சாட்டுகள் கூறியிருக்கும்போது அவர்களுக் கெல்லாம் பாலாபிஷேகம் செய்து விட்டுத் தி.மு.க. வினரை மட்டும் பயமுறுத்துவது என்ன நியா யம்?



கோவையில் நடைபெறும் பொதுக்குழுவில் சமச்சீர் கல்வி பற்றியும் நில அபகரிப்பு தொடர்பாக தி.மு.க.வினர் மீது போடப்படும் பொய் வழக்குகள் குறித்தும் விவாதிப்போம். தி.மு.க. ஆட்சியில் தியாகராய நகர் போன்ற பகுதிகளில் பல கட்டடங்களுக்கு விதிகளை மீறி சி.எம்.டி.ஏ அனுமதி கொடுத்திருந்தால் அவற்றைச் சட்டப்படி சுட்டிக்காட்டினால் ஏற்றுக்கொள்கிறோம்.

(ஸ்ரீ-2)

# பத்மநாப கோயில் பொக்கிஷத்தை மதிப்பிட நிபுணர் குழு அமைப்பு



(புதுடில்லி)

கேரள மாநிலம் பத்மநாப சுவாமி கோயில் பொக்கிஷங்கள்ள மதிப்பிட 5 பேர் கொண்ட நிபுணர் குழுவை உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் அமைத்தது.

தேசிய அருங்காட்சியகத்தின் பொது இயக்குநர் சி.வி. ஆனந்தபோஸ் தலைமையிலான இந்தக்குழுவில் இந்திய தொல்லியல் அமைப்பு, ரிசர்வ் வங்கி உள்ளிட்டவற்றின் பிரதிநிதிகள் இடம்பெறுவர்.


நீதிபதிகள் ஆர்.வி.ரவீந்திரன், ஏ.கே. பட்நாயக் ஆகியோர் அடங்கிய குழு இதற்கான உத்தரவைப் பிறப்பித்தது. பத்ம நாப சுவாமி கோயில் இரகசிய அறைகளில் இருந்து எடுக்கப்பட்ட நகைகள், சிலைகள் உள்ளிட்டவற்றை வகைப் பிரித்து மதிப்பிடுவது, அவற்றை நீண்டகாலம் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு ஆலோசனை வழங்குவது ஆகிய பணிகளை இந்த நிபுணர் குழு மேற்கொள்ளும்.

கோயிலிலிருந்து பொக்கிஷங்களை எடுக்கும் பணிகளை கண்காணிப்பதற்கு 3 பேர் கொண்ட மற்றொரு குழுவையும் உச்ச நீதிமன்றம் வியாழக்கிழமை நியமித்தது. இந்தக் குழுவில் கேரள உயர் நீதிமன்றம் வியாழக் கிழமை நியமித்து இந்த குழுவில் கேரள உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி எம்.என். கிருஷ்ணன், திருவிதாங்கூர் மன்னர் மார்த் தாண்ட வர்மா, ஓர் அரசுப் பிரதிநிதி ஆகியோர் இடம்பெறுவார்கள்.

இந்தப் பணிகளை மேற்கொள்ளும் போது அதிகாரப்பூர்வமற்ற யாரையும்அந்தப் பகுதியில் அனுமதிக்கக்கூடாது என்றும் நீதி பதிகள் உத்தரவிட்டனர்.

(ஸ்ரீ-2)





வேலணை சரஸ்வதி நூலக கட்ட்டத் திறப்பு விழா கடந்த 20 ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் அம்பாறை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் எம். ரகுமான் ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட நூலகப் புத்தகங்களை மாணவர்களுக்கு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்:- என்.குமார்)*

# அமெரிக்காவிற்குள் சட்டவிரோதமாக பிரவேசித்த இலங்கையர்கள் கைது

(கொழும்பு)

அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக பிரவேசித்தபோது இலங்கையர்கள் ஆறு பேர் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்யப்பட்டனர். இவர்கள் 6 பேரும் நாட்டில் இருந்து விமானம் மூலம் புறப்பட்டு லொஸ் ஏஞ்சல்சில் உள்ள லக்ஸ் விமான நிலையத்தை வந்தடைந்திருந்தனர்.

இவர்களில் மூவர் ஆண்கள். ஏனையோர் ஒரு தாயும் இரு குழந்தைகளும். இவர்கள் விமானத்தின் மலசல கூடத்துக்குள் சென்று கடவுச்சீட்டுக்களை கிழித்துள்ளனர். இதனை அவதானித்த விமான சிப்பந்திகள் இவர்களை கைது செய்தனர்.

அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்பு பேச்சாளர் இத்தகவலை உறுதிப்படுத்தியுள்ளார். குடிவரவு அதிகாரிகளிடம் பெரியவர்கள் கையளிக்கப்பட்டு உள்ளார்கள். சிறுவர்கள் சேவைகள் அதிகாரிகளிடம் குழந்தைகள் கையளிக்கப்பட்டு உள்ளார்கள். (ஸ்ரீ-2)

# பஸ்தரிப்பிடத்திலிருந்து அகற்றப்பட்ட இரும்புவேலி மீள்நிர்மாணம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த முத்துஹெட்டிகமவினால் காலி புதிய பேருந்து தரிப்பிடத்தில் நேற்று முன்தினம் அகற்றப்பட்ட இரும்புவேலியை மீள ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பேருந்து வண்டிகள் நிறுத்தப்படுவதால் ஊழியர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளதாக தென் மாகாண முதலமைச்சர் ஷான் விஜேலால் டி சில்வா தெரிவித்தார்.

இதன் பிரகாரம் அம்பலாங்கொடை மற்றும் ஹிக்கடுவை பஸ்களுக்கான பயணிகள் வரிசைகளை வேறிடங்களுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதாக முதலமைச்சர் கூறினார்.


அம்பலாங்கொடை -ரத்கம பயணிகள் வரிசை தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினை குறித்த சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி தீர்வு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்திருந்த சந்தர்ப்பத்திலேயே பஸ் தரிப்பிடத்தின் இரும்பு வேலி அகற்றப்பட்டுள்ளதாக தென் மாகாண முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த இடத்திலிருந்து அகற்றப்பட்ட இரும்பு வேலியை அதேஇடத்தில் மீள நிறுவுதற்கும் பிரச்சினை ஏற்பட்டிருந்த பயணிகள் வரிசைகளை வேறிடங்களுக்கு மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

(ஸ்ரீ-2)

## யாழ்.போதனா வைத்தியசாலை

# புற்றுநோய் சிகிச்சை நிலையத்திற்கு நிதி சேகரிக்கும் பாதயாத்திரை





(மல்லாவி)

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிறுவர் புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை நிறுவும் நோக்குடனும் ஆண்,பெண் புற்று நோய் சிகிச்சை நிலையத்தை நவீன வசதிகளுடன் தெல்லிப்பழை வைத்தியசாலையில் நிறுவும் நோக்குடனும் நிதி திரட்டும் பாத யாத்திரை ஒன்று நடைபெற்று வருகிறது.

சரிந்த உனம்புவ, நாதன் சிவகணநாதன் ஆகியோரின் தலைமையில் நடைபெற்று வரும் இந்நிகழ்வில்இலங்கை குத்துச் சண்டை வீரர் மஞ்சு வன்னியாராச்சி, இலங்கை மென்பந்து துடுப்பாட்ட வீரர்களான மஹல ஜெயவர்த்தன, டில்சான், டில்கார பெர்னாண்டோ, ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டுள்ளனர்.

கடந்த முதலாம் திகதி தெய்வேந்திர முனையில் அம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்த பாதயாத்திரையானது 21 ஆவது நாளான நேற்று முன்தினம் மாங்குளம் சுகந்த விகாரைக்கு முன்பாக ஒழுங்குபடுத்தப்பட்ட மண்டபத்திற்கு வருகை தந்தனர்.

இதில் மாங்குளம் மகா வித்தியாலயம், கனகராயன் குளம் மகா வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்கள்,அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பொது அமைப்புகளுடைய பிரதிநிதிகள், இராணுவ, பொலிஸ் பொறுப்பதிகாரிகள் என பலநூற்றுக்கணக்கானவர்கள் திரண்டு வரவேற்றனர்.

கொழும்பிலுள்ள பல்வேறு துறை சார்ந்த அமைப்புகளில் பணிபுரியும் 13 அங்கத்தவரைக் கொண்ட இந்த பாதயாத்திரை அணியானது 680 கிலோ மீற்றர் தூரத்தைக் நோக்காகக் கொண்டதாக தமது பயணத்தை தொடங்கி நேற்று 577 கிலோ மீற்றர் தூரத்தை நிறைவு செய்து காலை 8.45 மணிக்கு வந்தடைந்தனர்.

நேற்று முன்தினம் மாங்குளத்தில் தரித்து நின்று மீண்டும் நேற்று காலை கிளிநொச்சி நகரப் பகுதியை வந்தடைந்தனர். இன்று 5.30 மணிக்கு யாழ்ப்பாணத்தை நோக்கி நகரவுள்ளனர்.

அதனையடுத்து யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி செல்லவுள்ளனர்.

இதுவரை இப்பாதயாத்திரை குழுவுடன் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பகுதி பகுதியாக இணைந்து கலந்துள்ளனர்.

2 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியத்தை திரட்டும் நோக்கை இலக்காகக் கொண்ட இவ் யாத்திரை 21 ஆவது நாளான நேற்று முன்தினம் 1.1 மில்லியன் டொலர்களை சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு யாழ்ப்பாணத்தை வந்தடையவுள்ள பாதயாத்திரை அணியினை பல்வேறு பொது அமைப்புகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், அமைச்சர்கள், இவர்களோடு மென்பந்தாட்ட துடுப்பாட்ட வீரர்களான முத்தையா முரளிதரன், குமார் சங்கங்கார, அஞ்சலோ மற்றீஸ் ஆகியோர் வரவேற்கவுள்ளனர்.

(ஸ்ரீ-4-15)

## ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலைய

# வளாகத்தில் குண்டொன்று மீட்பு

(கொழும்பு)

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலைய வளாகத்தில் இருந்து 15.3 கிலோ கிராம் எடை கொண்ட குண்டொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலைய வளாகத்தில் பெக்கோ இயந்திரம் மூலம் செப்பனிடும் பணிகள் மேற்கொள்ளப்படிருந்த போது அந்த குண்டு கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடக பிரிவு குறிப்பிடுகின்றது.

நேற்று முன்தினம் மாலை கண்டுபிடிக்கப்பட்ட இந்த குண்டு முல்லைத்தீவு இராணுவ முகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியவர் கைதானார்

(கொழும்பு)

அநுராதபுரம் மத்திய மகா வித்தியாலயத்திற்கு அருகில் சந்தேகத்திற்கிடமான நடமாடிய பொலிஸ் விசேட அதிரடிப்படையின் உதவி இன்ஸ்பெக்டர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிடைக்கப்பெற்ற தகவலொன்றுக்கு அமைய சந்தேகத்தின் பேரில் இவர் கைது செய்யப்பட்டதாக வடமத்திய மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ஜெயந்த கமகே குறிப்பிட்டார்.

கைதான பொலிஸ் உதவி இன்ஸ்பெக்டர் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)


பிறந்தநாள் வாழ்த்து



18/1, சிவகுருநாதர் வீதி, நீராவியடியில் வசிக்கும்

திரு.திருமதி சண்முகானந்தன் சுகிர்தமலர்



தம்பதியர் தமது பிறந்த தினத்தை இன்று 23.07.2011 சனிக்கிழமை பரந்தனில் உள்ள தமது இல்லத்தில் வெகுவிமர்சையாக கொண்டாடுகின்றார்கள். இவர்களை தோப்பு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையாரின் துணைகொண்டு சகல பேறுகளும் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழவேண்டும் என்று மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:-

உ.கஜலக்ஷன், உ.திலக்ஷன் (பேரப்பிள்ளைகள்)

(5526)

சமய அனுஷ்டானத்திற்கு இன்றியமை யாது வேண்டப்படுவது மனிதனிடம் அன்பும், மரியாதையும் செய்தலே. –அனடோல் பிராகன்ஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## நல்லூர்க் கந்தப் பெருமானின் மகோற்சவம் சிறப்புற...

நல்லூர்க் கந்தப் பெருமானின் மகோற்சவம் எதிர்வரும் 4ஆந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தமிழ் மக்களின் வரலாற்றுப் பெருமைக்குரிய நல்லூர்க் கந்தப் பெருமானின் திருவிழா என்பது சைவத் தமிழ் மக்களின் பக்தி உணர்வையும், வழிபாட்டுக் கோலங்களையும் வெளிப்படுத்துவதாகும்.

இலட்சோப இலட்ச மக்கள் ஒன்று கூடக் கூடிய நல்லூர் மகோற்சவம் சிறப்பாக – பக்தி பூர்வமாக– இறை உணர்வுடையதாக நடந்தேறுவதற்கு பலரின் ஒத்துழைப்பும், பங்களிப்பும் அவசியம் என்பது மறுக்க முடியாத உண்மை.

இதில் ஆலயத்திற்கு வருகின்ற பக்தர்களினதும் ஆலயச் சூழலில் வர்த்தக நிலையங்களை அமைத்தவர்களினதும் ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானதாகும்.

நல்லூர்க் கந்தப் பெருமானின் மகோற்சவத்திற்கு வருகின்றவர்கள் ஆசாரம் பேணுவது, ஆலயச் சூழலின் புனிதத் தன்மையை சிதைக்காத வகையில் ஆடைகளை அணிவது, தேவையற்ற இடைஞ்சல்களை விளைவிக்காத வகையில் நடந்துகொள்வது என்பன தேவையானவையாகும்.

இதனைச் செய்வதற்கு நல்லூர்ச் சூழலில் இடம்பெறும் தெய்வீகப் பேருரைகள், இசை வேள்விகளை செவிநுகர் கனியாக ஏற்பது உகந்த வழியாக இருக்கும்.

இதற்கு மேலாக நல்லூர்ச் சூழலில் வர்த்தக நிலையங்களை நடத்துவோர், தனித்து வர்த்தகம் என்ற சிந்தனையுடன் மட்டும் செயற்படாமல் ஆலயச் சூழல் என்பதை உணர்ந்து கொண்டு, ஆலயச் சூழலின் புனிதத் தன்மைக்கு ஊறு விளைக்காத வகையில், வர்த்தகச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

இன்றைய யாழ்ப்பாணம் முழுவதும் வியாபார நிலையங்களை அமைக்கும் ஒரு புதுவகையான முயற்சி முடுக்கிவிடப்பட்டிருக்கும் நிலையில்– தென் பகுதியிலிருந்து ஏகப்பட்ட சிறு வர்த்தக முயற்சியாளர்கள் படை எடுத்திருக்கும் நிலையில், வீதிகளை ஆக்கிரமிக்கும் வகையில், நல்லூர் முருகன் ஆலயத்திற்கு வந்து செல்கின்ற அடியார்களுக்கு இடையூறு விளைவிக்கக் கூடியவாறு பொருட்களை வீதியில் கொட்டி விற்பனை செய்வதை முற்றாகத் தவிர்த்துக் கொள்வதும் மிகவும் முக்கிய விடயமாகும்.

இதற்கு மேலாக வாகனத் தரிப்பிடங்கள், அவற்றின் எல்லைப்படுத்தல்கள் தொடர்பிலும் மற்றும் நல்லூர்க் கந்தப்பெருமானின் ஆலயச் சூழல் முழுவதற்கும் மின் ஒளிபரப்பும் ஏற்பாடுகளும் செய்யப்படுவது, மகோற்சவம் சிறப்பாகவும், பக்தி பூர்வமாகவும் நடந்தேறுவதற்கு உதவும்.

# எரிபொருள் விலைகளை சி.பி.சி. அதிகரிக்காது

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த



(கொழும்பு)

எரிபொருளின் விலையை அதிகரிக்குமாறு லங்கா இந்தியன் ஓயில் கம்பனி (எல்.ஐ.ஓ.சி) தொடர்ச்சியாக கோரி வருகின்ற போதிலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சி.பி.சி) எரிபொருள் விலையை அதிகரிக்க மாட்டாது என பெற்றோலிய வள அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த கூறியுள்ளார்.

எரிபொருள் விலை உயர்வை தன்னால் சமாளித்துக்கொள்ள முடிந்தால் எல்.ஐ.ஓ.சி விலைகளை அதி கரித்துக் கொள்ளலாம். அது அவர் கள் தீர்மானம் மேற்கொள்ள வேண்டிய விடயம். ஆனால் சி.பி.சி. விலை களை அதிகரிக்க மாட்டாது என அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்தார்.

விலைகளை அதிகரிக்கும் நிலை யில் சி.பி.சி. இல்லை என அவர் கூறினார். சி.பி.சி. இறுதியாக கடந்த ஏப்பிரல் மாதம் எரிபொருள் விலைகளை அதிகரித்திருந்தது. எல்.ஐ. ஓ.சி. நிறுவனம் கடந்த மார்ச் மாதம் விலைகளை அதிகரித்தது.

அதேவேளை எல்.ஐ.ஓ.சி. நிறுவனம் அதிக நஷ்டத்திற்குள்ளாகி வருவதால் எரிபொருள் விலைகளை அதிகரிக்க வேண்டியுள்ளதாக அந் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சுரேஷ்குமார் தெரிவித்தார்.

எனினும் சந்தைப் போட்டியை சமாளிப்பதற்காக சி.பி.சி. எரிபொருள் விலைகளுக்கு ஏற்பவே தாமும் விலைகளைப் பேணுவதாக அவர் கூறினார். (ந)

## கொழும்பில் புதிய வீதி ஒழுங்கு

கொழும்பு காலி வீதியில் பம்பலப்பிட்டி முதல் இன்றைய தினம் காலை 6 மணியிலிருந்து நிரந்தர போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கமைய டிக்மன் வீதியிலிருந்து கொழும்பு நோக்கிய வீதி ஒரு வழிப் பாதையாகச் செயற்படும். அதேநேரம் டுப்பிளிக்கேசன் வீதியில் புள்ளஸ் வீதி மற்றும் டிக்மன் வீதிகளுக்கும் இடையிலான பாதை காலியை நோக்கிய திசையில் ஒரு வழிப் பாதையாகச் செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## வாக்களிப்பில் அடையாளத்தை உறுதிப்படுத்துவது கட்டாயம்

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

வாக்களிப்புக்காக அங்கீரிக்கப் பட்ட அடையாள ஆவணமொன்றை வாக்குச்சாடிவடிக்கு எடுத்து செல்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசபிரிய தெரிவித்துள்ளார்.

வாக்காளர் அட்டையுடன் செல்லுபடியாகும் ஆவணமொன்றை சமர்ப்பித்தல் அவசியமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய அடையாள அட்டை ,கடவுச்சீட்டு ,சாரதி அனுமதிப்பத்திரம், அரச சேவை ஓய்வூதிய அடையாள அட்டை,மதகுருமாருக்கான அடையாள அட்டை அல்லது தேர்தல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள ஆவணங்களில் ஏதெனும் ஒன்றை சமர்ப்பிக்க முடியும் என அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் அங்கவீனமுற்ற மற்றும் விழிப்புலனற்ற வாக்காளர்கள் தமக்கு உதவியாக ஒருவரை வாக்குச் சாவடிக்கு அழைத்து செல்ல முடியும் என்று குறிப்பிட்ட அவர் இதற்காக கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்படும் விண்ணப்படிவத்தை நிரப்பி அரச வைத்தியர் ஒருவரினால் அது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (ஸ்ரீ-2)

## கண்டி ரயில் நிலையத்தில் தீ இரண்டு பெட்டிகள் சேதம்

(கண்டி)

கண்டி ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயில் ஒன்றில் நேற்று பிற்பகல் ஏற்பட்ட தீயினால் அதன் இரண்டு பெட்டிக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்தத் தீ விபத்திற்கான கார ணம் இதுவரையில் கண்டறியப்பட வில்லை என ரயில் நிலையப் பொறுப்பதிகாரி குறிப்பிட்டார்.

ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயில் ஒன்றில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் தீ பரவியுள்ளது.

நாவலப்பிட்டியிலிருந்து நேற்று முற்பகல் கண்டி ரயில் நிலையத் திற்கு வருகைதந்த குறித்த ரயில் மாலை 6.30 க்கு பொல்காவல நோக்கிப் புறப்படவிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கண்டி தீயணைப்புப் பிரிவுப் பொலிஸார் மற்றும் ரயில் நிலைய ஊழியர்களும் இணைந்து தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர்.

தீயினால் இரண்டு ரயில் பெட்டிகளுக்கு அதிகளவு சேதம் ஏற்பட்டுள்ளதோடு மேலும் இரண்டு ரயில் பெட்டிகளுக்கு சிறிதளவு சேதம் ஏற்பட்டுள்ளது.

தீ ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் ரயிலுக்குள் பயணிகள் எவரும் இருக்க வில்லை என ரயில் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ந)

## திறந்த பல்கலைக்கழக அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் இன்று சனிக்கிழமை நடைபெற விருந்த அனைத்து நாட் பாடசாலை விரிவுரைகளும் அன்றையதினம் நடை பெறவுள்ள உள்ளூராட்சி அதிகாரசபைகளின் தேர்தல்களின் நிமித்தம் நடை பெற மாட்டாது.

இதற்கான நாட்பாடசாலைகள் பிறிதொரு நாளில் நடைபெறுமென யாழ். பிராந்திய நிலையத்தினது இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### கொடுப்பவனாக இருங்கள்



பக்தி,தியானம்,ஒழுக்கம் மூன்றாலும் ஒருவன் தெய்வீக ஞானத்தை அடைய முடியும்.வாய்மை என்னும் அடித்தளத்தின் மீது இப்பண்புகள் அமையும் போது கடவுளை ஒருவன் உறுதியாக அடைந்து விடுவான்.


உலக வாழ்வு நிரந்தரமானது என்னும் அறியாமை அகன்று விட்டால் பாவம் விலகி விடும். பாவம் நீங்கினால் ஆசை, சுயநலம் மற்றும் அனைத்து துயரங்களும் நம்மை விட்டு காணாமல் போகும்.

எப்போதும் கொடுப்பவனாக இருக்க பழகுங்கள்.அன்பு ,உதவி, நல்லெண்ணம்,கருணை இவற்றை பிறருக்கு கொடுத்து மகிழுங்கள். பதிலுக்கு பிறரிடமிருந்து எதையும் எதிர்பாராதீர்கள். இறைவன் எப்படி வாரி வழங்குகிறானோ அதுபோல நீங்களும் கொடுத்து வாழுங்கள்.

மனித வாழ்வில் கடமைகள் துரத்துவதும் வருத்துவதும் உண்மையே .வாழ்வில் சுகங்களும் தேவை என்பதை மறுப் பதற்கில்லை. ஏற்ற குறிக்கோள் மறக்காமல் இருளிலும் ஞான ஒளியை ஏந்திக் கொண்டு முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம் வந்தே தீரும்.

# நாட்டின் விளையாட்டுத் துறை அரசியல் மயமாக்கப்பட்டுள்ளது

## அர்ஜுன ரணதுங்க எம்.பி.குற்றச்சாட்டு



(கொழும்பு)

இன்று கிரிக்கெட் உட்பட தேசிய விளையாட்டுத்துறையின் நிர்வாகம் போலி வைத்தியர்களிடமும் கெசினோ சூதாட்டக்காரர்களிடமும் சிக்கிக் கொண்டுள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவருமான அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

யுத்தத்தை வெற்றி கொண்ட போதிலும் ஊழல் மோசடிகளில் இருந்து நாட்டை மீட்டெடுக்க முடியாதுள்ளது. 2005 ஆம் ஆண்டிற்கு பின்னர் அரசியல் மயமாகுதல் மற்றும் மோசடிகள் தீவிரமடைந்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

விளையாட்டுத் துறையை மோசடிகளில் இருந்து இடைக்கால நிர்வாக சபை மாபியாக்களிடமிருந்தும் பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் கையெழுத்துப் போராட்டத்தை நேற்று முன்தினம் சோசலிஷ இளைஞர் சங்கம் கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக ஆரம்பித்தது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அர்ஜுனரணதுங்க எம்.பி.மேற்கண்டவாறு கூறினார்.

இவர் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கையில் இன்று விளையாட்டுத் துறை படுமோசமான முறையில் அரசியல் மயமாக்கப்பட்டுள்ளது. கடந்த 2005 ஆம் ஆண்டிற்கு பின்னர் இந்நிலை மிகவும் தீவிரமடைந்தது. இதனால் உள்ளூராட்சி தேசிய விளையாட்டுக்களும் வீரர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமரான பின்னர் நாடு அடைந்த விளையாட்டுத்துறை சார்ந்த வெற்றிகளினாலேயே இலங்கைக்கு சர்வதேசத்தில் அடையாளம் கிடைத்தது.

குறிப்பாக கிரிக்கெட்டில் இலங்கை அடைந்த தனிப்பட்ட வெற்றிகள் சர்வதேசத்தில் நாட்டின் கௌரவத்தை நிலைநாட்டியுள்ளன. ஆனால் இன்று தேசிய அணியின் வீரர்கள் ஊக்க மருந்து பாவனையில் சிக்கிக் கொண்டுள்ளனர்.

அதுமட்டுமன்றி உள்நாட்டு கிரிக்கெட் இடைக்கால நிர்வாகசபையின் கடந்த உலகக் கிண்ணத்தின் போதான மோசடிகள் சர்வதேச மட்டத்தில் பேசப்படுகின்றன. தற்போதைய அரசின் தலையீடும் மோசடிக்காரர்களிடமும் போலி வைத்தியர்களிடமும் தேசிய விளையாட்டுத்துறையின் நிர்வாகத்தை கையளித்துள்ளமையும் இதற்கான காரணமாகும். மூன்று மைதானங்களைத் திருத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட நிதியில் புதிய 3 மைதானங்களையே அமைத்திருக்கலாம்.

கடந்த உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளின் மோசடிகள் உண்மையான செலவு மற்றும் வருவாய் தொடர்பான அறிக்கை அரசிடம் உள்ளது.

ஆனால் குற்றவாளிகளை பாதுகாப்பதற்காக அவ் அறிக்கைகளை வெளியிடாது அரசாங்கம் உள்ளது எனக் கூறினார்.(ஸ்ரீ-2)

## விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த வண்ணார்பண்ணை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை குமாரசுவாமி வீதி கிராம சேவையாளர் அலுவலகத்திலும் காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை ஆத்தி சூடி சனசமூக நிலையத்திலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி ஊசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# தேர்தல் சட்டமீறல் குறித்த முறைப்பாடுகளை பொலிஸார் உரியமுறையில் விசாரிப்பதில்லை



## ரணில் அதிருப்தி

(கொழும்பு)

தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பிலான முறைப்பாடுகளை பொலிஸார் உரிய முறையில் விசாரணை செய்வதில்லை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க அதிருப்தி வெளியிட்டுள்ளார்.கடந்த சில நாட்களாக இடம்பெற்ற சம்பவங்களை அவதானிக்கும் போது இந்த நிலைமை புலனாவதாக குறிப்பிட்டுள்ளார்.

அரச சொத்து துஷ்பிரயோகம் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் நாள்தோறும் முறைப்பாடு செய்யப்படுவதாக தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த முறைப்பாடுகள் தொடர்பில் பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதன்முறையாக தேர்தல் நடவடிக்கையில் இராணுவத்தினரும் தொடர்புபட்டிருப்பதாகச் குற்றம் சுமத்தியுள்ளார்.

தேர்தல் வன்முறைகளைத் தடுப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை இந்தக் குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் தேர்தல்கள் சுயாதீனமான முறையில் நடத்தப்படும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.(ஸ்ரீ-2)

# பொலிஸாரை ஊக்குவிக்கும் பரிசு திட்டத்திற்கு 18 கோடி ரூபா செலவு

## பாதுகாப்பு அமைச்சு தகவல்

நேர்மையான செயற்றின் மிக்க பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் பிரஜைகளை ஊக்குவிப்பதற்கென கடந்த 2005 முதல் 2011 ஆம் ஆண்டு காலம் வரையில் 18 கோடியே 72 இலட்சத்து 70 ஆயிரத்து 628 ரூபா பரிசுத்தொகையாக வழங்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று முன்தினம் சபையில் அறிவித்தது.

நாடாளுமன்றில் கடந்த புதன்கிழமை ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி.தயாசிறி ஜயசேகரவினால் எழுப்பப்பட்டிருந்த கேள்விக்கு பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த பதில் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த பகுதியிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

செயற்றிறன் மிக்கதான பொலிஸ் உத்தியோகத்தர்களையும் சிவில் பிரஜைகளையும் ஊக்குவிக்கும் வகையில் 2005 முதல் பணப்பரிசில்கள் வழங்கப்பட்டுகின்றன.

அந்த வகையில் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டில் இவ்வாறு ஊக்குவிப்பு பணப் பரிசுத் தொகையாக 50 இலட்சத்து 65 ஆயிரம் ரூபா பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் 2006 ஆம் ஆண்டில் 65 இலட்சத்து 30 ஆயிரத்து 582 ரூபாவும் 2007 இல் 376 இலட்சத்து 46 ஆயிரத்து 275 ரூபாவும் 2008 இல் 637 இலட்சத்து 20 ஆயிரத்து 271 ரூபாவும் 2009 ஆம் ஆண்டு 376 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாவும் 2010 இல் 284 இலட்சத்து 5 ஆயிரத்து 500 ரூபாவும் 2011 இல் 82 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாவும் என 18 கோடியே 72 இலட்சத்து 70 ஆயிரத்து 628 ரூபா பகிர்ந்தளிக்கப்பட்டது.

மேலும் ஆயிரத்து 185 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் 65 சிவில் பிரஜைகளுக்கும் எதிர்காலத்தில் மேற்படி ஊக்குவிப்பு பணப்பரிசுகள் வழங்கப்பட்ட இருக்கின்றன. (ஸ்ரீ-2)

# அறிவியல், பொறியியல், கலைத்துறைகளில் சிறந்து விளங்குவோருக்கு புதிய விசா திட்டம்

## பிரிட்டன் அரசு அறிவிப்பு

(லண்டன்)

அறிவியல், பொறியியல், கலை போன்ற துறைகளில் சிறந்து விளங்கும் இந்தியர்களை கவர்ந்திழுப்பதற்காக புதிய விசா திட்டத்தை பிரிட்டன் அறிவித்துள்ளது. பிரிட்டன் அரசுத் தரப்பில் கூறப்பட்டுள்ளதாவது,

இந்தியா மற்றும் ஐரோப்பிய யூனியன் சாராத நாடுகளில் இருந்து அறிவியல், பொறியியல், கலை ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் நபர்களை பிரிட்டனில் பணியமர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக புதிய விசா திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆயிரம் பேருக்கு இந்த விசா வழங்கப்படவுள்ளது. வரும் ஓகஸ்ட் 9 முதல் இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கவுள்ளன.

எதிர்வரும் ஓகஸ்ட்டில் இருந்து நவம்பர் வரை 500 பேரும் டிசம்பரில் இருந்து அடுத்தாண்டு மார்ச் வரை 500 பேரும் பணியமர்த்தப்படவுள்ளனர்.

அடுத்தாண்டு மார்ச் இறுதியில் பணியிடங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது அல்லது குறைப்பது பற்றி ஆய்வு செய்யப்படும்.

குடியேற்ற நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக நான்கு அமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்று கூறப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)









கொக்குவில் இந்துக் கல்லூரியின் கனிஷ்ட இடைநிலைப் பிரிவுக்கான வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த பிரபல சட்டத்தரணியும் கல்லூரியின் பழைய மாணவியுமாகிய செல்வி.ஞானலோஜினி சிவஞானம், கல்லூரியின் அதிபர் அ.அகிலதாஸ், பிரதி அதிபர் திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை ஆகியோர் மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்படுவதையும் மாணவிகளின் கலை நிகழ்வையும் பிரதம விருந்தினர் வெற்றி பெற்ற மாணவியொருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# இங்கிலாந்து வலுவான ஆரம்பம்



பந்து வீச்சாளராக மாறிய தோனி..

இந்திய அணியுடனான முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து முதல் இன்னிங்சில் நிதானமாக விளையாடி ஓட்டங்களை குவித்து வருகிறது.

முதல் நாள் ஆட்டத்தில் அபாரமாக பந்து வீசிய சகீர்கான் 2 விக்கெட்டை கைப்பற்றி னார். இந்தியா மற்றும் இங்கிலாந்து அணி கள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. டெஸ்ட் வரலாற்றில் இது 2000ஆவது போட்டி என்பதுடன் இந்த இரு அணிகளிடையே நடக்கும் 100ஆவது போட்டி என்பதும் குறிப்பிடத்தக்கது.

மழை காரணமாக ஆடுகளம் ஈரமாக இருந்ததால் போட்டி தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் பந்துவீச முடிவு செய் தது. இங்கிலாந்து தொடக்க வீரர்களாக அணித்தலைவர் ஸ்ரொரஸ், அலஸ்டர் குக் களமிறங்கினர். குக் 12 ஓட்டங்கள் எடுத்து போது சகீர்கானின் துல்லியமான வேகத்தில் வெளி யேறினார். இங்கிலாந்து உணவு இடைவே ளையின்போது 21 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்பிற்கு43 ஓட்டங்கள் எடுத்திருந்தது. பின்னர் தொடர்ந்த ஆட்டத்தில் ஸ்ரொரஸ் 22 ஓட்டங்கள் எடுத்து சகீர்கான் பந்துவீச்சில் இஷாந்த் வசம் பிடி கொடுத்து வெளியேறினார்.

இங்கிலாந்து 62 ஓட்டங்களுக்கு 2 விக் கெட் இழந்து தடுமாறிய நிலையில் டிராட் மற் றும் பீட்டர்சன் ஜோடி 3ஆவது விக்கெட்டுக்கு பொறுப்புடன் விளையாடி ஓட்டங்களை சேர்த் தது. இந்திய வீரர்கள் 2 பிடி மற்றும் ஒரு ரன் அவுட் வாய்ப்பை வீணடித்தனர். நிதானமாக விளையாடிய டிராட் அரைச்சதம் அடித்தார். இங்கிலாந்து 49.2 ஓவரில் 2 விக்கெட் இழப் பிற்கு 127 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் மழையால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

முதல்நாள் ஆட்டத்தில் டிராட் 58, பீற்றர் சன் 22 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர். இந்நிலையில் நேற்று இரண்டாம் நாள் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி தேநீர் இடைவேளை வரை 103.5 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 305 ஓட்டங்களை சேர்த்திருந்தது.

# பயிற்சியாளர் பிளட்சர் சதம்



இந்திய அணியின் பயிற்சியாளர் டங்கன் பிளட்சர், டெஸ்ட் அரங்கில் 100 போட்டிகளுக்கு பயிற்சியாளராக பணியாற்றி புதிய சாதனை படைத்தார்.


இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட்போட்டி, இந்திய அணியின் பயிற்சியாளர் டங்கன் பிளட்சர், பயிற்சியாளராக செயற்படும் 100ஆவது டெஸ்ட் போட்டி. இதன்மூலம் இவர், டெஸ்ட் அரங்கில் 100 போட்டிகளுக்கு பயிற்சியாளராக பணியாற்றிய முதல் பயிற்சியாளர் என்ற புதிய சாதனை படைத்தார்.

கடந்த 1999-ல் இங்கிலாந்து அணியின் முதலாவது வெளிநாட்டு பயிற்சியாளராக காலடி வைத்த இவர், 96 டெஸ்ட் போட்டிகளுக்கு பயிற்சியாளராக செயல்பட்டார். இவரது பயிற்சியில், 2004இல் இங்கி லாந்து அணி தொடர்ந்து 8 டெஸ்டில் வெற்றி பெற்று அசத்தியது.

சமீபத்தில் இவரது பயிற்சியின் கீழ் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டெஸ்ட், ஒருநாள் மற்றும் இருபது-20 தொடரை இந்திய அணி கைப்பற்றியது.1983 உலக கோப்பையில் பிளட்சர் தலைமை யிலான சிம்பாவே அணி, பலம் வாய்ந்த அவுஸ்ரேலியாவை வீழ்த்தி அதிர்ச்சி அளித்தது. இவர் ஒரு டெஸ்ட் போட்டியில் கூட விளையாடியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகத் தொடர் ஹாக்கி டிசம்பர் 15இல் ஆரம்பம்

(சென்னை)



முதலாவது உலக தொடர் ஹொக்கி போட்டி டிசம்பர் 15ம் திகதி தொடங்கும் என அறி விக்கப்பட்டுள்ளது. ஐ.பி.எல். இருபது-20 போட்டி போல முதல் முறையாக நடக்க உள்ள உலகத்தொடர் ஹொக்கி போட்டியில் மொத்தம் 8 அணிகள் பங்கேற்க உள்ளன. சர்வதேச வீரர்கள் 176 பேர் இந்த அணிகளுக்காக ஒப் பந்தம் செய்யப்பட உள்ளனர். இந்தியாவின் 8 முக்கிய நகரங்களில் போட்டிகள் நடைபெறும்.

டிசம்பர் 15ம் திகதி தொடங்கி 2012, ஜுன் 22ஆம் திகதி வரையிலான இந்த தொடரில் மொத்தம் 61 ஆட்டங்கள் நடைபெற உள்ளன. சென்னை, டில்லி, சண்டிகர், மும்பை, ஐதரா பாத், பெங்களூர் ஆகிய 6 நகரங்கள் உறுதி செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய 2 நகரங்கள் பின்னர் தேர்வு செய்யப்படும்.

இந்த தொடரில் பங்கேற்கும் 8 அணிக ளுக்கான அணித்தலைவர்கள் விபரம்:

சர்தார சிங், ஏட்ரியன் டிசோசா, அர்ஜுன் ஹாலப்பா, பிரப்ஜோத் சிங் (இந்தியா), பிரெண்ட் லிவர் மோர் (ஆஸி), ரேஹான் பட் (பாக்), ரோட்ரிகோ கர்சா (ஸ்பெயின்), லூகாஸ் விலா (ஆர்ஜென்டினா).

# பல்கலைகளுக்கிடையிலான சதுரங்க சுற்றுப்போட்டி



இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்க ளுக்கிடையிலான சதுரங்க சுற்றுப்போட்டி தென்கிழக்கு பல்கலைக்கழக தகவல் தொழில் நுட்பக் கூடத்தில். நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞானபீட பதில் பீடாதிபதியும் விளை யாட்டு ஆலோசனை பேரவையின் பணிப் பாளருமான கலாநிதி ஏ.ஜெளபரின் தலை மையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழக பதிவாளர் எச்.அப்துல் சத்தார் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக விளை யாட்டு மற்றும் உடற்கல்வித்துறை பொறுப் பாளர் எம்.எல்.ஏ. தாஹிரின் ஏற்பாட்டில் அனைத்து பல்கலைக்கழகத்தின் பீடாதிபதி கள், பயிற்றுவிப்பாளர்கள், பொறுப்பாளர்கள் அகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம், ஊவா வெல்லஸ்ஸ, வயம்ப, பேராதனை,கொழும்பு, களனி, சப்ரகமுவ, ரஜ ரட்ட, மொரட்டுவ, ஸ்ரீஜயவர்த்தனபுர மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழகங்களை சேர்ந்த சதுரங்க விளையாட்டு வீர, வீராங்கனைகள் இச்சுற்றுப் போட்டியில் கலந்து கொண்டனர்.

இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நாளை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது.

# அமெரிக்க ஓபனில் நுழைய செரீனாவுக்கு சிறப்பு அனுமதி



கிராண்டஸ்லாம் போட்டிகளில் ஒன் றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி அடுத்த மாதம் 29ஆம் திகதி நியூயோர்க்கில் ஆரம்பமாகிறது.

இந்தப் போட்டியில் மகளிர் ஒற்றை யரில் மொத்தம் 128 பேர் பங்கேற் பார்கள். இதில் தரவரிசையில் முதல் 105 இடம் வகிப்பவர்கள் மட்டுமே நேரடியாக பங்கேற்க முடியும். மற்றவர்கள் தகுதிச் சுற்று மற்றும் வைல் காட்டு மூலம் வாய்ப்பு பெறுவார்கள்.

13 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவரான முன்னாள் முதன் நிலை வீராங்கனை அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், தற்போது தர வரிசையில் 172ஆவது இடத்தில் உள் ளார். இதனால் அவர் அமெரிக்க ஓப னில் நேரடியாக பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டது. அவர் காயம் மற்றும் உடல்நலக் குறைவு காரணமாக ஓராண்டுகளாக எந்த போட்டிகளிலும் பங்கேற்காததால் அவருக்கு தரவரிசையில் இவ்வளவு பெரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது. சமீபத்தில் டென்னிசுக்கு திரும் பிய அவர் விம்பிள்டன் போட்டியில் சோபிக்க வில்லை.

காயத்தால் விலகி இருக்கும் போது தரவரிசை யில் காயத்தை காரணம் காட்டி சிறப்பு அனுமதியுடன் ஒரு கிராண்ட்ஸ்லாம் உட்பட 8 போட்டிகளில் நேரடியாக பங்கேற்க முடியும் இந்த சிறப்பு வாய்ப்பை பயன்படுத்தி செரீனா வில்லியம்ஸ் அமெரிக்க ஓபனில் நேரடியாக பிரதான சுற்றில் விளையாட இருக்கிறார்.

# காங்கேசனில் நடந்த கூடைப்பந்தாட்டம் யாழ். மாவட்ட பெண்கள் அணி வெற்றி

காங்கேசன்துறையில் இலங்கை கடற் படை அணிக்கும் யாழ். மாவட்ட பெண்கள் அணிக்கும் இடையில் நேற்று நடைபெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட பெண்கள் அணி வெற்றி பெற்றுள்ளது.

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுப் பிற்பகல் 5 மணிக்கு காங்கேசன்துறையில் இடம்பெற்ற மேற்படி போட்டியில், இலங்கை கடற்படை அணி 15 புள்ளிகளையும், யாழ். மாவட்ட கூடைப் பந் தாட்ட பெண்கள் அணி 46 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டது.

இதில் யாழ்.மாவட்ட கூடைப் பந்தாட்ட பெண்கள் அணி வெற்றி பெற்றது. இவ் அணியின் பயிற்சியாளராக எஸ்.ரமணன் செயற்பட்டார்.

காங்கேசன்துறையில் 30 வருட காலத் துக்குப் பின்னர் மீண்டும் கூடைப் பந்தாட்டப் போட்டியொன்று நடைபெற்றமை குறிப் பிடத்தக்கது.

# நோர்வேத் தலைநகரில் பாரிய குண்டு வெடிப்புகள்

(ஒஸ்லோ)

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நேற்று வெள்ளிக்கிழமை இரு பாரிய குண்டுவெடிப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

இதனால் 02 பேர் பலியானதுடன் பலர் காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் அலுவலகம் உட்பட அரச கட்டிடங்கள் பல அமைந்துள்ள பகுதியில் இந்த குண்டுவெடிப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

இச்சம்பவத்தால் பிரதமர் அலுவலகம் உட்பட பல கட்டிடங்கள் சேதமடைந்துள்ளன.

எனினும் நோர்வே பிரதமர் ஜேன்ஸ் ஸ்டோல் டென்பர்க்கிற்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வேயில் அதிகம் விற்பனையாகும் டெப்லொயட் பத்திரிகையான எஸ்.வியின் தலைமையகம் அமைந்துள்ள 17 மாடி கட்டிடமொன்று இந்த குண்டுவெடிப்பினால் தீப்பற்றியது. இதில் குறைந்தபட்சம் 15 பேர் காயமடைந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குண்டு வெடிப்புக்கு முன்பாக கார் ஒன்று கட்டிடத்தை நோக்கி விரைந்துகொண்டிருப்பதாக தகவல் கிடைத்ததாக நோர்வே பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இப்போது அந்த கார் அங்கு இல்லை. அதிக விசாரணைகள் எஞ்சியிருக்கின்றன எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சந்தேகத்திற்கிடமான பொதியொன்று காரணமாக ரி.வி 2 எனும் தொலைக்காட்சி நிலையத்திலிருந்து ஊழியர்கள் வெளியேற்றப்படடு அக்கட்டிடம் சீல் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ந)










நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நிகழ்ந்த பாரிய குண்டு வெடிப்பில் சேதமடைந்த கட்டடங்கள்...

## அமெரிக்காவின் தீர்...

தொடர்பாக பொறுப்புடமையை வெளிப்படுத்தத் தவறினால் இலங்கைக்கு அமெரிக்க அரசாங்கத்தின் உதவிகள் தடைசெய்யப்பட வேண்டும் என அமெரிக்க நாடாளுமன்ற வெளிவிவகார குழுவால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அரசாங்கப் பேச்சாளரான அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவிடம் கருத்துக் கேட்டபோது, அமெரிக்கா இத்தகைய தடையை கொண்டுவந்தால், அது அவர்கள் போதிக்கும் ஜனநாயகக் கொள்கைகளுக்கு முரணானது.

அதன்பின் பொறுப்புடமை குறித்து ஒரு தலைப் பட்சமாக ஆராய வேண்டியிருக்கும் எனவும் பொறுப்புடமை குறித்து போதுமான அளவு உள்ளூர் மன்றங்களில் தீவிரமாக கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். (ந)

## 25 ஆயிரம்...

25ஆயிரம் பொலிஸார், பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேவைஏற்படும்பட்சத்தில் இராணுவத்தினரின் ஒத்துழைப்பும் தேர்தல் பாதுகாப்புக்காக பெற்றுக்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந)

## உள்ளூரா...

நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை தேர்தல் முடிபுகள் இன்று இரவு 10.00 மணிக்குப் பின்னர் வெளிவரத் தொடங்கும் என தெரிவிக்கப்படுகிறது. (ந)

## இலங்கை இராணுவத்...

சிறுத்தைகள் ஆகியவற்றின் தொண்டர்கள் 500 பேர் நேற்று மாலை 4.00 மணியளவில் மறியல் செய்யப் புறப்பட்டனர். இதனையடுத்து பொலிஸார் குவிக்கப்பட்டனர். இதனால் அங்கு பரபரப்பும் பதற்றமும் நிலவியது. காவற் துறையினரின் தடைகமையம் முன்பு சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனை அடுத்துப் பொலிஸா ருக்கும் உணர்வாளர்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. பெரியார் தி.க., நாம் தமிழர் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் ஆகியவற்றைச் சேர்ந்த நூற்றுக்கும்



ளைத் தாண்டி உணர்வாளர்கள் குன்னூர் வெலிங்டன் இராணுவ அதிகமானோர் கைதாகியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. (ந)

## தமிழர்கள் மறுவாழ்வு பெறு...

நடைபெற்றன என்றும் முதல்வர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழக முதல்வர் உடனான சந்திப்பை முடித்துக்கொண்டு தூதுவர் வெளியே வந்தபோது அவ்வரைச் சூழ்ந்து கொண்ட பத்திரிகையாளர்கள் எதற்காக அந்த திடீர் சந்திப்பு என்று கேட்டனர்.

அதற்குப் பதிலளித்த தூதர் காரியவசம், ஜெயலலிதா தேர்தலில் வெற்றி பெற்று முதல்வராக பொறுப்பேற்றதற்காக அவருக்கு வாழ்த்து தெரிவிக்க வந்துள்ளேன்.

முதல்வருக்கு தனது வாழ்த்துக்களை தெரிவிக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ என்னைப் பணித்துள்ளார் என்று தெரிவித்தார்.

ஜெயலலிதா தேர்தலில் வெற்றி பெற்று முதல்வராக பெறுப்பேற்றது மே மாதம் நடுப்பகுதியில்! தூதர் காரியவசம் வாழ்த்து தெரிவிக்க வந்திருப்பது யூலைமாதம் 21 ஆம் திகதி! என்ற கணக்கை செய்தியாளர்கள் போட்டுப்பார்த்தனராம். (ந)

## இலங்கைக்கான உதவி...

இலங்கைக்கான மனிதாபிமான நடவடிக்கைகள், கண்ணிவெடிகளை அகற்றுதல் மற்றும் ஜனநாயகத்தை ஸ்திரப்படுத்துதல் போன்றவற்றுக்கான உதவிகள் தவிர்ந்த இலங்கைக்கு வழங்கப்படுகின்ற ஏனைய அனைத்து உதவிகளும் நிறுத்தப்படவேண்டும் என காங்கிரஸின் வெளிவிவகாரக் குழுவின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த காங்கிரஸ் சபை உறுப்பினர் கவாட் பேர்மன் முன்வைத்த இந்தப் பரிந்துரைக்கு அமெரிக்க காங்கிரஸின் வெளிவிவகார குழு அங்கீகாரம் அளித்துள்ளது.

அதேவேளை இலங்கையின் நிலைமைகளைநன்கு அவதானித்து அனுமதி அளிக்கப்பட்ட பின்னரே இவ் உதவிகள் மீண்டும் வழங்கப்படவேண்டும் என அமெரிக்க காங்கிரஸின் வெளிவிவகாரக் குழு முடிவு செய்துள்ளது.

அத்துடன் இலங்கையில் இடம் பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது இரு தரப்பினாலும் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நம்பகமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஊடக சுதந்திரம், அவசர காலச் சட்டத்தை நீக்குதல், போரின்போது காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்களை வெளியிடுதல் ஆகியன குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அமெரிக்கக் காங்கிரஸின் வெளிவிவகார குழு தெரிவித்துள்ளது.

ஆயினும் இத்தீர்மாணம் குறித்து அமெரிக்க செனட் சபைக்கும். பிரதிநிதிகள் சபைக்கும் இடையில் நடைபெறும் விவாதத்துக்குப் பின்னரே இறுதியான முடிபு எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

2010ஆம் ஆண்டில் இலங்கைக்கான உதவிகளை வழங்க அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் 13 மில்லியன் டொலரை கோரியிருந்தது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நம்பகத்தகுந்த சுயாதீனமான விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

எனினும் இக் கோரிக்கையை நிராகரித்துள்ள இலங்கை அரசாங்கம் இத்தகைய விசாரணைக்ளை உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளது. (ந)


கணனி மயப்படுத்தப்பட்ட இலவச வாகனப் பரிசோதனை

(Auto Diagnostic Scanner)

துர்க்கா வாகனத் திருத்தகமும் கொழும்பு My Tooles நிறுவனமும் இணைந்து நாளை ஞாயிற்றுக்கிழமையும், நாளை மறுதினம் திங்கட்கிழமையும் இரு தினங்களில் இல.16 A, சிவன் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள துர்க்கா வாகனத் திருத்தகத்தில் கணனி மயப்படுத்தப்பட்ட இலவச வாகனப் பரிசோதனையினை (Auto Diagnostic Scanner) நடத்தவுள்ளனர்.

இதில் அனைத்து வாகன உரிமையாளர்களையும் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முற்றிலும் இலவசம்

உரிமையாளர்
தங்கராஜா சிறீகாந்(காந்தன்)
T.P.:0779785790

துர்க்கா வாகனத்
திருத்தகம்
இல.16A, சிவன் வீதி,

(553)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.